471

Regd. No. 2569 நாயக மலர்

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

12 JUL 1932

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1351 ரபீஉல் அவ்வல் 1932 ஜூலை மீ | இதழ் 7

உள்ளடக்கம் பக்கம்

1. ஏகத்துவத் தூதர் (ஸல்) ... 289
2. ஸீரத் பிரசங்கம் ... 292
3. எம்பெருமானார் (ஸல்)க்குச் சொந்த மான இலக்ஷணங்கள் ... 303
4. நாயக ஒழுக்கங்கள் ... 307
5. இஸ்லாம் எவ்வாறு பரவிற்று ... 312
6 எம்பெருமானார் (ஸல்) வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் ... 321
7. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப்பற்றி ஜின்களின் சாக்ஷியம் ... 325

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

சந்தா நண்பர்களுக்கு

நம் அரும் மாசிகையின் இரண்டாம் ஆண்டு முடிவடைந்து விட்டபடியால் இதுவரை சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். தவிர நடைபெறும் 1932-ம் வருஷத்திக்குள்ள சந்தாவையும் முன் பணமாக அனுப்பி மாசிகையை அபிவிர்த்திக்குக் கொண்டுவருமாறு கோருகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணுவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானுல் நேயர்களுக்கு 5 அணு வீண்செலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாயிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாகயிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய.

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு, 67, அரப் ஸ்டிரீட், M. M. ஷரீப் இவர்களிடமும்,

பினங் வாசிகள் 119, சோலியா ஸ்டிரீட்,

N. K. முஹம்மது கவ்து சாஹிப், அவர்களிடமும்,

பெட்ரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனுப் K. A. பகீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்டிரீட் சுகாசம் & Co. தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ சுல்த்தான் அஹ்மத் சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் காஸ் ஸ்ட்ரீட்டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்,"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, G.T., மதருஸ்.

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 3	ஹிஜ்ரி 1351 ரபீஉல் அவ்வல்௴ 1932௵ ஜூலை	இதழ் 7

12 JUL 1932

ஏகத்துவத் தூதர் (ஸல்)

உலகின் நானாபாகங்களும் அந்தகாரத்தால் நிறைந்து பற்பல தெய்வங்களைவணங்குவதும் ஏகவல்லமை பொருந்திய இறைவனுக்கு இணைவைப்பதும் ஆண்டவனின் வர்ணிப்புகளில் தகாததைச் சேர்த்துவைப்பதும் மானிடர்களிடையே மலிந்து கிடந்தது. வானம் பூமி நட்சத்திரங்கள் பருவதங்கள் சமுத்திரம் முதலிய யாவற்றையும் சிருஷ்டித்தவனும் ஆக்குபவனும் அழிப்பவனுமாகிய நாயன் ஒருவன்தான் என்னும் ஞானம் உலகத்தில் மிக மிக அரிதாகவே யிருந்தது. இக்கெடுதிகளை அகற்றுவான் வேண்டி பற்பல காலத்தும் பல நபிமார்கள் அனுப்பப்பட்டு அவர்களும் தங்களாலான சேவை புரிந்து வந்தும் ஒரு சில சீர்திருத்தம் ஏற்பட்டு மறுபடியும் அதே அந்தகாரம் சூழ்ந்துவிட்டது.

உலகம் அதுபொழுது எக்காலத்திற்கும், எத்தேசத்திற்கும் பொருத்தமுள்ள ஓர் சீர்திருத்தத்தை எதிர்பார்த்திருந்தது. அதற்காகவேதான் திருவள்ளல் இரசூல் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இத்தரணியின்கண் விஜயஞ்செய்து மானிடர்களை சகலத் துறைகளிலும் சீர்திருத்தம் செய்து முன்னுக்குக் கொண்டுவர தக்க முயற்சிசெய்தார்ச்ள். அக்காலத்து அரப் தேயத்தின் நிலைமை இன்னதென்பதை வாசகர்கள் நன்குணர்வர். உலகின் கண் காணப்பட்ட சகல அனாகரீகங்களும் கெடுதிகளும் அவண் குடிகொண்டிருந்ததெனக் கூறுவது மிகையாகாது. அவர்கள் ஒரு சில அற்ப காரியங்களுக்காக பன்னூறு ஆண்டு போர்ரிபுந்து கொள்வர்; பலதெய்வங்களென்ன? ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு தெய்வங்களை வணங்குவது அவர்களின் முக்கிய சேவையாக யிருந்தது. இற்றைக்கு பலகோடி முஸ்லிம்களின் கிப்லாவாக யிருந்துவரும் பரிசுத்த கஃபாவினுள் 360 விக்கிரஹங்கள் நிலைநிறுத்தப் பெற்றிருந்ததென்றால் மற்ற இடங்களின் நிலைமையைப்பற்றி இயம்பவும் வேண்டுமோ? இவ்வாறு அனாகரீகமும் மௌட்டீகமும் நிறைந்த அத்தேசத்தில் எம்பெருமானார் சற்குணசீலர் (ஸல்.) அவதரித்தார்கள். அந்தகாரமும் அழிந்தொழிய ஆரம்பித்தது. அஞ்சா நெஞ்சம் படைத்த அவ்வரபியர்களின் துர்க்கிர்த்தியங்களை உன்னி உன்னி கவலைக்கடலில் மூழ்குவார்கள். அவர்களை அந்தகாரத்தினின்று மீட்டு கரைசேர்ப்பதற்கு சதா சிந்தனை புரிவார்கள் இந்நிலைமையில் அனாச்சாரங்களையும் குருட்டு நம்பிக்

கைகளையும் அகற்றுவதற்காகவே தம்மைத் தூதராக அனுப்பப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள்.

ஆரம்பத்தில் அரபியர்களுக்கு இஃதொரு ஆச்சரியமாகவே தோன்றிற்று. பல தெய்வக் கொள்கையில் மூழ்கிக்கிடந்த அரபியர்களுக்கு ஏகதெய்வக்கொள்கையின் போதனை மாபெரும் வெறுப்பைக் கொடுத்தது. அதனால் சத்தியத்திற்குத் தலைசாய்க்காமல் திருத்தூதர் (ஸல்.) அவர்களுடன் போர் புரிந்தனர். எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் திருத்தூதை மறுத்தார்கள். கடைசியாக சத்தியமே ஜெயம்பெற்றது அசத்தியம் வீழ்ச்சி அடைந்து விட்டது. முரட்டு சுபாவம் படைத்த அராபியர்களின் இடுக்கண்களுக்கு எம்பெருமானார் (ஸல்.) ஆளாகி சகிக்கமுடியாத துன்பங்களை அடைந்துங்கூட கிஞ்சிற்றேனும் பின்னடையாது, மன சோர்வடையாது சத்தியப் பிரசாரத்தை ஊக்கத்தோடு மென்மேலும் நடத்திக் கொண்டு வந்தார்கள்.

சர்வ சிருஷ்டிகளையும் படைத்த நாயன் ஒரே ஒருவனென்றும் அவன் தன்னிலும் தன் வர்ணிப்புகளிலும் ஒருவனாகவே யிருக்கின்றான் என்றும் சகல மானிடர்களும் அவனையே வணங்கவேண்டுமென்றும் அறிவித்தார்கள். இதன் பயனாய் அவ்வராபியர்களுக்கிடையில் புத்துணர்ச்சி ஏற்பட்டு புதியதோர் மாறுதல் உண்டாய்விட்டது. பாலைவனங்களிலும் வனாந்தரங்களிலும் ஆடு ஒட்டகம் மேய்த்துக்கொண்டிருந்த அவ்வராபியர்கள் தேசத்திற்கும் சிம்மாசனத்திற்கும் அதிபதியாகத் திகழ்ந்தார்கள். சத்திய இஸ்லாத்தை உலகெங்கும் பரத்துவதற்கு முயன்றார்கள்; சகல மானிடர்களுக்கும் முன்மாதிரியாய் விளங்கினார்கள்; எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடைய திருப்போதனைகள் உலக முழுவதிலும் பரவுவதற்கு வேண்டிய சகல சாதனங்களையும் செய்தார்கள். அதனால் நம்மவர்களுங்கூட உலகரெட்சகர் (ஸல்.) அவர்களின் போதனைகளைத் தெரிந்து கொள்வதற்கு சௌகரியமாயிற்று.

எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் போதனைகளும், சீர்திருத்தங்களும் அவர்கள் நடத்திக்காட்டிய நற்குண நல்லொழுக்கங்களும் உலகத்திலுள்ள யாவற்று மானிடர்களும் பின்பற்றி நடப்பதற்குரியனதாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சரித்திரத்தையும் ஹிதோபதேசங்களையும் உலகத்திலுள்ள நானாபக்கங்களிலும் சகல திக்குதிசைகளிலும் மூலைமுடுக்குகளிலும் பிரபலிக்கச் செய்யவேண்டியது முஸ்லிம்களின்மாபெருங் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற மிக மிக தக்க நந்நாள் "யவ்முந்நபீ" என்னும் பெருநாளேயாகும். இம்மேன்மை பொருந்திய தினத்தில் நஞ்சோதரர்கள் அத்திரு நாளை, எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் விபரங்களை எடுத்தோதுவதற்காக ஒதுக்கி வைத்து மாக்ஷிமைதங்கிய மாபெரும் மகாநாடுகளை நடத்தி முஸ்லிம் அல்லாதார்களையும் அதில் கலந்துகொள்ளும்படி செய்து நபிகள் திலகம் சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்களின் திருச்சரிதையை உபதேசிக்க வேண்டும். அன்றைய தினம் இலவசமாய் வினியோகிப்பதற்கென்று தயாரிக்கப் பெற்றுள்ள "ஏகத்துவத்தூதர்" என்னும் நூலை வாங்கி யாவருக்கும் வினியோகிக்கவேண்டும். அவ்வாறு கூட்டப்படும் மகாநாடுகளில் மார்க்க விரோதமான காரியங்களேதுவும் ஏற்படாது காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு செய்வதால் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் திருத்தூதை சகலமானிடர்களுக்கும் எத்திவைத்ததற்குள்ள பிரதிபலன் கிடைக்குமென்பதற்கையமில்லை. ஆகையால் நஞ்சோதரர்கள் இம்மகத்தான கைங்கரியத்தில் ஈடுபட்டு சிறப்புத்தங்கிய அந்நாளைத் தக்க முறையில் கொண்டாடி இகபர நற்சாதனங்களைப் பெறுவார்களாக.

17—7—32 ஞாயிற்றுக் கிழமையை "யவ்முந்நபீ" நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது நம்மனோரின் முக்கியக் கடமையாகும்.

ஸீரத் பிரசங்கம்

அன்புற்ற நேயன்மீர் !

இற்றைய தினத்தில் நாம் இங்கு கூடியிருக்கும் மகாசபையின் நோக்கமானது, தற்கால உலகில் மானிடர்களுக்கு ஒருபடிப்பினையாக இருக்கும் பொருட்டும், நமக்கேற்பட்டிருக்கும் பற்பல சங்கடங்கள் யாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஞாபகப்படுத்துவது கொண்டும், அவர்களது சத்தியத் திருத்தூதில் நோட்டமிடுவது கொண்டும் அகற்றப்பட்டுப்போம் என்பதைக் கருதியும், நபித்துவத்தின் அதிபதியாகிய உலக ரெட்சகர் எம்பிரான் (ஸல்) அவர்களது மகுத்துவம் நிறைந்த புகழ்ச்சிகளையும் கியாதிவாய்ந்த மேன்மைகளையும் அழகு பொருந்திய நற்குணங்களையும் எடுத்தோதுவதற்கே யாம். இஸ்லாத்தின் திருத் தூதர் (ஸல்) அவர்களின் முக்கிய சேவையானது ஆரம்ப முதல் தவ்ஹீதை (ஏகத்துவத்தை)க் கற்றுக் கொடுப்பதாகத்தான் யிருந்தது என்பதை விரோதிகளும் ஒப்புக்கொள்வர். என்றாலும் தவ்ஹீதெனும் அவ்வார்த்தை அல்லாஹ் தஆலாவின் பூர்ண ஏகத்துவத்தை அறிவிக்கக் கூடியதாக யிருக்கிறதென்னும் ஓர் குறிப்பிட்ட கருத்திலேயே உபயோகிக்கப்பட்டு வருவதாகக் கருதப்படுகின்றது. ஆனால் அவ்வார்த்தையின் கருத்தை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தெந்த விதத்தில் வெளியிட்டிருக்கின்றார்க ளென்பதை இங்கு விபரிப்போமாக :—

இப்பிரபஞ்சத்தின்கண் காணப்படும் பற்பல கோலங்களைக்கண்டு வெளிப் பார்வையுடையோர் மிரண்டு ஏகக்கடவுளாகிய அல்லாஹ் தஆலாவை ஒருவனென அறிந்து கொள்ள இயலாது பல தெய்வங்களை ஒப்புக்கொண்டு முஷ்ரிக் களாக ஆய்விடுகின்றனர். அகப்பார்வை யுடையோர்களோவெனில் பற்பல தோற்றங்களை நோட்டமிட்டு அதிலிருந்து ஏகத்துவம் பொருந்திய ஒரே ஆண்டவனைத் தெரிந்துகொண்டு "நான் இவை யாவற்றையும் விட்டு பூ உலகு, விண்ணுலகு யாவற்றையும் சிருஷ்டித்த ஆண்டவன் பக்கல் என்முகத்தைத் திருப்புகின்றேன் ; நான் இணைவைப் பவனல்லன்" என்னும் திருவாக்கியத்தைஓதி ஏகநாயனை ஆண்டவனுக்கே சாஷ்டாங்கம் புரிகின்றனர், இவ்வாறு பல கோலங்களிலிருந்து ஒரே மெய்ப்பொருளைக் கண்டு பிடிப்பதற்காகவே உலகத்திலுள்ள சகல கலைகளும் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது காணலாம்.

அஞ்ஞானம் நிறைந்த மெளட்டீக காலத்தில் மானிடர்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு கடவுள் உண்டெனக் கருதியிருந்தனர். பூ உலகின் கண்ணுள்ள ஒவ்வொரு மானிடருடையவும், நிகட்சிகளுடையவும் சம்மந்தம் தனித்தனியே ஒவ்வொரு ஆக்கியோன்களுடன் யிருப்பதாகக் கருதி அவைகளை வணங்கிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வியாதியும் உண்டாகுவதற்கு ஒவ்வொரு கடவுள் உண்டென்றும், அதுபோலவே யுத்தம்நடைபெறுவதற்கும் சமாதானம் ஏற்படுவதற்கும் பஞ்சம் உண்டாவதற்கும் தானிய உற்பத்திக்கும் கல்விஅபிவிர்த்திக்கும் சீமான்தனம் ஏற்படுவதற்கும் நன்மை தீமைகளுக்கும் தனித்தனியே ஒவ்வொரு கடவுள் இருக்கிறதென்று விசுவாசித்திருந்தனர். இவ்விதமாபெரும் கெட்ட கொள்கையை முதன் முதலில் ஸைன்ஸ் என்னும் தத்துவ ஞான ஆராய்ச்சியே மறுத்துவிடுகிறது. இரண்டாவதாக சத்தியமான தூய்மை வாய்ந்த சன்மார்க்கமானது இக்கொள்கையை அடியுடன் வேரறுத்து வானமுதல் பூமிவரையிலும் அர்ஷ்முதல் குர்ஸ் வரையிலுமுள்ள யாவற்றிற்கும் அதிபதியானவன் ஒரே ஆண்டவனாகுமென்று கற்பித்துக் கொடுக்கிறது. "அவனே வானம் பூமி இரண்டிலும் அதிபதியாகயிருக்கின்றான்" (அல்குர்ஆன்) இக்கொள்கைதான் ஏகத்துவத்திற்கு அடிப்படையானதாகும். முடிவாக இப்பிரபஞ்சத்தில் நடைபெறும் ஒவ்வொரு காரியாதிகளும் ஒவ்வொரு வஸ்துவும் நிகரற்றவனும் இணையற்றவனும் தனித்தவனுமாகிய அல்லாஹ் வின் பக்கமே சம்மந்தம் வைத்திருக்கின்றது. இப்போதனையானது, பற்பல விக்கிர

ஹங்கள் நட்சத்திரங்கள் வானவர்கள் திருத்தூதர்கள் வலிமார்கள் ஷஹீதீன்கள் முதலியோரை வணங்குவதை யொழித்து, வானம் பூமி இவ்விரண்டிற்கும் ஒரே இறைவனின் அதிகாரத்தை ஸ்திரப்படுத்தி ஒரே ஒரு தெய்வீகக் கட்டுப்பாட்டை ஒப்புக்கொள்ளும்படி உலகமுழுதையும் அழைத்திருக்கின்றது.

இம்மகத்தான கொள்கையை ஸ்தாபிப்பதற்காக வேண்டியே உலகின் கண் சகல நபிமார்களும் அனுப்பப்பட்டார்கள். ஆனால் அக்கொள்கை பூர்த்தியான விதத்தில் மானிடர்களிடையே பரவவில்லை. கடைசியாக உலகமானது பூர்ணமும் விபரமுமான முறையில் ஏகத்துவக் கொள்கையை கற்பித்துக் கொடுக்கக்கூடிய ஒரு உத்தமரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அவர்கள் தான் நமது இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்களாகும்.

ஆண்டவனின் ஏகத்துவத்தையும் அதன் போதனைகளையும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் விபரமாகவும் விளக்கமாகவும் போதித்ததானது, விசேஷம் பொருந்திய ஓர் சக்தியுடையதாக ஆய்விட்டது. அல்லாஹ் தஆலா தன்னைப் பொருத்தும் தன் நிறை பூர்ணமான வர்ணிப்புகளைப் பொருத்தும் தனித்தவனாக யிருக்கின்றான்; அவன் வணங்கப்படும் வகையிலும் இணையற்றவனாக யிருக்கின்றான்; பற்பல கோலங்களில் வெளியாகுபவனாகவும் திரித்துவக் கொள்கையிலுள்ள ஒருவனுமாகவுமில்லை என்பது திண்ணம். ஆனால் அவன் நிகரற்ற இணையில்லாத ஒருவனாக யிருக்கின்றான்; எந்த நபிமார்களும் அவனது நாயகத்தனத்தில் சற்றேனும் கூட்டாவதற்கு முடியாது. எந்த நம்ரூதும், பிர்அவ்னும், கிஸ்ராவும், கைஸரும் அவனுடைய அதிகாரத்திலும், போஷிக்கும் தன்மையிலும் கூட்டாகி தாமும் வல்லமை பொருந்திய ஆண்டவனென்று கூறிக்கொள்ள முடியாது.

யாவருக்கும் ஒரே நாயன்

ஆண்டவன் தன் தன்னிலும் தன் வர்ணிப்புகளிலும் வணங்கப்படுவதிலும் தனித்தவனாக யிருப்பது போன்று தான் சம்மந்தம் வைத்திருக்கும் வகையிலும் தனித்தவனாக யிருக்கின்றான். அதாவது அவன் நமக்கு நாயகனாகயிருப்பது போன்று ஒவ்வொரு சிறிய அணுவையும் சூரியன் சந்திரன் நட்சத்திரம் வானம் பூமி மானிடன் மிருகம் முதலிய யாவற்றையும் படைத்த எஜமானாக யிருக்கின்றான்; அவனைத் தவிர உள்ள வஸ்துக்களெல்லாம் அவனுக்குச் சொந்தமானதாகவும் அவனுடைய அடிமையாகவுமிருக்கின்றன; சிருஷ்டிகளடங்கலும் அவனுடையசக்திக் குட்பட்டதாக யிருக்கின்றது; கடல் திடல் வானம் பூமி யாவற்றும் அவனது அதிகாரத்திற் குட்பட்டதாக யிருக்கின்றன.

அநேக மானிடர்கள், நாயன் தங்களுக்குத் தான் சொந்தமாக யிருக்கின்றான்; அதில் வேறு யாருக்கும் சம்மந்தமில்லை என நினைத்துக் கொண்டிருந்தனர். மற்றுஞ் சிலர் மானிடர்களின் உயர்வு தாழ்வு கீர்த்தி அபகீர்த்தி இவைகளைப் பாகுபடுத்தி உயர்ந்தோருக்கு தனி நாயனென்றும் தாழ்ந்தோர்க்கு வேறு நாயன் உண்டென்றும் கருதினர். ஆரியர்களில் மேன் குலத்தோர் தங்களுக்கென்று பிரத்தியேகமாய் ஒருநாயன் இருக்கின்றான் எனக் கருதி யிருந்தனர். பொது உலக மானிடரென்ன? இந்தியாவிலுள்ள இரு பகுதிகளாகிய வடபாகம் தென் பாகத்திலுள்ள இந்துக்கள் தனித்தனியே சிலர் விஷ்ணுவையும் சிலர் சிவனையும் பூஜிக்கின்றனர். ஆரியர்களில் பிராமணர்கள், தங்களைக் கடவுள் தன் வாயிலிருந்து படைத்திருப்பதாகவும் மற்ற இந்துக்களை கடவுள் தம் கால், தும்பிக்கை முதலியவைகளிருந்து படைத்திருப்பதாகவும் கூறுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் ஆண்டவனைத் தங்கள் தகப்பனென்று கருதி தாங்கள் அல்லாஹ்வின் பிள்ளைகளென்றும் அவனால் பிரியம் வைக்கப்பட்டவர்களென்றும் கூறி ஆண்டவனது தன்மையில் தப்பெண்ணம் வைத்திருந்தனர். இந்நிலைமையில் இறுதி நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அனுப்பப்பட்டார்கள் அவர்களுடைய போதனையானது, ஆண்டவனுடைய ஏகத்துவத்தை நிறை பூர்ண மான வகையில் வெளியாக்கி அந்த நாயன் தனித்தவனும் யாவற்றையும் படைத்தவனும் ஆக்குபவனும் அழிப்பவனுயும் இருக்கின்றான் என்பதை அறிவித்துக் கொடுப்பதாக யிருக்கிறது. கருப்பர், வெள்ளையர் ஆரியர், ஈரானியர், அராபியர், யூதர், கிறிஸ்தவர், ஹிந்துக்கள் யாவருக்கும் அவன் ஒரே ஆண்டவனாக யிருக்கின்றான்; அவனது சன்னிதானத்தில், பிரா

மணர்களும், சூத்திரர்களும் யூதர்களும் திரித்துவக்கொள்கை யுடையவர்களும் ஏகத்துவக் கொள்கையுடையவர்களும் அவனுடைய அடியார்களாகவேயிருக்கின்றார்கள். முஹம்மத் (ஸல்)அவர்களுக்கோ அரபிகளுக்கோ குரைஷ்களுக்கோ முஸ்லிம்களுக்கோவென்று தனியே ஆண்டவன் கிடையாது; உலகமடங்கலுக்கும் ஒரே ஆண்டவன் தானிருக்கின்றான். இதே கருத்தை எம்பெருமானார் சற்குணசீலர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஒவ்வொரு தொழுகையில் ஓதும் ஸூரயே பாத்திஹா மூலம் நம்மவருக்குக் கற்பித்துக் கொடுத்துள்ளார்கள் "சகல புகழும் உலக மடங்கலையும் இரக்ஷித்துக் காப்பாற்றக் கூடிய நாயனுக் குரியதாகும்" இந்த இரக்ஷிப்பில் சகல சிருஷ்டிகளும் கூட்டாயிருக்கின்றார்கள்.

இக்காரணத்தால் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் போதனையானது நிறவேற்றுமை சாதி வேற்றுமை முதலியவைகளை அழித்தொழித்து விட்டு "சகல மானிடர்களையும் போஷித்துக் காப்பாற்றக்கூடிய நாயன், சகல மானிடர்களுக்கும் எஜமானான நாயன், மனித கோடிகளின் நாயன். என அறிவித்து விட்டது. இதுதான் பூர்ணமான ஏகத்துவமாகும் இதனை முஹம்மத் (ஸல்.) அவர்கள் மூலமாகத்தான் நாம் தெரிந்து கொண்டிருக்கின்றோம். இதன் அந்தரங்கத்தை எம்பெருமானார் (ஸல்.) அவர்களது போதனையானது, நமக்குக் கற்பித்திருக்கின்றது. உலகம் யாவற்றிற்கும் அவனே ஏகசக்ரவர்த்தி, அவன் தான் யாவரையும் இரக்ஷித்துக் காப்பாற்றுபவன் என்னும் உயரிய ஞானத்தை இஸ்லாத்தின் திருத்தூதர் அவர்கள் உலகத்தின்கண் ஸ்த்திரப்படுத்தி விட்டார்கள்.

மானிடர்களென்ன? மிருக இனங்களுக்கும் அவனே ஏக நாயனாகயிருக்கின்றான். அதனால் மானிடர்கள் மிருக இனங்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் அவைகள் பால் காட்ட வேண்டிய ஜீவகாருண்யங்களைப் பற்றியும் மிருகங்கள் மானிடர்களுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகளையும் விபரமாக கற்பித்துக் கொடுத்தார்கள். "பூஉலகின்கண் ஊர்ந்து திரிபவைகளும் ஆகாயத்தில் பறந்து திரிபவைகளும் உங்கள்போலொற்ற சிருஷ்டிகளாகயிருக்கும்" அல்குர்ஆன்.

திருத்தூதில் ஒற்றுமை

ஏகத்துவக் கொள்கைக்கு அடுத்தபடியாக நபிமார்களின் திருத்தூதில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையைப் பற்றி கூறுவது பொருத்தமாகும். இத்தோரணையில் நபி முஹம்மத் (ஸல்.) அவர்கள் எந்தெந்த சீர் திருத்தங்களைச்செய்திருக்கின்றார்களோ, எந்தெந்த தப்பெண்ணங்களை அகற்றி யிருக்கின்றார்களோ, நபித்துவத்தின் எந்தெந்த உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்களோ அவை அனைத்தையும் விபரிக்க வேண்டியிருக்கின்றது. தவிர இவ்விஷயத்தில் அன்னியர்கள் செய்த தவறுகளில் முதன்மையானதானது, ஒவ்வொரு கூட்டத்தினரும் நுபுவ்வத்தை குறுகிய நோக்கங் கொண்டு தங்கள் தங்களுக்குச் சொந்தமானதென்று கூறிக்கொண்டிருந்ததாகும்.

ஆண்டவனது திருமொழிகளை இங்குள்ள முனிவர்களும் ரிஷிகளும் கேட்டு அதனை எழுதி வைத்திருக் கின்றனரென்று ஆரியர்கள் கூறிக்கொண்டிருந்தனர். ஈரானியர்களைத் தவிர மற்றவர் யாவரும் இறைவனின் ஞான ஒளியை விட்டு தூரமானவர்களாகயிருக்கின்றார்களென்று ஜர்தஷ்த் வகுப்பார் எண்ணிக்கொண்டிருந்தனர். இஸ்ரவேலர்கள் தங்களைத் தவிர வேறுயாருக்கும் நபித்துவம் கிடைக்கமாட்டாதென எண்ணிக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவர்கள் தாங்கள் தான் ஆண்டவனின் குமாரர்களென்று செப்பிக் கொண்டிருந்தனர். ஆனால் உலக ரெட்சகர் எம்பிரான் சற்குண சீலர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு குறுகிய முறையில் நபித்துவத்தை ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டில் சொந்தமானதெனக்கூறுவதை ஆண்டவனது நீதி தர்மத்திற்கு முரணானதென்று கருதினார்கள். சிறப்புற்ற திருகுர்ஆன் ஷரீபும் தம் பற்பல வஸனங்கள் மூலமாக இக்கூற்றை மறுத்துக் கூறியிருக்கின்றது. ஒரு யூதன் ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களைத் தவிரமற்றெல்லா நபிமார்களையும் மறுத்து விடமுடியும்; ஒரு கிறிஸ்த்துவன் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களை ஆண்டவனின் குமாரரென்று மதித்து அவன் கிறிஸ்தவனாகயிருக்க முடியும்; ஒரு ஜர்தஷ்த்தீ, ஹஸ்ரத் இப்றாஹீம், ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் ஈஸா (அலைஹிம்) இவர்களை பொய்யாக்கி

வைத்து தாம்தான் சன்மார்க்கத்திலுள்ளவ
னெனக்கூறமுடியும். ஆனால் ஒரு முஸ்லிம்
ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்.) அவர்களுடன்
சகல நபிமார்களையும் ஒப்புக்கொள்ளாத
வரை அவன் முஸ்லிமாக யிருக்கமுடியாது.
குறுகிய நோக்கத்தின் காரணமாய் நபித்
துவம் ஒரு தேசம் ஒருவகுப்பு அல்லது ஒரு
பாஷை இவைகளில் வரையறுக்கப்பட்
டிருந்த தென்பதில்லை. அவர்கள் நபிமார்க
ளென ஒப்புக் கொண்டிருந்தவர்களிலேயே
வித்தியாசம் பாராட்டி சிலரை ஒப்புக்கொண்
டும் சிலரை மறுத்துக் கொண்டு மிருந்தனர்.
யூதர்கள், ஈஸா (அலை.) அவர்களை பொய்ய
ரென மதித்திருந்தனர் (நஊதுபில்லாஹி
மின்ஹா) அவர்கள் மீது பலவாறான படு
தூர்களும் சொல்லிக் கொண்டிருந்தனர்.
குரைஷ்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்க
ளது திரு நாமத்தைக் கேட்டவுடன் ஆத்தி
ரப்படுவார்கள். யூதர்களும் கிறிஸ்தவர்களும்
ஹஸ்ரத் தாவூத், ஹஸ்ரத்சுலைமான் (அலைஹி)
இவர்கள் நபிமார்களல்ல தேசாதிபதிக
ளென்று மதித்திருந்தனர். ஹஸ்ரத் முஹம்
மத் முஸ்தபா ரஸூலுல்லாஹி ஸல்லல்
லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், நபித்து
வத்தில் அரப்தேசமென்றும் அரப் அல்லாத
தேசமென்றும் ஷாம் என்றும் ரூமென்றும்
ஏஷியா வென்றும் ஐரோப்பா வென்றும்
குறிப்பிடுவதை மறுத்து இறைவனின் நபித்
துவம் என்னும் ஒளிவானது ஒவ்வொரு
தேசத்திற்கும் ஒவ்வொரு வகுப்பாருக்கும்
வெளிப்படுத்தப்பட்ட தென்பதையும் ஆண்
டவனது திருவசனங்கள் அவர்களுக்கு அறி
விக்கப்பட்ட தென்பதையும் விளக்கிக் காட்
டினார்கள். இதனாலேயே உலகின்கண் தோன்
றிய சகல நபிமார்களையும் எவ்வித வித்தியாச
மும் பாகுபாடுமின்றி அவர்கள் யாவரும்
இறைவனின் திருத்தூதரும் உண்மையாளரு
மாக இருக்குமென ஒப்புக்கொள்ள வேண்டி
யது கடமையாய் விடுகின்றது.

இங்கு மற்றோர் விஷயத்தை விபரிக்க
வேண்டி யிருக்கின்றது. அதாவது முற்காலத்
தில் நபித்துவம், திருத்தூது இவைகளின்
கருத்துகள் தெளிவாகவும் சந்தேகமறவும்
கூறப்பட்டிருக்கவில்லை. எஹூதிகள் நபித்
துவமென்பது, முன்னறிக்கை செய்வதற்குச்
சொல்லப்படும் எனக் கூறிக்கொண்டிருந்
தனர். அத்துடன் நபிமார்களின் பிரார்த்
தனை, சாபம் இவைகள் உடனே இறைவனி
டம் ஒப்புக்கொள்ளப்பட்டுப் போய்வி
கிறதெனவும் கூறிகொண்டிருந்தனர். இது
சம்மந்தமான விஷயங்கள் தவ்ருத்தின் ஏடு
களில் விபரிக்கப்பட்டிருப்பது காணலாம்.
இதனாலேயே ஹஸ்ரத் இப்ராஹீம், ஹஸ்ரத்
லூத், ஹஸ்ரத் யஃகூப், ஹஸ்ரத் யூசுப்
(அலைஹி) இவர்களுடைய நபித்துவத்தில்
எவ்வித சந்தேகமும் கொள்ளாதிருந்தனர்.
அவர்கள் சில குறிகாரர்களை நபிமார்களை
விட மேலானவர்களெனவும் மதித்திருந்
தனர். ஹஸ்ரத் சுலைமான், ஹஸ்ரத் தாவூத்
(அலைஹி) இவர்களை இராஜர்களென்றும்
அக்காலத்தில் முன்னறிக்கை செய்து
கொண்டிருந்த நபி வேறொருவர் இருந்தா
ரென்றும் எண்ணிக்கொண்டிருந்தார்கள்.
யஹூதிகளைப்போலவே நஸாராக்களிடத்
திலும் நுபுவ்வத் தென்னும் பதத்
திற்குத் தெளிவான கருத்தொன்று மில்லா
திருந்தது. இன்ஜீலில் "உமக்கு முன்னால்
வந்தவர்கள் திருடர்களும் வழிப்பறிக் கொள்
ளைக்காரர்களுமாக யிருந்தார்" களென்று
ஆண்டவன் ஈஸா (அலை) அவர்களுக்கு அறி
வித்ததாக எழுதிவைக்கப் பட்டிருக்கின்றது.
மேலும் தற்காலத்தில் காணப்படும் பைபிள்
களில் ஆண்டவனது தூதர்களைப்பற்றிய
பிரஸ்தாபமோ அவர்களைப்பற்றிய அத்தாக்ஷி
களோ கிடையா; ஹஸ்ரத் ஜகரிய்யா, ஹஸ்
ரத் யஹ்யா (அலைஹி) இவர்களைப்பற்றிய
பிரஸ்தாபமிருந்த போதிலும் நபிமார்கள்
என்னும் தோரணையி லில்லாதிருக்கின்றது.

இவ்வாறு நபித்துவத்தின் கருத்து துலக்
கப்படாமலிருப்பதால் யூதர்களும் கிறிஸ்த
வர்களும் இஸ்ரவேலர்களில் வந்த நபிமார்
கள் விஷயத்தில் தகாத வார்த்தைகளைக்
கூறிக்கொண்டிருந்தனர். உதாஹரணமாக
ஹஸ்ரத் லூத் (அலை) அவர்கள் கெட்ட
காரியத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறினர்.
வஞ்சனை சூனியம்முதலிய காரியங்கள் ஆகாக்
கருமங்களென தௌராத்தில் கூறப்பட்டிருந்
தும் ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்களை
போக்கிரி என்றும் மாந்திரீகக்கார ரென்றும்
எண்ணிக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவர்
கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தவிர
வுள்ள சகல நபிமார்களும் பாவிக ளென்
றெணிக் கொண்ண்டிருந்தனர். எஹூதிக
ளும் கிறிஸ்தவர்களுங்கூட ஹஸ்ரத் மர்யம்

(அலை) விஷயமாகவும் ஹஸ்ரத் ஈஸா (அலை) விஷயமாகவும் அநேக தகாதவார்த்தைகளைக் கூறினரென்னும் விபரம் இன்ஜீலிலேயே காணப்படுகிறது. யூதர்கள் ஹஸ்ரத் மர்யம் (அலை) மீது படுதூர் சொல்லிக் கொண்டிருந் தார்கள்.

சங்கைவான்களாகிய நபிமார்கள் விஷயத் தில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் தப்பெண் ணங்கொள்வதற்கு முக்கிய காரணம், தற் காலமுள்ள தவ்ருத்திலும் இன்ஜீலிலும் நபி மார்களுக் கிருக்கவேண்டிய இலக்ஷணங்களை விபரித்துக் கூறப்படாததே யாகும். ஆனல் இஸ்லாம் மார்க்கமானது உலகின் கண் ணுண்டாகிய சகல நபிமார்களின் மகிமை கீர்த்தி முதலியவைகளில் ஒரேவிதமான சட் டதிட்டத்தை நிறுவி நபிமார்கள் யாவரும் பாவத்தை விட்டு துப்பரவானவர்கள் பரிசுத் தமானவர்கள் என்று அறைகின்றது. ஆத லின் சகல நபிமார்கள்மீதும் ஈமான் கொள் வது அத்தியா அவசியமாகும். அவர்கள் ஒவ் வொருவருக்கும் தனித்தனியே ஒவ்வொரு பதவி அளிக்கப்பட்டிருந்தது. இறைவனின் சட்டதிட்டங்களை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும், நேர்மையானவும், சத் தியமானவுமான வழிகளை எடுத்தோதுவதற் காகவுமே நபிமார்கள் அனுப்பப்பட்டார் கள். அவர்களடங்கலும் நேர்வழி காண்பிப் பவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாக வும்; நல்மாராயம் சொல்பவர்களாகவும்; சன் மார்க்கத்தை அறிவித்துக் கொடுக்கக்கூடிய வர்களாகவும்; அல்லாஹ்வின் நல்லடியார்க ளாகவும்; அந்தந்தக் காலத்திலுள்ள சகல மானிடர்களை விட மேன்மைவாய்ந்தவர்களா கவு மிருந்தார்கள். சகல நபிமார்களும் ஒரே இலக்ஷியத்திற்காகவே அனுப்பப்பட்டிருக் கின்றூர்கள். அவர்கள் யாவரின் போதனையும் ஒன்றே. அவர்கள் எல்லோரும் கார்மான மென்னும் வர்ணிப்பில் கூட்டாகயிருக்கின் றூர்கள். அவர்கள் யாவரையும் ஒரேவிதமாக ஒப்புக்கொள்வது அத்தியா அவசியமாகும். உலகத்தில் வந்துசென்று போன சகல நபி மார்களையும் ஒரே விதமாய்ப்பாவிக்கும் படி யும் அவர்களுக்கு சங்கை மரியாதை செய் யும்படியும் திருக்குர்ஆன் கற்பித்துக் கொடுக் கிறது **"ரசூல்மார்களுக் கிடையில் நாம் வித் தியாசம் பாராட்ட மாட்டோம்** — அல்குர் ஆன்.

ஒரே விதமான வேதங்கள்

இதுபொழுது மார்க்கங்களுக் கிடையி லுள்ள ஒற்றுமையை கவனிக்க வேண்டியது நம்முன் நிற்கின்றது. இஸ்லாத்திற்கு முன்னு ள்ள மார்க்கங்கள் இவ் விஷயத்தில் கவனஞ் செலுத்தவில்லை. யூதர்கள் தவ்ருத்தைத் தவிர வேறு எதையும் ஒப்புக் கொள்கிறதில்லை; கிறிஸ்தவர்களோ தவ்ருத்வேதத்தில்குறிப்பி டப் பட்டிருப்பவைகளை ஏற்றுக் கொள்கிற தில்லை ஆனல் நமது உலக ரெட்சகர் (ஸல்) அவர்கள் பிடிவாதமற்றவும் பொறுப்பு வாய் ந்தவுமான அழகிய முறையில் இது விஷய மாய் போதனை புரிந்திருக்கின்றூர்கள். இப் போதனையின்படி ஒவ்வொரு முஸ்லிமும் சென்றுபோன நபிமார்களின் வேதங்களை குர்ஆனைப் போலவே சரிகண்டு அவைகள் யாவும் இறைவன் பக்கலிருந்து அனுப்பப் பட்டதென்று ஒப்புக் கொள்ளவேண்டும். பழைய வேதங்களைக்கொண்டு ஈமான் கொள் வதும் திருக்குர்ஆனைக் கொண்டு ஈமான் கொள்வதிலுள்ளதாகும். எவ்வாறு குர்ஆனை ஒப்புக் கொள்ளாமலிருப்பது குபிராகயிருக் கின்றதோ அவ்வாறே மற்ற வேதங்களை ஒப் புக்கொள்ளாமலிருப்பதும் குபிராகும். இப் பொறுப்புள்ள தன்மையும் இச்சிறப்பும் மரி யாதையும் இஸ்லாத்தைத் தவிர வேறெங்கும் காணமுடியுமா?

ஆண்டவனல் அனுப்பப்பட்ட வேதங்கள் மட்டிடப்படாத்ததாகயிருப்பினும் திருக்குர் ஆனில் குறிப்பாய் கூறப்பெற்றிருக்கும் வேதங்கள் தவ்ருத், ஜபூர், இன்ஜீல், குர்ஆன் ஆகிய இந்நான்குமாம். இவைகளன்றி குர் ஆனின் மற்றோரிடத்தில் இப்ருஹீம் (அலை) அவர்களுக்குள்ள ஆகமங்களைப் பற்றி பிரஸ் தாபிக்கப்பட்டு அதன் பெயர் குறிப்பிடப் படாமலிருக்கின்றது. சில வஸனங்களில் "முந்திய ஆகமங்களெ"ன்று பொதுப்படை யாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள சகல இடங் களிலும் அவைகள் உண்மையானவைஎன்று ஒப்புக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டி ருக்கின்றது. ஆதலின் குர்ஆன் ஷரீபின்மீது நங்கம்பிக்கை கொண்டுள்ள முஸ்லிம்கள், எம் பெருமானர் (ஸல்) அவர்களுக்கு முன்னுண் டான வேதங்களை ஆண்டவனுடைய வேத

மென்று அறிந்துகொள்வதுஅத்தியா அவசியமாகும்.

இதனால் இஸ்லாமானது, உலகின்கண் தோன்றியுள்ள சத்தியமார்க்கங்களடங்கலையும் ஒரே விதமாகமதிக்கின்றது என நன்கு புலனாகின்றது. ஏனெனில் அவ்வேதங்களடங்கலும் ஒரே நாயனான ஆண்டவன் புறத்திலிருந்து அனுப்பப்பட்டிருப்பதினாலும் சகல நபிமார்களும் ரசூல் மார்களும் இவ்வொரேஊற்றினின்று பருகினதினாலும் சகல வேதங்களினுடைய இலக்ஷியங்களும் போதனைகளும் ஒரே விதமாகயிருப்பதினாலுமேயாம். இதனாலேயே இஸ்லாமானது, ஹஸ்ரத்ஆதம் (அலை) முதல் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபாரஸூல் (ஸல்) அவர்கள் வரை துயர்படியாக நபிமார்கள் மூலம்வந்து கொண்டிருந்த சன்மார்க்கமென்று திருக்குர்ஆன் அறிவித்துவிட்டது.

திருக்குர்ஆன் நமக்குஇரண்டு வார்த்தைகள் கற்பித்திருக்கின்றது. (1) தீன் (2) ஷரீஅத். தீன் என்பது சத்திய மார்க்கங்களின் மூலப்பொருள்களாகும் அதில் அருள் மார்க்கங்கள் யாவும் ஒற்றுமையாகவே யிருக்கின்றது உதாஹரணமாக இறைவனின் உண்மை, அவனது ஏகத்துவம் அவனது நிறை பூர்ணமான வர்ணிப்புகள், நபிமார்களை அனுப்பிவைத்தல், அவனுக்கு இணையற்ற வணக்கம் புரிவது, நற்குணங்கள், தீய குணங்கள், நற்கூலி, தெண்டனை இவைகளாகும். இது விஷயங்களில் சகல நபிமார்களின் போதனைகளும் ஒரேவிதமானதாக யிருந்தது இதில் இடம் காலம் இவைகளின் வித்தியாசத்தால் எவ்வித மாறுபாடும் ஏற்பட மாட்டாது. இப்போதனைகள் எல்லா இடங்களிலும் எல்லாக்காலங்களிலும் ஒரேவிதமாகத் தானிருந்தது. ஆனால் தற்காலத்திலுண்டான அப்பழைய வேதங்களில் விகற்பங்கள் காணப்படுவதெல்லாம் ஒன்றிருக்கில் அவ்வேதங்களிலில்லாத இதர கொள்கைகள் அதில் வந்து நுழைந்திருக்கலாம். அல்லது அதையே மாற்றித் திரித்து எழுதப்பட்டுப் போயிருக்கலாம். (2) ஷரீஅத் என்பது காலம், இடம் இவைகளின் வேறுபாட்டைக் கொண்டு மாறுதலடையக் கூடியதாகயிருக்கும். உதாஹரணமாக இறைவனை வணங்கும் விதத்தில் ஒவ்வொரு மார்க்கத்திலும் சிற்சில வித்தியாசங்களிருக்கின்றன; வணக்கத்திற்காக முன்னோக்க வேண்டிய திசைகள் வேறுபட்டிருக்கின்றன; துற்செயல்களைத் தடுப்பதற்காக உபயோகிக்கப்படும் முறைகள் வெவ்வேறாக யிருக்கின்றன.

இதுபொழுது அருள் மார்க்கங்களுக்கிடையில் வித்தியாசங்கள் தோன்றுவதை கவனிப்போமாயின் மார்க்கங்களின் பூர்வாங்கமான விஷயங்களில் எவ்வித மாறுபாடு மில்லை என்பதைக் கண்டுகொள்கின்றோம். அவ்வாறுள்ள பூர்வாங்கமான விஷயங்களை அடையவேண்டிய வழிகளில் சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியமேற்படின் அவ்வழிகளில் மாறுதல் செய்யப்படுகின்றது. இதே நோக்கத்திற்காகவே தான் நபிமார்களை ஒரு வருக்குப்பின் ஒருவராக அனுப்பவேண்டிய அவசிய மேற்பட்டது. அவர்கள் இப்பூ உலகின்கண் வந்துமேன்மை பொருந்திய சன்மார்க்கத்தை ஜனங்களுக்கு போதித்துக்கொண்டிருந்தார்கள். அத்துடன் தங்களைப்பின் பற்றியோர்களுக்கு தேசகாலவர்த்தமானத்திற்கேற்ப தேவைப்படுபவைகளை போதித்தும் கற்பித்துக்கொடுத்துக்கொண்டு மிருந்தார்கள்.

முந்திய வேதங்களில் மறதியோ அல்லது திரித்தலோ மாற்றலோ புரட்டலோ ஏற்பட்டுவிட்டாலும், அல்லது அது அசல் பிரதிதானா வென்பதில் சந்தேகம் ஏற்பட்டுவிடும் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ் தஆலா நபிமார்களை அனுப்பிவைக்கின்றான். ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களுடைய ஆகமங்கள் காணாமற்போனபின் ஹஸ்ரத்மூஸா (அலை) அவர்கள்மீது தவ்றாத் வேதத்தை இறக்கிவைக்கப்பட்டது. அவர்கள் காலத்திற்குப்பின் தவ்றாத்திலும் பற்பல மாறுபாடுகள் ஏற்பட்டுப்போனபோது ஜபூர் வேதமும் மற்ற ஆகமங்களும் வந்துகொண்டிருந்தது. அதை பரிபூர்ணம் செய்வதற்காக இன்ஜீல் வேதம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு வந்தது. அதிலும் மானிடர்களின் கைநாட்டு ஏற்பட்டுவிடவே, குர்ஆன்ஷரீப் இறங்கிற்று என்னும் உண்மை சங்கைவான்களான நபிமார்களின் சம்பவங்களை நோட்டமிடுவது கொண்டுதெரியவரும்.

அருள்வேதங்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருந்த ஒற்றுமையைப் பொருத்து எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயம் மிக மிகப் போற்றத் தக்கதாகும். அவ்வபிப்பிராயத்தை வேதக்காரர்களின் முன்னிலையில் திருக்குர்ஆன் எடுத்

தோதியதானது மிகவும் மேன்மை வாய்ந்த தாக யிருந்தது. கிறிஸ்தவர்கள், யூதர்களுக்கிடையிலும் முஸ்லிம்களுக்கிடையிலுமிருந்துவரும் விகற்பங்களெல்லாம் மூலக்கொள்கையை அனுசரித்ததாகயில்லாது சாதாரண அம்ஸங்களில்தான் இருந்து வந்தது. இதனாலேயே அவர்களை திருக்குர்ஆன் நேர்மையானவும் மூலக்கொள்கையில் ஒற்றுமையானவுமான மார்க்கத்தள வில் அழைத்தது. அதுதான் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகயிருக்கும். எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட விஷயங்கள் யாவும் அவர்களுக்கு முன்னுண்டான நபிமார்களுக்கு அருளப்பட்டதே யாகுமென்றும், அவர்களுக்குக்கொடுக்கப்பட்ட இச்சத்திய மார்க்கம் ஹஸ்ரத் நூஹ், ஹஸ்ரத் இப்ருஹீம் (அலைஹி) முதலியவர்களுக்குக் கொடுக்கப்பட்டதே யாகுமென்றும் நன்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மார்க்கங்களின் ஒற்றுமையை இஸ்லாம் போதித்ததானது இராஜிய விஷயத்திலும் அளவற்ற நன்மைகளை உண்டுபண்ணிவிட்டது. இவ்வாறுள்ள ஒற்றுமையைவேறு எம்மார்க்கத்திலும் காண்பதறிதாகும். இஸ்ரவேலர்களும் அவர்களல்லாதாருமே யூத மதத்தைப் பின்பற்றியிருந்ததால் அவ்விரு வகுப்பார்களின் மீதே அவர்கள் சட்டதிட்டங்கள் இயற்றவேண்டியிருந்தது. கிறிஸ்தவர்களுடன்விக்கிரக ஆராதனைக்காரர்களும் யூதர்களும் கலந்திருந்தனர். ஆனால் அவர்களின் மார்க்கத்தில் இராஜிய சட்டதிட்டங்கள் பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஆதலின் அவர்கள் அநேகக் காரியங்களில் ரோமன் சட்டதிட்டங்களைப் பின்பற்றி நடந்தனர்.

இஸ்லாம் மதமானது இராஜிய சட்டங்களை இயற்றும் தோரணையில் உலகத்திலுள்ள சமுகங்களை நான்கு விதமாகப் பிரித்து ஒவ்வொருவர்களுக்கும் தனித்தனியே பாத்தியதைகளை ஏற்பாடு செய்துவிட்டது. அச்சட்டதிட்டங்களைக்கொண்டு பதிமூன்று நூற்றுண்டுகளாகக் காரியாதிகள் நடைபெற்று வருகின்றது. (1) முஸ்லிம்கள் (2) வேதக்காரர்கள் (3) வேதக்காரர்களைப் போலொற்றவர்கள் (4) குப்பார்கள், முஷ்ரிகீன்கள். இவர்களுக்காக இயற்றப் பெற்றுள்ள சட்ட திட்டங்களினல் உலகத்தில்சமாதானம் கார்மானம் முதலியவைகளும் முஸ்லிம்களிடம் பொறுப்புத் தன்மையும் உண்டாய்விட்டது. அதனால் முஸ்லிம்கள் தங்கள் மார்க்கக் கோட்பாடுகளில் உறுதியாகயிருப்பதுடன் உலகத்தின் கண்ணுண்டாகிய இதரசமூகத்தினருடன் ஒற்றுமையாக வாழவும் அவர்களுக்கு உபகாரம் புரியவும் ஆயுத்தமாக ஆய்விடுகின்றனர். முஸ்லிம்கள், மஜூஸிகள் யூதர்கள் கிறிஸ்தவர்கள் இந்துக்கள் முதலியவர்களுடன் சேர்ந்து பல தேயங்களிலும் அந்தந்த தேசங்களுக்கு ஒற்றுமையாக பற்பலதேசிய சட்டதிட்டங்களை எற்படுத்துவதற்கு இவர்களுக்கு பலம் எற்பட்டதானது மேலே கூறப்பெற்றுள்ள ஒற்றுமைக் கொள்கையின் பிரதிபலனேயாகும்.

மானிடர்க்கிடையில் ஒற்றுமை

ஏகத்துவக் கொள்கையைப் பூர்ணமாக்குந் தோரணையில் ஆரம்பமாகவும் முடிவாகவும் இரண்டு வஸ்த்துக்களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். ஆரம்பம் இறைவனது வலுப்பத்தைக் கொண்டு ஏற்படுகின்றது மானிடர்களின் பதவியின்மீது அது முடிவடைந்துவிடுகிறது. இணைவைத்து வணங்கும் முஷ்ரிகீன்களும் விக்கிர ஆராதனைக் காரர்களும் நட்சித்திரத்தை வணங்குபவர்களும் இயற்கையை வணங்குபவர்களும் கற்களுக்கும் மரங்களுக்கும் முன்னிலையில் தலை சாய்ப்பவர்களும் உயிர்ப்பிராணிகளை சுவாமி களெனக் கருதுபவர்களும் ஜின்களையும் ஷைத்தான்களையும் இரக்ஷிக்கத் தேடுபவர்களும் வானலோக சிருஷ்டிகளை ஆண்டவனென்று மதிப்பவர்களும் இஃதென்ன? மானிடனையே கடவுளென மதிப்பவர்களும் உண்மையில் மானுஷியத்தன்மையின் பதவியை அறியாதவர்களாக யிருக்கின்றார்கள். இவர்கள் அந்தரங்கத்தில் மானிடனை, கல்மரம் உயிர்ப்பிராணிகள் சமுத்திரங்கள் பருவதங்கள் சூரிய சந்திர கிரஹணங்கள் முதலியவைகளைப் பார்க்கினும் கேவலமாக மதிக்கின்றனர். சூரியன் சந்திரன் இவைகள் தங்களுக்காகப் படைக்கப்பட்டதல்ல; அவைகளுக்காகவே மானிடன் படைக்கப்பட்டிருக்கின்றான் எனவும், விண்ணுலக சிருஷ்டிகளும் கடலும் உயிர்ப்பிராணிகளும் சுருங்கச் சொல்லுமிடத்து இயற்கையினுடைய சகல தோற்றங்களும் மானிடர்களின் எஜமானர்களென்றும்

இவைகளுக்கு வழிப்பாடு செய்யவே மானிடன் படைக்கப்பட் ருக்கின்றனென்றும் கருதுகின்றனர். தாங்கள் பின்பற்றும் சுவாமிகளின் காரணமாகவே மானிடர்கள் உயர்ந்தோர்களாகவும் தாழ்ந்தோர்களாகவும் மேன்குலத்தோர் கீழ்மக்களாகவும் ஆய் விடுகின்றனரெனவும், சிலர் பரமேஸ்வனின் முகத்தில் நின்றும் சிலர் காலினின்றும் சிலர் கையில் நின்றும் படைக்கப்பட்டிருப்பதாகவும் கருதுகின்றனர். இதனல் மானிடர்களுக்கிடையில் சமத்துவமென்னும் பெயர் நாமங்கூட இல்லாதிருக்கிறது. இவ்வாறு அவர்கள் பல வகுப்பினர்களாக இருந்து கொண்டிருப்பதால் அவர்களுக்கிடையில் ஒற்றுமை என்பது குதிரைக்கொம்பாகக் காணப் படுகின்றது.

பாபில், மிஸ்ர், இந்தியா, ஈரான் முதலிய இடங்களிலுள்ள வம்பர்களான இராஜாதிபதிகள் தாங்கள்தான் மேன் குலத்தவர்களென்று மதித்திருந்தனர்; அவர்களுக்கு இராஜிய பரிபாலனம் கிடைப்பதும் அதை விட்டு நீக்கப்படுவதும் மானிடர்களினலேற் படுவதல்ல; வானவர்கள் சுவாமிகளினல்தான் ஏற்படுகிற தெனக்கருதிக் கொண்டிருந்தனர். என்கிலும் எம் பெருமானர் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள், ஆண்டவனைத்தவிர மற்றயா வஸ்துக்களுக்கும் பயப்படுவதை மானிடர்களின் ஹிருதயத்தைவிட்டு நீக்கிவிட்டார்கள். தவிர ஏகத்துவக் கொள்கையானது இப்பிரபஞ்சத்திலுள்ள உயர்வு தாழ்வு மேன்மை தாழ்மை முதலியவைகளை ஒழித்தும் ஜாதி வித்தியாசத்தைக் கெல்லி எறிந்தும்விட்டது. எளியோர் வலியோர் என்னும் பாகுபாட்டையும் வெள்ளையர் கருப்பர் என்னும் நிறவேற்றுமையையும் அழித்தொழித்து விட்டது. பெருமை அகங்காரம் ஆண்மை அநியாயம் இவைகளை இருந்த இடம் தெரியாது ஆக்கி விட்டது. சகல மானிடர்களும் ஆண்டவனின் அடிமைகள்; யாவரும் அவன் முன் சரிசமானமானவர்கள்; யாவரும் சகோதிரர்கள்; சரி பாத்திதைகளை அடைவதில் ஒன்றுபோலுள்ளவர்கள் என்னும் சமத்துவத்தன்மையை வேரூன்றச்செய்து விட்டது.

இரவு பகல், சூரியன், சந்திரன், நட்சத்திரம், உயிர்ப்பிராணி, கடல் அதிலுள்ள மச்சங்கள், முத்துக்கள், கப்பல்கள், மரம், நெருப்பு சுருங்கச் சொல்லின் உலகத்திலுள்ள சகல வஸ்த்துக்களும் மானிடருக்காகவே படைக்கப் பட்டிருக்கிற தென்பதையும், மானிடர்களுக்குத் தொண்டு புரிந்துகொண்டிருக்கிற தென்பதையும் எம்பெருமானர் சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் நன்கெடுத்து அறிவித்துவிட்டார்கள். இதற்குப் பின் சிருஷ்டிப் பொருள்களை தன் வணக்கத்திற்குறியதென ஏற்படுத்திக் கொள்வது புத்தி சாலித்தனமென யாரும் கூற முன்வரமுடியுமா? மானிடன் சகல சிருஷ்டிகளைக்காண மேலானவன் என்னும் நுட்பத்தை எம் பெருமானர் (ஸல்) தங்களுக்கு ஏற்பட்ட வஹியின்மூலம் தெரிவித்து விட்டார்கள். தவிர மானிடன் இறைவனின் பிரதிநிதியாய்த் தன் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கின்றன்; அவனது சிரம் ஆண்டவனது பிரதிநிதித்துவத்திற்குள்ள கிரீடத்தைக் கொண்டு இலங்குகின்றது; இறைவனின் கோடிக்கணக்கான சிருஷ்டிப்பொருள்களில் அவனுடைய வேத இரகசியத்தைச் சுமந்தவன் மானிடனேயாவன்; இச்சிறப்பு எந்த வானவர்களுக்கும் பூமிகளுக்கும் வானங்களுக்கும் பருவதங்களுக்கும் கிடைக்கவில்லை; மானிடன் அளவற்ற சங்கைக்குறியவன்; இப்பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிகள் யாவற்றைப் பார்க்கினும் மகாமேலானவன் என்னும் கருத்தை குர்ஆன் ஷரீபானது நன்கறிவித்துவிட்டது. மானிடன் மேலான உணவுகளைப் புசிக்கின்றன்; நிகரற்ற மேன்மையான முறையில் படைக்கப்பட்டு ஆண்டவனின் பிரதிநிதியாக இப்பூஉலகின்கண் வந்திருக்கின்றன். இந்நிலைமையில் மானிடன் ஆண்டவனைப் பார்க்கினும் வேறுயாருக்கும் வணக்கம் புரிவது தகுமா? நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் போதனையானது மானிடனின் சிரம் பற்பல வாயல்களுக்கு அடிபணியாமல் ஒரே ஆண்டவனை வணங்கும்படி செய்துவிட்டதுடன் மானிடன் எந்த இலக்ஷியத்திற்காகப் படைக்கப்பட்டானே அதே சேவையை ஒவ்வொருவரும் ஆற்றும்படி செய்துவிட்டது. ஆதலின் இப்பிரபஞ்சத்திலுள்ள ஏதாகிலுமொரு வஸ்துவிற்கு முன் மானிடன் தலைசாய்ப்பது தகைமை உடையதாகுமா வென்பதை யாராலும் எண்பிக்கமுடியுமா?

மானிடர்கள், அகங்காரம் தற்பெருமை முதலிய துற்குணங்களின் காரணமாய் ஒரே ஒற்றுமையான மானுஷ்யத்தை பலகோடிக் கணக்கான வகுப்பாகப்பிரித்துவிட்டார்கள். இராஜர்கள் ஆண்டவனின் பதவி வரைஎற்றி விட்டதாகப் பறைசாற்றி வந்தனர்; அவர்கள் சாஷ்டாங்கம் புரியப்பட்டனர்; அவர்கள் கட்டளைகள் இறைவனது சட்டதிட்டங்களைப்போன்று மதிக்கப்பட்டது. நாயகம் (ஸல்.) அவர்களது போதனையானது, தாம் தான் பெரிய நாயனென்று பிரகனடப் படுத்திக்கொண்டிருந்த பாபில் தேயத்து நம்ரூதுடையவும், மிஸ்ர் தேயத்து பிர்அவ்னுடையவும் அகம்பாவங்களை அழித்தொழித்து அவர்களது கெம்பீர சிம்மாஸனத்தை விட்டிறக்கி சாமான்யர்களின் ஸ்தானத்தில் கொண்டுவந்து உட்காரவைத்துவிட்டது. முடிவாக ஆண்டவனைத் தவிர மற்றவர்களை மன்னாதி மன்னர்களென்று கூறுவதையுங் கூட அருவருக்கச் செய்துவிட்டது.

இவ்வாறே வேதக்காரர்களும், திருத்தூதர்களையும் வலிமார்களையும் தியாகிகளையும் ஆண்டவன் என்றுங்கூடக் கூறிவிட்டனர். நாயகம் (ஸல்.) அவர்கள், இக்கெட்ட கொள்கையை அகற்றி அவர்கள் எல்லோரும் ஆண்டவனுடைய நல்லடியார்களாகவும் தனித்தனியேயுள்ள சிற்சில விசேஷங்கள் பொருந்தியவர்களாகவுமிருக்கின்றார்களென்பதை நன்கெடுத்துக் காட்டிவிட்டார்கள்.

ஒவ்வொரு சமுகத்தினரும் தங்கள் தங்களுக்குப் பிரத்தியேகமான சீரும் சிறப்பும் உண்டென மதித்திருந்தனர். இஸ்ரவேலர்கள் தங்களை இறைவனின் குடும்பத்தினரெனக் கூறிக்கொண்டிருந்தனர். இந்துக்களில் பிராமணர்கள் தாங்கள் கடவுளின் முகத்தினின்றும் இரஜபுத்திரர்கள் கடவுளுடைய பாதத்தில் நின்றும் சூத்திரர்கள் கடவுளுடைய தும்பிக்கையினின்றும் படைக்கப்பட்டனரென்று கூறிக்கொண்டிருந்தனர். ரூம் தேசத்திலுள்ளரோமன் வகுப்பார் தாங்கள் இராஜ பரிபாலனஞ் செய்வதற்காகவே என்றும் மற்றவர்கள் தங்களுக்கு அடிமையாக இருப்பதற்காகவே என்றும் படைக்கப்பட்டிருப்பதாக எண்ணியிருந்தனர். இவ்வாறு மானிடர்களுக்குள் உயர்வு தாழ்வு தீண்டப்படுவோர் தீண்டப்படாதார் என்னும் கொள்கைகளைக் கொணர்ந்து புகுத்தி கோடிக்கணக்கான சமுகமாகப் பிரித்துவிட்டனர். இவ்வாறு வேற்றுமைப் படுத்தும் மானிடர்களை நோக்கி எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "நீங்கள் யாவரும் இறைவனால் படைக்கப்பட்டவைகளில் மானிடர்களாகயிருக்கும்" என்னும் திருவஸனத்தை ஓதிக்காண்பித்துவிட்டார்கள். மேலும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இவண் காணப்படும் சகல வித்தியாசங்களையும் ஒழித்து சகல மானிடர்களையும் ஒரே மைதானத்தில் கொணர்ந்து சேர்த்து "மானிடர்காள்! உங்களில் பேணுதலுடையவன்தான் மகாசிரேஷ்டமானவனென்பதை நீங்கள் அறிந்துகோள்வதற்காக வேண்டி உங்களை பற்பல குடும்பத்தினர்களாகவும் பற்பல சமுகத்தினர்களாகவும் படைத்து விட்டோம்" என்னும் திருவாக்கியத்தைஓதிக்காண்பித்து விட்டார்கள். மூர்க்க குணம்படைத்த அரபியர்களின் மாபெரும் சபையில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நின்று "மௌட்டீக காலத்து அகங்காரத்தையும் குடும்பத்தைக் கொண்டு பெருமை பாராட்டிக் கொள்வதையும் அல்லாஹ் தஆலாஅடியோடு ஒழித்து விட்டான், நீங்கள்யாவரும் ஆதமுடைய (அலை) மக்களாகும் ஆதம் (அலை) மண்ணால் படைக்கப்பட்டவராகும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். அரபியர்கள், அரபி அல்லாதவர்களைவிட மேலென்றும் அரபி அல்லாதார், அரபிகளைவிட மேலென்றும் வெள்ளையர், கருப்பரைவிட மேலென்றும் கருப்பர், வெள்ளையரைவிட மேலென்றும் கூறிக்கொண்டிருந்த தாவாவானது இற்றைக்கு அழிந்தொழிந்து போயிற்று. இது விஷயமாய் "அரபிகள், அரபி அல்லாதாரைவிட மேலானவர்களல்ல, அவ்வாறே அரபி அல்லாதார்களைவிட் அரபிகள் மேலானவர்களல்ல; கருப்பரும் வெள்ளையரும் ஒருவருக்கொருவர் மேன்பட்டவர்களல்லர்" எனத் திருவாய் மலந்திருளினார்கள்.

முடிவாக எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் இப்போதனையானது, சகல மன்பதைகளையும் ஒரே விதமாகப்பாவிக்கும்படி செய்து விட்டது. இதனால் அரபியரும் அரபி அல்லாதாரும் வெள்ளையரும் கருப்பரும் இந்துக்களும் சீனர்களும் மனிதர் என்னும் முறையில் ஒரேமைதானத்தில் தோளோடு தோள் சேர்ந்து நிற்கக்கூடிய

வர்களாக ஆய்விட்டனர். ஏகத்துவத்தையும், நபித்துவத்தையும் ஒப்புக்கொண்டுள்ள எத்தேசத்து மானிடரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆய்விடுகின்றனர்; இறைவனை பயந்து நடக்கும் நற்குணத்தைத் தவிர மற்ற எல்லாப் பெருமைகளும் அழிக்கப்பட்டுப் போய்விட்டது.

“அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ள வேண்டாம்; கோபப்பட்டுக் கொள்ளவேண்டாம்; நீங்கள் சகோதிரர்களாக ஆய்விடுங்கள்” என உலகத்தினருக்கு அறிவிக்கப்பட்டது.

இலௌகீக வைதீக ஒற்றுமை

இலௌகீகம் வேறு வைதீகம் வேறு என்று ஜனங்கள் நினைத்திருந்ததானது மாபெரும் தவறேயாகும். இம்மாதிரியான அநேகத் தப்பெண்ணங்களில் மானிடர் மூழ்கிப்போய் இருக்கின்றனர். யார் வைதீகத்தைத் தெரிந்து கொள்கின்றானோ அவன் இலௌகீகத்தை விட்டுப் புறம்பாய் விடுகின்றான் என்றும், எவன் இலௌகீகத்தைத் தெரிந்து கொள்கின்றானோ அவன் கையிலிருந்து வைதீகத்தின் கயிறு அறுந்து போகிறதென்றும் கருதியிருந்தனர். இக்கொள்கை ஈரானியர்கள், இந்துக்கள், சீனர்கள் முதலிய கீழ்ப் பிரதேசத்தினரிடம் உருவெடுத்திருந்தது. கிறிஸ்தவர்களின் கோவிலில் வீற்றிருக்கும் பாதரிகளுக்கும் போர்முனையில் நிற்கும் இராஜர்களுக்கும் மத்தியில் பலமான திரைபோடப்பட்டு ஒருவருக்கொருவர் எவ்விதத்தும் கலந்துறவாட முடியாதவர்களாயிருந்தார்கள். இந்நிலைமையில் தாங்கள்தான் அருள் வேதத்தைப் பின்பற்றி நடக்கக் கூடியவர்களென்பதாயும், ஆண்டவனது திருத்தூதர்கள் தங்களுக்காகவேதான் வந்திருப்பதாகவும் செப்பிக்கொண்டிருக்கும் வகுப்பார்களைப்பற்றி ஆராய வேண்டியிருக்கின்றது. மானிடர்களை பற்பல வகுப்பாய்ப் பிரித்து வைத்திருக்கும் இந்துகளினுடையவும் புத்தர்களினுடையவும் கன்போஷியர்களினுடையவும் ஜர்தஷ்த்தியர்களுடையவும் மார்க்கத்தை கவனித்துப் பார்ப்போமாயின் அவர்களில் ஒருவகுப்பார் வைதீக சம்மந்தமான காரியங்களுக்காவும் மற்றோர் வகுப்பார் இலௌகீக சம்மந்தமான வேலைக்கென்றும் ஒதுக்கப்பட்டிருக்கின்றனரென்பதைத் தெரிந்துகொள்கின்றோம். உதாரணமாக பிராமணர்கள் வைதீகத்திற்காகவே என்றும், இராஜபுத்திரர்கள் இராஜ்ய பரிபாலனம் செய்வதற்காகவே என்றும், விஷ்ணுவர்கள் வியாபாரம் வெள்ளாமை செய்வதற்காகவே என்றும், சூத்திரர்கள் கூலிவேலை பார்ப்பதற்காகவே என்றும் படைக்கப்பட்டிருக்கின்றதாகக் கூறிக் கொள்கின்றனர். அவர்களிற் சிலர் தங்கள் வாணாட்களைப் பாகுபாடு செய்து முப்பது வருடம் கல்வி பயிலவேண்டும்; முப்பது ஆண்டு தொழில் புரியவேண்டும், முப்பது ஆண்டு வணக்கம் புரியவேண்டுமெனக் கூறிக்கொண்டிருந்தனர். புத்தர்களில் சாதுக்கள், வேத ஊழியம் செய்வதற்காகவே ஒதுக்கப்பட்டிருந்தனர். மற்றவர்களோ இலௌகீகத்தொழில் புரிவதோடு சாதுக்களுக்குத் தேவைப்படும் யாவற்றையும்கொடுப்பதற்கும் கடமைப்பட்டிருந்தனர். எஹூதிகளில் குறி சொல்பவர்கள் இருந்துகொண்டிருந்தனர். அவர்கள் வைதீக விஷயத்திற்காகவென்றே பிரத்தியேகமாகயிருந்தனர். அவர்களுக்கு உலகப் பொருளான குடும்பச்சொத்திலிருந்து எவ்வித பாகமும் கிடைப்பதில்லை. மற்றவர்களெல்லாம் இலௌகீக விஷயங்களில் மட்டும் பற்றுக்கொண்டவர்களாகயிருந்தார்கள். கிறிஸ்தவர்கள் இவ்வேற்றுமைகளை இன்னும் சற்று பலப்படுத்திவிட்டனர்.

யூதர்கள், இலௌகீகம் வைதீகத்தினுடையப் பிரயோசனங்கள் உலகத்திலேயே கிடைத்து விடுமெனக் கருதினர். கிறிஸ்தவர்கள் மறுமையில்தான் கிடைக்குமென்று கூறினர் இதற்காகத்தான் யூதர்கள் வைதீகத்தை மேல்மாடியில் வைத்துவிட்டு தங்களது முழு கவனத்தையும் இலௌகீகத்திலேயே செலுத்திக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நன்மையான காரியத்தின் பிரதிப் பலன் உலகத்தினுள்ள காருண்யங்கள்தான் என மதித்திருந்தனர். இதனால் அவர்களிலனேகர் உலகத்திலுள்ள காருண்யங்கள் மீது நம்பிக்கை பூண்டு மறுமையை ஏக தேசத்தில் மறுக்கின்றனர். முற்காலத்திய கிறிஸ்தவர்கள் இலௌகீகப் பொருள்களை கையால்கூடத் தீண்டமாட்டார்கள். ஒவ்வொரு வஸ்துக்களும் விண்ணுலகிலிருந்து கிடைக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பர். இதனாலேயே அவர்கள் இலௌகீக சுகபோகங்களை எல்லாம்

உதறித் தள்ளி சாதுக்களை போன்று காலங் கழிப்பதைத் தெரிந்துகொண்டனர்.

ஆனால் இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் மூலமாக இஸ்லாம் வெளிவந்தவுடன் புராதன தப்பெண்ணங்களெல்லாம் அகற்றப்பட்டுப் போயிற்று; தீன் துன்யா வென்னும் இலௌகீகம் வைதீகம் இரண்டும் வெவ்வேறன்று; ஒன்றுக்கொன்று சம்மந்தம் வைத்திருப்பவையாகு மென்று இஸ்லாம் நிரூபித்துவிட்டது. வைதிக விஷயத்தில் மனோ இச்சைகள் கலந்து விடின் அவை இலௌகீகமாக ஆய்விடுகின்றது. இலௌகீக காரியங்கள் இறைவனது திருக்கட்டளைகளை கவனித்து நடத்தப்படின் அதுவே தீனாக ஆய்விடுகின்றது. இதேபோன்று எவை இலௌகீக மென்று கருதப்படுகின்றதோ அதை ஆண்டவனுக்காகச் செய்யப்படுமாயின் அஃது தீனாக ஆய்விடுகின்றது. உதாஹரணமாக அதிகாரம் இராஜிய பரிபாலனம் இவைகள் துன்யாவென்றே கருதப்படுகின்றது. என்றாலும் அதுவும் ஆண்டவனுடைய பொருத்தத்திற்காகச் செய்யப்படின் தீனாக ஆய்விடுகின்றது. ஐஸ்வரியங்களை சம்பாதிப்பது துன்யாவாக யிருந்தாலும் மானிடர்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்னும் கருத்தைக்கொண் டிருக்குமாயின் அதுவும் தீனாக ஆய்விடுகின்றது.

இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் (அவர்களுக்கு என் தாயும் தந்தையும் அற்பணமாகுக) இதனை வெகு நேர்மையானவும் அழகு வாய்ந்தவுமான கிரியாம்சையில் செய்து காட்டியுள்ளார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்களினது தொழுகை நோம்பு ஜகாத், ஹஜ்ஜு இராப்பகல் வணக்கங்கள், குர்ஆன் பாராயணம் இஸ்லாமியப் பிரசாரம் யுத்தம் புரிதல், ஜெயபேரிகைகள், அவசியமான இராஜிய விஷயத்தில் தலையிடுதல் சுருங்கச்சொல்லின் அவர்களது நிகழ்ச்சியின் ஒவ்வொரு சம்பவங்களும் தீனும் துன்யாவுமாக யிருந்தது. முக்கியமாய் எம்பெருமானார் (ஸல்) அவர்கள், காலத்தின் சிக்கந்தராகவும், தேசத்தின் கைஸராகவும் ஏற்பட்டபொழுதும் ஆண்டவனின் திருத் தூதராகவும் அவனது ஊழியம் செய்யும் அடியாராகவும் விளங்காநின்றார்கள். நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களது கலீபாக்களும் மேன்மை பொருந்திய சஹாபாக்களும் இந்த நுட்பத்தை விளக்கிக் காட்டிவிட்டார்கள். பொன்னை போன்று போற்றத்தக்க அவர்களின் ஒவ்வொரு காரியாதிகளிலும், தீனும் துன்யாவும் ஒன்றுபோல் கலந்து இலங்கிக்கொண்டிருந்தது. மானிடனின் செயலின் கூலியானது தீன் துன்யா இவ்விரண்டிலும் சம்மந்தப்பட்டிருக்கிறதென குர்ஆன் ஷரீபானது பற்பல திரு அத்தியாயங்கள் மூலம் அறிவித்திருக்கின்றது. அதாவது மானிடன் புரியும் நன்மை தீமைகளுக் குள்ள பிரதிப்பலனானது உலகத்திலும் கிடைக்கின்றது; மறுமையிலும் கிடைக்கும் என்பதாகும். இந்த இரகசியம் மேன்மை வாய்ந்த சஹாபாக்களுக்குப் பின் சிலகாலம் வரை முஸ்லிம்களின் கவனத்திலிருந்துவந்தது. அவர்கள் இதை ஞாபகத்தில் வைத்திருக்கும் வரை அவர்களது செயல்களெல்லாம் நன்கு இலங்கிக்கொண்டிருந்தது. அவர்களுடைய தீன் துன்யாவாகவும், துன்யா தீனாகவு மிருந்தது.

இம் மேலான நோக்கத்தில் மாறுதல் ஏற்பட்டது முதல் முஸ்லிம்களின் காரியாதிகளெல்லாம் சீர் குலைந்து பரிசுத்த இஸ்லாமியக் கொள்கைக்கு மாற்றமாய் யூதகிறிஸ்தவக் கொள்கைகள் அவர்களிடத்து இலங்க ஆரம்பித்தது. அதனால் வேதக் காரர்களைப் போன்று இலௌகீகம் வேறு வைதீகம் வேறு என்னும் பாகு பாடு ஏற்பட்டு சிலர் துன்யாவைத் தெரிந்துகொண்டு தீனை மறந்துவிட்டனர்; சிலர் தீனைத் தெரிந்துகொண்டு துன்யாவை மறந்து விட்டனர். இதற்குத் தக்க உதாஹரணம் கிலாபத் ஆக்ஷியில்காணலாம். அதாவது:—முற்காலத்து ஆக்ஷியில் கலீபாவானவர் வைதீக விஷயத்தில் முன் மாதரியானவராகவும் இலௌகீக விஷயத்தில் தலைவராகவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தார். பிற்காலத்தில் வைதிக அதிகாரம் ஒரு சாராரிடமும் இலௌகீக சம்மந்தம் மற்றோர் சாராரிடமும் ஆய்விட்டது இப்பிரிவினையானது முஸ்லிம்களின் சமுதாயக்கட்டுப் பாட்டை வெகுவாய் பாதிக்கச் செய்துவிட்டது. இதனை சரித்திர நிபுணர்களென்ன சாமான்யர்களுங்கூடத் தெரிந்துகொள்வர். முஸ்லிம் சோதரர்கள் தற்காலத்திலுள்ள க்ஷீணதிசையை உன்னி தங்கள் முன்னேற்றத்திற்கும் மேன்பதவி அடைவதற்கும் காரணமாயிருந்த உயரிய நோக்கத்தை கவனிப்பார்களாக.

இற்றைக்கு முஸ்லிம்கள், யூதர்களுடையவும் கிறிஸ்தவர்களுடையவும் இக்கொள்கைகளைப் பின்பற்றுவதினுல் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களின் போதனைகள் அவர்களது பார்வையை விட்டுப்பெரும்பாலும் மறைந்துபோயிருக்கின்றது. முற்காலத்தில் நம்முடைய சேனுதிபதிகளே தொழுகைக்கு இமாமாக யிருந்தனர்; பிரசங்க மேடையும் சிம்மாசனமும் ஒன்ருகவேயிருந்தது. ஆனுல் இற்றைக்கு பிரசங்கமேடைவேறு, சிம்மாசனம்வேறு எனவும், சேனுதிபதிக்கும் இமாமுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை எனவும் கருதுகின்றனர். முஸ்லிம் சோதரர்கள் சில காலமாக எம்பெருமானுர் (ஸல்.) அவர்களினது படிப்பினையை மறந்து இலௌகிகம் வைதீகத்திற்கிடையில்வித்தியாசம்பாராட்ட ஆரம்பித்துவிட்டனர். இதனுல் அவர்கள் ஆண்டவன், சக்ரவர்த்தி இவ்விருவர்களின் அடிமைகளாக ஆய்விட்டனர் மேலும் இராஜாங்கம், அதிகாரம், வியாபாரம், தொண்டு, வித்தை கற்பது போன்றவைகளை இலௌகிகமென்றும் தொழுகை, நோன்பு, தஸ்பீஹ், தியானம் முதலியவைகள் தான் வைதீகமென்றும் கருதுகின்றனர். ஆனுல் இலௌகிகத்தினுடைய ஒவ்வொரு வேலைகளும் இராஜிய முயற்சிகளும் வியாபாரத் தொழின்முறைகளும் நல்லெண்ணத்துடனிருக்குமாயின் அதுவே தீனுகவும், கெட்டெண்ணத்தைக் கொண்டு இரவு முழுதும் வணங்கும் தொழுகையும் பகல் முழுதும் நோர்க்கும் நோன்பும் துன்யாவாகவும் மாறி விடுகின்றது என்பது திண்ணம். நமது உலகரெட்சகர் நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் போதித்த சன்மார்க்கத்தின் ஏதாகிலுமொரு விதத்தில் தீன் வேறு, துன்யா வேறு என்று காணப்படினும், அது காரியாதிகளின் வித்தியாசமன்று; ஹிருதயங்களில் ஏற்படும் எண்ணங்களின் வித்தியாசத்தைக்கொண்டு அவைகள் வேறுபடுகின்றன எனக்கொள்ளல் வேண்டும். இதனுலேயே தான் இஸ்லாம் எற்றைக்கு வெளிவந்ததோ அத்துடனேயே அதிகாரத்தையும் இராஜியத்தையும் கொண்டு வந்தது.

புத்தமதத்தில் இலௌகிகம் வேறு வைதீகம் வேறு எனக்குறிப்பிடப்பட்டிருக்கின்றது இஸ்ரவேலர்களுக்கு மார்க்கம் வந்த 400 வருடங்களுக்குப்பின் இராஜாங்கம் கிடைத்தது. கிறிஸ்தவர்களுக்கு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்திற்கு பந்நூறு வருடங்களுக்குப் பின் சிம்மாசனத்தின் முகத்தைப் பார்க்கும் பாக்கியம்கிடைத்தது. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் எதுபொழுது மதீனுவில் தங்கள் மிம்பரை (பிரசங்கமேடையை) ஏற்படுத்தினுர்களோ அதுபொழுதே உலகத்தின் சிம்மாஸனத்தின் அதிபதியாகவும் ஆய்விட்டார்கள். அதன்பின் முப்பது வருடங்களுக்கிடையில் பாரசீகக்குடா முதல் கருங்கடல் வரையிலுள்ள ஒவ்வொரு இடங்களிலும், நற்குணம் கல்வி நற்கிருபை நியதி சமத்துவம் நாகரீகம் தேசியம் முதலிய விஷயங்கள் புற்றுயிர் பெற்று விளங்கிற்று. உலகம் அதுவரை கண்டறியாத விதமாய் முஸ்லிம்களும் வேதக்காரர்களும் சகோதரத்துவம் சமாதானத்துடன் வாழ்ந்துவரலாயினர். அரபிகளும் அவர் களல்லாதாரும் துர்க்கியரும் இந்தியர்களும், பர்பரியர்களும் ஹபஷி நிக்ரோயர்களும் சேர்ந்து லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுற் றசூலுல்லாஹ் என்னும் ஒற்றுமைக்கொடியின்கீழ் எங்கும் காணமுடியாத ஓர் ஐக்கியத்திற்குள் கட்டுண்டு போய்விட்டனர்.

இம்மகத்துவம் பொருந்திய மாறுதலுக்குக் காரணம், இலௌகிகம் வைதீகம் இவ்விரண்டிற்கு மத்தியில் வித்தியாசம்செய்துகொண்டிருந்த சுவற்றைஇடித்தழித்துவிட்டதாகும். உலகத்தை வெறுத்திருப்பது, மூலை பிடித்து உட்கார்ந்திருப்பதற்கு மட்டுந்தான் வணக்கம்புரிவதென்று கூறப்படுவதில்லை. ஆனுல் தேசங்களை ஜெயிப்பதும், கலாசாலைகளை உற்பத்திசெய்வதும், வியாபார நிமித்தம் கடல் திடல்யாத்திரைசெய்வதும், யுத்தத்திலீடுபடுவதும், சமாதானத்திற்காக முற்படுவதும், ஒழுங்கான முறையில்ஜீவனம் செய்வதற்கு முயற்சிப்பதும், ஏழை பரதேசிகளுக்கு உபகாரம்புரிவதும், குடும்பத்தினர்கட்கு பணிவிடை செய்வதும், ஆண்டவனது பாதையில் யுத்தஞ் செய்வதும் முஹம்மத் முஸ்தபா (ஸல்.) அவர்களின்மார்க்கத்தில் வைதீகமாக யிருந்தது. ஆதலின் ஒவ்வொரு முஸ்லிமினுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு முயற்சியும் ஆண்டவனுடைய பொருத்தத்திற்காக யிருக்குமாயின் அவை அடங்கலும் தீனுக ஆய்விடும்.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் அவர்கள் வைதீகம் இலௌகீகம் இரண்டையும் ஒன்றெனக் கருதுவதை மறந்து விட்டதும், இராஜர்கள் இலௌகீகத்திலும், ஷெய்குல் இஸ்லாம் வைதீகத்திலும் பொறுப் பெடுத்துக் கொண்டதும், கிறிஸ்தவர்களைப் போன்று இலௌகீகம் வேறு வைதீகம் வேறு எனக் கருதியதும், மார்க்கக்காரியங்கள் இன்னின்னவைகளென்றும் உலகக்காரிரிங்கள் இன்னின்னவைகளென்று பாகுபாடு செய்ததும், சிலர் சத்திரம்சாவடிகளில் உட்கார்ந்து கொண்டு தாங்கள் தான் மார்க்கசேவை புரிபவர்களென்று கூறியதும், வியாபாரத்தில் முழு கவனத்தையுஞ் செலுத்தி வேலை செய்பவர்கள், தாங்கள் துன்யாவின் காரியாதியில் ஈடுபட்டிருப்பதாகக் கருதியதுமாகும். இதன் பயனாய் மார்க்கசேவை புரிபவர்களென்று கூறிக் கொண்டிருந்தவர்கள் துன்யாவினுடைய வேலைக்குத் தகுதியில்லாதவர்களாகவும், உலக விவகாரங்களில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தவர்கள் மறுமையை மறந்து ஆண்டவனுடைய பொருத்தத்தை இழந்தவர்களாகவும் ஆய்விட்டனர்.

இதுபொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பக்தகோடிகள் இலௌகீகம் வைதீகம் இவ்விரண்டும் ஒன்றென்னும் இரகசியத்தை அறிந்துகொண்டு ஜெயம்பெற வேண்டியதற்குள்ள வழிகளை இதே ஏகத்துவத்தில் பெற்றுக் கொள்ள முயற்சிப்பார்களாக. அவர்கள் வியாபார ஸ்தலங்களில் அல்லாஹ்வுக்காக சம்பாத்தியஞ் செய்வதும், யுத்த களங்களில் அல்லாஹ்வுக்காகத் தங்கள் இன்னுயிர்களை தியாகஞ்செய்வதும், கலாசாலைகளில் பிரயோசனம் தரத்தக்க கல்விகளைப் பயில்வதும் ஆராய்ச்சி சாலைகளில் கவனஞ்செலுத்தி நவீன முறைகளைக் கையாள முயற்சிப்பதும் அத்தியா அவசியமாகும். முடிவாக இலௌகீகத்துடன் வைதீக பாக்கியங்களையும் வைதீகத்துடன் இலௌகீக பாக்கியங்களையும் அடைய முயற்சிப்பார்களாக.

ஆகிர்தஃவானு அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலாசெய்யிதில் முர்ஸலீன் வஅலா ஆலிஹி வஸ்ஹபிஹி அஜ்மயீன்.

ஸையத் சுலைமான் நத்வீ.

எம்பெருமானார் (ஸல்.)க்குச் சொந்தமான இலக்ஷணங்கள்

ஒருவருக்கு மாத்திரம் சொந்தமாகவும், மற்றவருக்கு அதில் சம்பந்தமில்லாமலுமுள்ள உரிமைகளுக்கு அறபிகள் குஸூஸியாத் என்றும் கஸாயிஸ் என்றும் கூறுவர். ஆகவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் இத்தகைய விசேஷ உரிமைகள் இறைவனளிக்கப்பட்டிருந்தன. அத்தகைய உரிமைகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் நபித்துவத்திற்குச் சொந்தமானதாகவும், நாயகம் (ஸல்.) அவர்களுக்குச் சொந்தமானதாகவும் இருக்கின்றன. இந்த வியாசத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு சொந்தமாக இருந்த உரிமைகளில் சிலவற்றை விளக்குவான்!

நபிகள் நாயம் (ஸல்.) அவர்களுக்கு இறைவனால் நுபுவ்வத்து அளிக்கப்பட்டிருக்கிறது. வஹீ இறக்கப்பட்டது. ஷரீஅத்துக் கொடுக்கப்பட்டது. நாயகம் (ஸல்.) அவர்களிடம் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் உம்மத்துகளில் இத்தகைய உரிமைகள் நாயகமவர்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. ஆகவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் வேறு எவரும் தம்மை நபி என்று கூறிக்கொள்ளவோ, தமக்கென ஒரு மத முண்டு என்று சொல்லவோ, தம்மிடம் ஜிப்ரயீல் வருவதாகவோ, அல்லது வஹீ வருவதாக விளம்பவோ உரிமை இல்லை. இவர்கள் பாப மற்றவர்களு மில்லை. இறைவனால் பாபத்தை விட்டுக் காக்கப்பெற்ற பரிசுத்தமானவர்களாகவுமில்லை.

விவாக விஷயமாக நாயகம் (ஸல்.) அவர்களுக்குச் சில உரிமைகள் அளிக்கப்பட்டிருந்

தன. அவ்வுரிமைகள் உம்மத்துகளுக்கு அளிக்கப்படவில்லை. அவைகளாவன :—

1. முஸ்லிம் பொது ஜனங்களில் தன் மனைவி மார்களிடம் நியாயமாகவும் நீதியாகவும் நடந்துகொள்ளச் சக்தியுள்ளவர் நான்கு மனைவியர் வரை மணந்து கொள்ளலாம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அதற்கு மேலும் அதிக மனைவிகளை வைத்துக்கொள்ள உரிமை இருந்தது.

2. ஒரு பெண் மஹர்தொகை இல்லாமலே நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மனைவியாக இருக்க விரும்பி, அவர்களும் அவ்வாறே மனைவியாக்கிக்கொள்ள இஷ்டப்படின் மஹரில்லாமலே அப்பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள உரிமை இருந்தது. இவ்வித உரிமை நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இருந்ததாயினும் அவ்வாறு நடைபெற வில்லை. நாயகம் (ஸல்.) அவர்களைத் தவிரவுள்ள ஏனையர்களுக்கு மஹரில்லாமல் மனைவியாக்கிக் கொள்ள உரிமை கிடையாது. ஆனால், ஒரு பெண் விவாககாலத்தில் மஹருடன் விவாகஞ் செய்துகொண்டு பின்னர் தனக்குச் சேர வேண்டிய மஹர் தொகையை மன்னித்து விடுதல் ஆகும். ஆனால், மஹர் இத்தனை என்று கூறாமல் ஒரு பெண்ணை விவாகஞ் செய்தாலுங்கூட அப்பெண் போலொற்றவளுக்கு வழக்கத்திலுள்ள தொகையை இவளுக்குக் கொடுப்பது கடமையாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மஹரில்லாமல் மண மில்லை.

3. விவாக சம்பந்தமான வஹீ வருவதற்கு முன் நாயகம் (ஸல்.) அவர்களிடம் மஹர் பெற்றோ, அல்லது மகரில்லாமலோ மனைவியராக இருந்தவர்கள் மாத்திரமே அதற்குப் பின்னும் மனைவியராக இருக்க முடிந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சம்பந்தப்புரத்தில் விவாகஞ் செய்ய ஹலாலாக இருந்த பெண்களில் நாயகம் (ஸல்.) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்த பெண்களையே நாயகம் (ஸல்.) அவர்கள் மணக்க அனுமதிக்கப்பட் டிருந்தார்கள். ஆனால், ஏனைய முஸ்லிம்களுக்கு இக் கட்டுத்திட்டம் இருக்கவில்லை.

4. வேதத்தை யுடைய வகுப்புப் பெண்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவாவிட்டாலும் ஷிர்க்கு வைக்காமல் அவ்வேதங்களில் உள்படி நடந்து வந்தால் அவர்களை மணந்து கொள்ள முஸ்லிம் பொதுஜனங்களுக்கு உரிமை கிடைத்திருந்தது. நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அஹ்ல கித்தாபியாக்களை மணக்க உரிமை இருக்கவில்லை.

5. விவாகச் சட்டம் வந்த காலத்து நாயகம் (ஸல்) அவர்களுக்கு மனைவியராக இருந்தவர்களில் எவரையும் அதன்பின் விவாக விலக்குச் செய்துவிட்டு வேறு பெண்ணை மணக்க நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அனுமதி இல்லை.

6. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மனைவியராக இருந்தவர்களில் சிலரைத் தங்களுடன் வைத்துக் கொள்ளவும் சிலரை தங்களை விட்டுப் பிரித்து வைத்துக்கொள்ளவும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் மனைவிமார்களில் ஹஜ்ரத் ஆயிஷா, ஹப்ஸா, ஜைனப், உம்முஸல்மா ஆகிய நான்கு பேர்களைத் தங்களுடன் வைத்துக்கொண்டார்கள். மற்றவர்கள் நாயகமவர்களின் மனையர் என்ற பெரும் பேறு பெற்றிருந்தார்களாயினும் நாயகம் (ஸல்.) அவர்களுடன் சேர்ந்திருக்க வில்லை.

7. நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவியர்கள் நாயகம் (ஸல்.) அவர்களின் காலத்திற்குப்பின் மற்றவர்களின் மணவாழ்க்கையிலிருக்க அனுமதி இருக்கவில்லை.

இவ்விபரங்களெல்லாம் திரு குர்ஆனில் ஸூறத்துல் அஹ்ஸாபில் கூறப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவர்களோவெனின், பெண்ணாசையால் பல தாரம் மணந்தார்களென்று றஸூல் அதிபர் (ஸல்.) அவர்கள் மீது பழி சுமத்துகின்றனர். நாயகம் (ஸல்.) அவர்களின் செயலுக்குத் தக்க காரணமில்லாமல் போகவுமில்லை. ஆதலின் அவைகளை ஈண்டு சுருக்கமாக விளக்குவான்.

இஸ்லாம் மதம் தோன்றி விவாகச்சட்டத்தை விளம்பரப்படுத்துவதற்கு முன் அறபி தேசத்தில் எத்தனை பெண்களை மணந்து கொள்ளலாம் என்பதற்கு எவ்விதத் தடையுமிருக்கவில்லை. எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஒரு ஆடவன் மணந்துகொள்ளலாம். இவ்விதமாகக் கட்டுத்திட்டமில்லாத் தன்மை அரபிகளில் மாத்திரமின்றி பனூ இஸ்ருயீல்களிலுங் கூட இருந்தது. இவர்

களிலன்றி ஏனைய தேசத்தினரிலும் இவ்வழக்கம் அக்காலத்திலிருந்ததாகத் தெரியவருகிறது. நூற்றுக் கணக்கான மனைவியரை வைத்திருந்த நபிமார்களின் பெயர்கள் பல தௌராத் வேதத்தில் காணப்படுகிறது. நம் இந்திய தேசத்திலுள்ள இந்துப் புராணங்களில் ஆயிரக்கணக்கென்ன 12 இலக்ஷக்கணக்கான பெண்களை மணந்த சமாச்சாரங்கள் கூடக் காணப்படுகின்றன.

இவ்வித நிலைமையில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் வாலிபப் பருவமாகிய 25 வயது முதல் 50 வயதுவரை ஒருதார வாழ்க்கையையே நடத்தி வந்திருக்கின்றார்கள். அதிலும் அந்த ஒருதாரமும் தங்களைப்பார்க்கிலும் பல வயதுகள் முதிர்ந்த பெண்ணாகவும், வேறு புருஷனை மணந்து மக்கட் பேறு பெற்றவராகவும் இருந்தவர். இவ்விதமாக இருந்த முதல் மனைவி இறந்தபின் நாயகம் (ஸல்.) அவர்கள் இரண்டு விவாகங்களைச்செய்தார்கள். அதில் ஹஜ்ரத் ஆயிஷா (றலி.) ஒருவர். நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வம்மையை மணக்கும்போது இவ்வம்மைக்கு வயது 6 அல்லது அதற்கு ஒன்றிரண்டு வயது அதிகமிருக்கும். ஆகவே 6 வயதுச் சிறு பெண்ணை 50 வயது சென்ற ஒருவர் மணப்பதென்றால் அம்மணத்தின் நோக்கம் யாதாக இருக்கவேண்டும். அதாவது தங்கள் குடும்பத்திற்கும் தங்கள் சம்மந்தியின் குடும்பத்திற்கும் இடையிலுள்ள அந்நியோன்யம் இன்னும் அதிகமாக வளரட்டும் ; ஐக்கிய முண்டாகட்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறு இருக்கமுடியாது. இத்தகைய சிறு குழந்தையை விவாகஞ் செய்து கொடுத்தவர்களின் நோக்கமும் இதைத் தவிர வேறு இருந்திருக்க நியாயமில்லை. மேலும் நாயகி அவர்கள் கல்விக் கேள்விகளில் தீக்ஷணிய முடையவர்களா யிருந்தார்கள் ; அவர்கள் மூலம் பெண்களுக்குரிய கலைகளை பெருக்கவும் நாயகமவர்களுக்கு உத்தேசமிருந்தது.

மற்றொருவர் ஹஜ்ரத் ஸௌதா. இவர் வயது வந்தவர். இவர் மனைவியாக இருக்கவும் குடும்பத்தை நடத்தவும் தகுதியுடையவரே. ஹஜ்ரத் கதீஜா நாயகிக்குப்பின் அடுத்தபடியாக நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மனைவியாகும் பாக்கியம் ஹஜ்ரத் "ஸௌதா"வுக்கே கிடைத்ததெனக் கூறுகின்றனர். வேறு பலர் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) என்கின்றனர். எவ்வாறாயினும் இவ்விருவரின் விவாகமும் மிகமிக நெருங்கிய காலத்திலேயே நடந்ததாகத் தெரியவருகிறது. ஆயினும் நாயகம் (ஸல்.) அவர்களின் குடும்பத்தை நடத்தத் தகுதியாக இருந்தவர் இவரே.

பின்பு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மதீனாவுக்கு வந்தபின் பல மணங்களைப் புரிந்தார்கள். அம்மாதரசிகளின் நிலைமையை உற்று நோக்கினால் அவர்கள் அறபித்தலைவர்களின் அருமைப்புதல்விகள் என்பதும் நாயகமவர்கள் அவர்களை மணந்ததெல்லாம் இஸ்லாத்தின் நன்மையைக்கருதியும், பலகுடும்பங்களுடன் தங்களுக்குநெருங்கிய சம்பந்தமிருந்தால் இஸ்லாத்திற்கு பலமேற்படு மென்ற எண்ணத்தை கருதியுமேயாகும். அவர்களாவன :—ஹஜ்றத் ஆயிஷா (ரலி.) நாயகியோ ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களுடையபுதல்வி. ஹஜ்றத் ஹப்ஸாவோ ஹஜ்றத் உமர் பாறூக் (ரலி.) அவர்களின் புத்திரியாவர். ஹஜ்றத் உம்முஹபீபா பனூ உமய்யாக்களின் தலைவரான அபூஸுப்யானின் செல்வகுமாரி. ஹஜ்றத் ஜுவைரிய்யா பனூமுஸ்தலக் கபீலாவின் தலைவி. ஹஜ்றத் ஸபிய்யா கைபர் தலைவரின் புதல்வி.

இவர்களைத் தவிரவுள்ள ஏனையர்கள் விதவையாகவும் வயது அதிகமானவர்களாகவுமிருந்தார்கள். இவர்களுக்கு அன்ன வஸ்திரமளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காகவே நாயகம் (ஸல்.) அவர்கள் அவர்களை மணந்திருக்கிறார்கள். ஹஜ்றத் ஸௌதா, ஹஜ்றத் உம்முஸல்மா, ஹஜ்றத் மைமூனா, ஹஜ்றத் ஜைனப் உம்முல் மஸாக்கீன் (ரலி.) ஆகிய நம்பிராட்டிமார்கள் யாவரும் விதவைகள். ஹஜ்றத் ஜைனப் பிந்து ஜஹஷ் விதவையாக இருக்கவில்லையாயினும் விவாக விடுதலைபெற்றவர். நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இருந்த இத்தனை மனைவியர்களில் ஹஜ்றத் ஆயிஷா ஒருவரைத் தவிர மற்றவர்கள் யாவரும் விதவைகளாகவோ, விவாக விலக்குப் பெற்றவராகவோ இருந்திருக்கிறார்கள். தங்களின் வாலிபப் பருவத்தில் தங்களைப் பார்க்கிலும் பத்துப்பதினைந்து வருஷங்கள் மூத்ததாகவுள்ள பெண்ணை மணந்து 50-வயதுக்கு மேல் 6-வயதுள்ள ஹஜ்றத் ஆயிஷாவை கலியாணஞ் செய்தால் நாயகம் (ஸல்.) அவர்கள்

பெண்ணாசையில் மணந்தார்களா அல்லது வேறு காரணத்தை உத்தேசித்து மணந்தார்களா என்பது தெரியவரும்.

தவிரவும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அழகிய பெண்களை மணக்க விரும்பியிருப்பார்களாயின் அவர்களுக்குத் தங்கள் புத்திரிகளை மணஞ்செய்து கொடுக்க எத்தனையோ குறைஷித் தலைவர்கள் தயாராக இருந்தார்கள். இதை அவர்கள், நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரியப்படுத்தியுமிருந்தார்கள். இவ்விஷயங்களை, நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவிலிருந்த காலத்தின் விபரத்தில் பார்த்தால் காணலாம். ஆகவே நாயம் (ஸல்.) அவர்கள் பலவிதக்கோத்திரத்துப் பெண்களை பலதரப்பட்ட வயதில் மணந்ததெல்லாம் இஸ்லாத்தின் அபிவிருத்தியைக் கருதியும் இஸ்லாமிய சட்டங்களின் நுட்பங்களை அறியக் கருதியுமேயாகும்.

இனி இஸ்லாம் மதமானது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் நபித்துவத்தின் பெருமையை நிலைநாட்டவும், பெண்களிடம் இஸ்லாம்மதச் சட்டங்களைப் பிரசாரஞ் செய்யவும் வேண்டி நம் பிராட்டிமார்கள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் வேறு யாரையும் மணந்துகொள்ளக் கூடாது எனத் தீர்மானித்தது. அவர்கள் முஸ்லிம்களின் தாய்மார்களாயினர். இவ்வித நிலைமையில் தான் 4 பேர்களுக்குமேல் அதிகமான பெண்களை மணந்துகொள்ளக் கூடாதென விவாகச் சட்டம் இறைவனால் அறிவிக்கப்பட்டது. இச்சட்டத்தை உத்தேசித்து நாயகம் (ஸல்.) அவர்கள் நான்கு பேர்களை மாத்திரம் நிறுத்திக்கொண்டு மற்றவர்களை விவாக விலக்குச் செய்துவிடுவார்களாயின் அவர்கள் கதி திக்கற்றவர்களின் நிலைமையிலாகிவிடும் என்பதைச் சொல்லத்தேவை இல்லை. ஆதலால் தான் இந்தச் சட்டம் வந்த காலத்திலிருந்த மனைவியர்களை நாயகம் (ஸல்.) அவர்கள் விலக்குச் செய்ய வேண்டியதில்லை என்ற பிரத்தியேக உரிமை நாயகம் (ஸல்.) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆயினும், அவர்களில் தங்களுக்கு இஷ்டப்பட்ட நால்வருடன் மாத்திரம் கூடி வாழவும் மற்றவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மனைவிமார்கள் என்ற பெருமையை ஸ்திரப்படுத்துவதுடன் அவர்களைவிட்டு விலகி இருக்கவும் உரிமை அளிக்கப்பட்டது. அவ்வுரிமைப்படி நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ரத் ஆயிஷா, ஹப்ஸா, ஜைனப் உம்முஸல்மா ஆகிய நால்வருடன் கூடி இருந்து மற்றவர்களை விலக்கி வைத்திருந்தார்கள். ஆனால், விலக்கி இருந்தார்கள் என்றால் மற்றவர்களுடன் பேசாமலோ வீட்டுக்குச் செல்லாமலோ இருந்தார்கள் என்ற அருத்தமல்ல. எப்பொழுதும் போல் அவர்களுக்கு அன்னவஸ்திர மளிப்பதும், வீட்டுக்குச் செல்வதும், அவர்களுடன் பேசுவதும், க்ஷேமலாபங்களை விசாரிப்பதுமிருந்து வந்தது.

வேதக்காரப் பெண்களை மணக்க நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அனுமதி யளிக்காததேனெனின் நாயகமவர்களின் நுபுவ்வத்தின் பால் உண்மை கொள்ளாதவர்கள் இஸ்லாம் மதப் பிரசார வேலையில் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இடைஞ்சலாக ஏற்பட்டு விடவும் கூடும். தவிரவும் நாயகம் (ஸல்.) அவர்களுடன் இருந்து அவர்களின் மார்க்கப் பிரசாரத்தை அறிந்து இதரர்களுக்கு எடுத்தோத இதர மதவாதிகள் அருகதையுள்ளவர்களுமல்ல.

தஹஜ்ஜத்தொழுகை:-இஸ்லாம்மதம் ஆரம்பித்த முதற்காலத்தில் ஐந்துநேரத்துத் தொழுகையும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. இரவில் தஹஜ்ஜத் தொழுவது கடமையாக இருந்தது. பின்னர் மிஃறாஜில் தொழுகை பர்லாக்கப்படவே, தஹஜ்ஜத் தொழுகை எல்லோருக்கு விதியாக்கப் பட்டிருந்தது மாற்றப்பட்டது. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குமாத்திரம் இத்தொழுகை விதியாக்கப்பட்டிருந்தது. இந்தத்தொழுகையில் நாயகம் (ஸல்.) அவர்கள் வெகுநேரம் வரை நிலையாக நிற்பார்களாம். இதனால் நாயகம் (ஸல்.) அவர்களுக்குக் கால்களில் வீக்கமும் ஏற்படுவதுண்டு.

இதுபோலவே, லுஹாவுடைய தொழுகையும் பொதுஜன முஸ்லிம்களுக்குப் பர்லாக்கப் பட்டில்லை. ஆனால் நாயகமவர்களிடத்து இத்தொழுகை பர்லுடைய அந்தஸ்திலிருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸருடைய பர்லுத் தொழுகைக்குப் பின்னும் தொழுவதை நம்பிராட்டிமார்களில் ஒருவர் பார்த்து நாயகம் (ஸல்.) அவர்களை வினவ

அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள், ஒருதரம் ஒரு தூதுவக் கூட்டம் வந்தது; அக்கூட்டத்தினருடன் பேசிக்கொண்டிருந்தமையால் லுஹறுடைய வேளையில் தொழும் கடைசி இரண்டு ரக்கஅத்துத் தவறிவிட்டது. அவ்விரண்டு ரக்கஅத்துக்காக நான் அரசருக்குப் பின் இரண்டு ரக்கஅத்து கலா மீட்டித்தொழுது வருகிறேன் எனக் கூறினார்களாம். ஆகவே, அரசருக்குப்பின் தொழுவது முஸ்லிம் பொதுஜனங்களுக்கு அனுமதிக்கப்படாத தொழுகை நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அனுமதிக்சப் பட்டிருந்திருக்கிறது.

தொடர்ச்சியாகப் பலநாட்கள் நோன்பு வைப்பது முஸ்லிம் பொதுஜனங்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அது விலக்கப் பட்டில்லை. இவ்விதமாகப் பலநாள் நோன்பு வைப்பதிலும் இராவேளையிலுங்கூட அதிலும் நோன்பு திறக்கும் நேரத்திலுங்கூட நாயகம் (ஸல்.) அவர்கள் ஒன்றும் அருந்த மாட்டார்களாம். நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வாறு செய்வதைப்பார்த்த ஒரு ஸஹாபி தாமும் நோன்பு நோற்க ஆரம்பிக்கவே நாயகம் (ஸல்) அவர்கள் அவரைத்தடுத்து "உங்களில் என்னைப்போலுள்ளவர்களிருக்கிறார்களா? எனக்கு இறைவன் தனது சார்பாக உணவளித்துப் பசிதாகத்தைத் தீர்க்கிறான் எனக் கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் அஹ்லபைத்து (குடும்பத்தினர்)களும் பலநாள் பட்டினியுமிருப்பார்கள். முஸ்லிம் பொதுஜனங்கள் ஜக்காத், ஸதக்கா முதலிய வரிப்பணத்திலிருந்து ஏழ்மையின் நிலையில் உதவிபெற்றுப் புசிப்பார்களாம். ஆனால் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் அப்பணத்திலிருந்து எடுத்துக்கொள்வதை ஹறாமாக்கிக்கொண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் பேரப்பிள்ளைகள் சிறுகுழந்தையாக இருந்தகாலத்து ஜக்காத்து, ஸதக்கா ஆகிய வைகளால் வந்த பேரீச்சம்பழத்தை வாயில் போட்டுவிட்டார்கள். உடனேநாயகம் (ஸல்.) அவர்கள் அதைத் துப்பும்படிசெய்து "இது ஜனங்களின் பொதுப்பணச் செல்வத்தைச் சார்ந்தது. அவைகளைப்பெறுவது நபிகளின் அஹ்லபைத்துகளுக்கு ஜாயிஸல்ல" எனக் கூறி இறுதிநாள்வரை ஸாதாத்துகளுக்கு ஜக்காத் ஸதக்காப்பணம் வாங்குவதை ஹறாமாக்கிவிட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபியெனத் தாவாச்செய்து ஜக்காத், ஸதக்கா வரிகளை ஏற்படுத்தி தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேடிக் கொண்டார்கள் என இஸ்லாம்மத விரோதிகள் குரோத எண்ணத்தால் குறைகூறல்கூடுமெனநினைத்து இதனைக் கியாமநாள்வரை தங்கள் குடும்பத்திற்கே ஹறாமாக ஆக்கினார்கள்போலும்.

நாயக ஒழுக்கங்கள்.

நபிகள் திலகம் எம்பிரான் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையின் ஒழுக்க சம்பந்தமானபாகமானது, உலகத்திலுதித்த மக்கள் யாவருமென்ன? இதர நபிமார்களுடைய வாழ்க்கையைப் பார்க்கினுங்கூட அதிக மேம்பாடுடையதாகக் காணப்படுகிறது. இதர நபிமார்கள் இவ்வுலக மக்களின் நேர் வழிக்காக எவ்வளவோ அரும்பாடுபட் டிருக்கிறார்கள். அவர்களின் இவ்வூழியமானது உலக சரித்திரத்தில் என்றென்றுமே முக்கியஸ்தானத்தை வகிக்கத் தகுந்ததாக இருக்கிறது. இவைகளெல்லாம் உண்மையே.

முற்காலத்துநபிமார்கள் போதித்த ஒழுக்க போதனைகளில் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் போதித்த போதனையானது இதுகாலை இவ்வுலக மாந்தரால் போற்றப்படுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் அத்தகைய சிறந்த ஒழுக்கங்களைப் போதித்த அந்தப் பெரிய மகானாகிய ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களே அப் போதனையின்படி நடக்கமுடியவில்லை என்பதை இதுகாலை கிறிஸ்தவ சகோதரர்களிட மிருக்கிற இஞ்சில் வேத மெனப்படும் நூல் விளக்குகின்றது. உதாரணத்திற்காக அதிலிருந்து ஒன்றை எடுத்துவன்:

“ஒருவன் உன் வலதுகன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையுந் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப்பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ” என்பதே.

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இவ்வுலகிலிருந்த காலங்களில் போதித்த ஒழுக்க சம்பந்தமான போதனைகளில் மேற்கண்ட இம்மூன்று போதனைகளை மகா சிரேஷ்டமாகவும் சாரமாகவும் கூறப்படுகிறது. இப்போதனைகள் இஞ்சீல் வேதத்தில் மத்தேயு, 5-வது அதிகாரம் 39, 40, 41-வது வசனங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்போதனைகள் உண்மையில் மகா சிரேஷ்டமானதாகவும் பெறற்கரியதாகவும், பொன்னேபோல் போற்றத்தகுந்தனவாகவுமே இருக்கின்றன. இப்போதனைகள் நியாயமற்றவை என எவருங் கூறத் துணியார். ஆனால் இந்த போதனை மக்களால் அனுசரிக்கத் தகுந்தனவா? இதைப்போதித்த அந்த ஈஸா நபியவர்களே அதை முன் மாதிரியாகச் செய்து காட்டினார்களா என்ற விஷயத்தைக் கவனிக்கப்புகின் முதலாவதாக அந்த ஈஸா நபியவர்களே அதன்படி நடக்கவில்லை என இஞ்சீல் வேதம் எனப்படும் நூல் எடுத்துக் காட்டுகிறது.

ஈஸா நபி (அலை.) அவர்கள் இஸ்ரவேலருக்கு நேரான வழிகாட்ட அரும்பாடுபட்டதில் அவர்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் யாவரும் விரோதிகளாகி விட்டனர். ஈஸா (அலை.) அவர்களைப் பிடித்துக் கொலை செய்யவும் துணிந்தனர். சிலுவையிலறைய முற்பட்டனர். இதற்கான சகல முயற்சிகளையும் செய்தனர். ஆனால், அவர்களால் ஈஸா (அலை.) அவர்களைக் கொலை செய்யவோ சிலுவையிலறையவோ முடியவில்லை. என்றாலும் கிறிஸ்தவர்கள் கையிலிருக்கிற இஞ்சீல் வேதமோ சிலுவையிலறைந்ததாகக் கூறுகின்றது. ஆகவே, அதன் கூற்றுப் பிரகாரம் இங்கு கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அதாவது ஈஸா (அலை.) அவர்கள் தன்னை சிலுவையிலறையத் தேடிக்கொண்டிருந்த யூதர்கள் முன் தானாகவுஞ் செல்லவில்லை. அவர்கள் கையிலகப்படாமற் றப்பிக்கொள்ள முயற்சித்தார்களாம். ஆனால், அந்த ஈஸா நபியவர்களின் சிஷ்யர்களாகிய பன்னிருவரில் ஒருவனான யூதாஸ் என்பவன் சில ரூபாய்களை வாங்கிக்கொண்டு காட்டிக் கொடுத்து விட்டானாம். அதன்பின் யூதர்கள் ஈஸா நபி (அலை)யைக்கண்டு பிடித்துச் சிலுவையில்லறைந்து விட்டனராம். அவ்வாறு ஒழிந்து கொண்டிருந்த ஈஸா நபி (அலை.) அவர்கள் சிலுவையிலறையப்படும் சமயம் அவர்கள் கொடுத்த தண்டனையை மனத்திருப்தியுடன் சகித்துக்கொண்டனரா? அன்று! அன்று! ஏலீ! ஏலீ! லாமா சபக்தனீ. அதாவது என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டாய் என்று சப்தமிட்டலறினார்களாம். இவ்விபரம் மத்தேயு 27 வத்தியாயத்தில் 46-வது வசனத்தில் காணப்படுகிறது.

ஒப்பற்ற போதனையைப் போதித்த அந்த ஈஸா நபி (அலை.) அவர்களாலேயே அதனைக் கடைப்பிடித் தொழுக முடியவில்லை என்பதை இதன் மூலம் நாம் தெரிந்துகொள்கிறோம். நபியாகவந்த ஒருவராலேயே கடைப்பிடித்தொழுகச் சாத்தியப்படாத இந்த ஒழுக்க போதனையை இப் பாப உலகில் உதித்த சாமான்ய மக்களால் எடுத்தாள முடியுமா என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

இந்த இஞ்சிலில் எழுதிவைத்திருக்கிறபடி பார்க்கப்போனால் சொற்படி நடவாக் குற்றத்திற்கு ஆளான பாவம் ஈஸா நபி யவர்களைச் சாருவதாக இருக்கிறது. முஸ்லிம்களின் நம்பிக்கைப்படி நபிமார்கள் பாபத்தைவிட்டுக் காப்பாற்றப்பட்டவர்கள். ஆதலால், ஈஸா நபியவர்கள் இந்தக் குற்றத்திற்கு ஆளானதாகக் கூற முஸ்லிம்கள் தயாராக இல்லை. இது சம்பந்தமாக இங்கு விவரிக்கவேண்டிய விஷயமில்லை யாதலால் நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைப்பற்றி எழுதுவாம்.

மக்காவிற் பிறந்த நபியவர்களின் ஒழுக்க போதனையானது அவர்களின் நடத்தையாகவே இருந்தது. எவ்வாறெனின் நாயகம் (ஸல்.) அவர்கள் எதைப் போதித்தார்களோ அதையே செய்கையிலும் செய்து காட்டினார்கள். திரு குர்ஆனுங்கூட சொல்வதுபோல் செய்யும்படியாகவே தூண்டு

கிறது. ஜனங்கள் நிறைந்த பொதுக் கூட்டத்தில் நாயகம் (ஸல்.) அவர்கள் எதைப் போதிப்பார்களோ அதையே தங்களுடைய வீட்டிலும், தனித்திருக்கும் போதும் செய்வார்கள். தாங்கள் செய்யாத ஒன்றைச் சொல்லவே மாட்டார்கள்.

ஆடவர்களுடன் எல்லா நிலைமையிலும் அதிகமாக நெருங்கிப் பழகக்கூடியவர்கள் அவர்களின் மனைவியரே. தன் கணவனின் குணாதிசயங்களை அதி நுட்பமாகக் கண்டு அதற்குத் தகுந்த விதமாக நடந்துகொள்வோர் பதிபக்தியுடைய பதிவிரதா சிரோன்மணிகளே யாவர். ஆதலால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் குணாதிசயங்களை உண்மையாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர் நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவியரின் வாக்கையே பெரிதும் மதிப்பர். அதற்கிணங்க சிலர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் அன்பிற்குரிய வாழ்க்கைத் துணைவியான ஆயிஷாநாயகி (றலி)யை நெருங்கி ஹஜ்றத் முஹம்மத் முஸ்தபா (ஸல்.) அவர்களின் ஒழுக்கங்களைப்பற்றி விபரிக்குமாறு வேண்ட அதற்கு நாயகி அவர்கள் அவர்களை நோக்கி நீங்கள் திரு குர்ஆனை ஓதவில்லையா? றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களின் ஒழுக்கம் திரு குர்ஆனே எனப் பதில் கூறினார்கள். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஒழுக்க விசேஷத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் திருக்குர்ஆனில் கூறப்பட்ட விஷயங்களை ஊன்றிக் கவனிப்பதே போதுமானதாகும்.

தவிரவும் ஹஜ்றத் ஆயிஷா நாயகி (றலி) என்ன? திருக்குர்ஆனே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஒழுக்கத்தைப்பற்றி அவர்களைப் புகழ்ந்து கூறி இருக்கிறது. அதாவது "(முஹம்மதே) நிச்சயமாக நீர் வலுப்பமான சத் ஒழுக்கமுடைய வராவீர்"

இத்திரு வசனத்தில் நாயகம் (ஸல்.) அவர்களின் நல்லொழுக்கத்தைப் பொதுவாகக் கூறப்பட்டிருப்பினும் அவர்களின் ஒவ்வொரு தன்மையையும்பற்றித் தனித்தனியே விபரமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

அதாவது "உம்பால் அல்லாஹுதஆலாவில் நின்றுமுள்ள கிருபையால் (முஹம்மதே) நீர் அவர்களுடன் சாந்தமாகப் பழகுகின்றீர் ஆனால், நீர் வன்னெஞ்ச முள்ளவராகவும் முரட்டுத்தனமாகப் பேசுவோராகவும் இருப்பீராயின் அவர்கள் உம்மை விட்டகன்று விடுவார்கள்"
(ஆல இம்ரான்) என்றும்,

"(ஜனங்களே) உங்களுடைய இனத்திலிருந்து உங்களிடம் ஒரு தூதர் வந்திருக்கிறார். உங்களுடைய கஷ்டங்கள் அவருக்கு மிக வருத்தத்தைக் கொடுக்கிறது. உங்களுக்கு நன்மை செய்ய அவர் பேராவலுள்ளவராக இருக்கிறார். முமீனான ஜனங்களிடம் அவர் மிகவும் கருணையாகவும் மிருதுவான தன்மையுடையவராகவுமிருக்கிறார்." என்றும்கூறியிருக்கிறான். இவ்விரு வசனங்களிலிருந்தும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் யாரையும் கடிந்து பேசும் சுபாவமுள்ள கடுகடுப்பாளியாகயில்லை என்றும், எல்லோரிடத்திலும் கருணையாகவும் கிருபையாகவும் சாந்தமாகவும் நடந்து கொள்ளுபவர்கள் என்றும், பிறர் கஷ்டத்தைக் கண்டு சகிக்க மாட்டாதவர்கள் என்றும், எல்லோரும் இன்புற்றிருப்பதையேசதா விரும்புகிறவர்களென்றும் தெரிந்துகொள்கின்றோம். இவ்விதமாகவே இதர எல்லாத் தன்மைகளையும்பற்றி ஆங்காங்கு திருகுர்ஆனில் விபரிக்கப்பட்டிருக்கிறது. விரிவஞ்சிவிடுத்தனன். இப்பொழுது மற்றவர்களிடமிருக்கிற எந்த வேதமும் இதர நபிமார்களின் ஒழுக்கங்களைப்பற்றி நற்சாக்ஷி யளித்ததாகக் காணமுடியாது.

பணிவு, தாழ்மைத் தனம், கிருபை, ஈவு, இரக்கம், அன்பு ஆகியவைகள் தான் மிக மிகச் சிறந்த தன்மைகள் என்றும், இவைகள் தாம் நபிமார்களிடம் இருக்கவேண்டுமென்றும் தவறாகப் பலர் நினைத்திருக்கின்றனர். ஐரோப்பியர்களுங்கூட இதைத்தான் மிகையாக நம்பி நமது நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் போதனையில் துருவித்திரிகின்றனர். ஆனால், நல்லொழுக்கமென்பது மேற்கூறப்பட்ட சில தன்மைகளுக்கு மாத்திரம் பெயரன்று. மானிடவர்க்கத்தினரின் நித்திய வாழ்க்கையில் நிகழக்கூடிய சுகதுக்கம் இன்பதுன்பம், சந்தோஷம், சடைவு, கோபம் தரித்திரம் ஆகிய எல்லா நிலைமையினும் அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் நடந்து கொள்ளக்கூடிய நேர்மையான நடத்தைகளே யாகும். இப்படிப்பட்ட சகல சந்தர்ப்பங்களும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்க

ளுக்கு நடந்திருக்கிறது. தவிரவும் அரசன் முதல் ஆண்டி, வியாபாரி, தொழிலாளி விவசாயி, படித்தவன், பாமரன் யாவருக்கும் எல்லா தேசத்தினருக்கும் நாயகம் (ஸல்.) அவர்கள் நபியாக வந்ததால் இவர்கள் யாவருக்கும் அவரவருடைய நிலைமையில் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு நடக்கும் நேர்மையான வழியையும் மேலான நடத்தையையும் காட்டவேண்டிய திருப்பதால் நாயகம் (ஸல்.) அவர்கள் எல்லா விஷயங்களைப்பற்றியும் உபதேசித்தும் அதன்படிநடந்து காட்டியுமிருக்கின்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னை தந்தையரை யிழந்த அனாதியாகவும், தரித்திரராகவும், வியாபாரியாகவும், சமாதான புருஷராகவும், பொதுஜன ஊழியராகவும், குடும்பஸ்தராகவும், பிரமச்சாரியாகவும், பல மனைவியருக்கு எஜமானராகவும், நபியாகவும் நியாயாதிபதியாகவும், ஜனத்தலைவராகவும், அரசராகவும், துறவியாகவுமிருந்ததால் அந்தந்தச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நடந்திருக்கிறார்கள். ஆதலால் அதன் முழுவிபரத்தையும் நாயகம் (ஸல்.) அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சியைப் படிப்போர் நன்கறியலாம்.

ஒழுக்கத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் யாதெனில் ஒருதரம் ஒரு காரியத்தைச் செய்தால் அதன் பின்னர் அதை விடாமல் கடைசிவரை கொண்டு செலுத்துதல் வேண்டும். ஒருவன் ஒரு நிர்பந்தத்தின் மேல் ஒரு காரியத்தைச் செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம் அதாவது ஒருவர் செய்யும் இடர்பாடுகளைச் சகித்துக் கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம் பின்னர் அந்த நிர்பந்தம் எடுபட்டுப் போன பின்பு அந்தச் சகிப்புத் தன்மை அவனிடமிருக்கவேண்டும். அவ்வாரில்லாமல் நிர்ப்பந்தம்நீங்கியவுடன் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தால் அவன் செய்த இடர்பாட்டினுக்கு எதிர் செய்ய ஆரம்பிப்பானாகில் முன்னர் சகிப்புத் தன்மை காட்டி வந்ததின் மகிமையும் மறைவதுடன் அவனை சகிப்புத் தன்மையுடையவன் என்றுங் கூறமாட்டார்கள். இவ்விதமான சகிப்புத்தன்மையானது—பழிக்குப் பழி வாங்காத் தன்மையானது நாயகம் (ஸல்.) அவர்களிடம் நனி பெரிதும் மலிந்திருந்தது. இதற்கு எத்தனையோ சான்றுகள் வேண்டுமானாலும் தரலாம். உதாரணமாக பத்று யுத்தத்திலிருந்து மக்கா வெற்றியடையும் வரை நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் செய்ய நேர்ந்த யுத்தங்களுக்கெல்லாம் அபூஸுப்யான் அதிபதியாகவோ, தூண்டுதலாகவோ இருந்திருக்கிறார். இந்த அபூஸுப்யானால் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் ஸஹாபிகளுக்கும் நேர்ந்த சங்கடங்களும் இடருகளுமனந்தம். அவ்வாறிருந்தும் மக்கா வெற்றியாகுந் தினத்தன்று ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களின் உதவியால் அவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் மன்னிப்புப் பெற்றதுமல்லாமல் அவருடைய வீட்டிற்குச் செல்லும் மக்கா வாசிகளுக்குங் கூட அபயமளித்திருப்பதாக விளம்பரம் செய்தார்கள். இதுவுமல்லாமல், மக்கமாநகரம் பிடிபட்டபின் அவ்வூரிலுள்ளவர்கள் யாவருக்கும் பொது மன்னிப்புமளித்திருக்கிறார்கள். அதே மக்கா வாசிகள் தாம் நாயகம் (ஸல்) அவர்களுக்குசொல்லொணா துன்பங்களை இழைத்து நாயகம் (ஸல்.) அவர்களையும் முஸ்லிம்களையும் ஹிஜ்ரத் செய்து மதீனா போகும்படி செய்தவர்கள். மக்காவை ஹிஜ்ரத் செய்து மதீனா சென்ற பின்பும் அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களையும் ஸஹாபிகளையும் சமாதானமாக வாழவிடவில்லை. இவர்கள் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டு நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடங்கிய காலத்து நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கு எந்தத் தண்டனையை விதித்தாலும் அத்தண்டனை நியாயமானதே எனக்கருதி இருந்தனர். ஆயினும் நாயகம் (ஸல்.) அவர்கள் அன்றைய தினம் அவர்கள், தங்களுக்குச் செய்த இடர்ப்பாடுகளை எல்லாம் மன்னித்ததுடன் இதர ஸஹாபிகளிடமிருந்து மன்னிப்பும் வாங்கித் தந்தார்கள். உலகம் தோன்றியதிலிருந்து இதுநாள் வரை இவ்வுதாரணத்திற்கு நிகராக எந்தச் சம்பவத்தையும் சரித்திரத்திற் காணமுடியாது.

இவ்வாறு மன்னிக்கும் தன்மையைப் பெற்ற எம்பிரான் (ஸல்.) அவர்கள் நியாயாதிபதி என்ற முறையில் ஒரு வழக்கை விசாரிப்பார்களாயின் அதில் ஏழை ஏந்தல், உற்றார் உறவினர் சுற்றத்தார் என்னும் பாகு

பாடு யாதொன்றையும் பாராமல் நியாயந் தீர்ப்பார்கள். இவர்களிடமுள்ள இந்த நியாயத்தைக் கண்டு இஸ்லாத்திற்கே பெரும் பகைவர்களாகவுள்ள யூதர்களும் கூடத் தங்கள் வழக்குகளை நியாயந்தீர்க்குமாறு நாயகம் (ஸல்.) அவர்களை வேண்டிக்கொள்வார்கள்.

தர்மம் செய்வதிலும், பரோபகாரம் புரிவதிலும் சிநேகிதன், பகைவன், தன் இனத்தான், மற்றவன் என்ற பாகுபாடின்றி கஷ்டப்படும் எவருக்கும் எவ்விதத்தடங்கலின்றி உதவி புரிவார்கள். இவைகள் சம்பந்தமாக உள்ள முழு விபரங்களையும் எழுதுவதாயின் விரியுமாதலின் விடுத்தனம்.

ஆனால், இவைகளிலெல்லாம் ஆச்சரியப்படத்தக்க காரியமென்னவெனில் யாவரும் எடுத்து நடக்கக் கூடியவிதமாகவும் நியாயந் தவருவிதமாகவும் இவ்வொழுக்கங்களைப் போதித்ததும் அதை அனுஷ்டித்துக் காட்டியதுமாகும். இத்தகைய உதார குணங்களை வேறெந்த நபிமார்களின் சரித்திரத்திலோ அல்லது மற்றவர்களின் ஜீவிய வாழ்க்கை நிலைமையிலோ இருந்ததாக நாம் பார்க்கமுடியாது. உலகத்தில் நற்குண நல்லொழுக்கத்தை சரியான முறையில் போதித்து அதை செய்து காட்டிய பேறு எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கே உரித்தானதாகும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உள்ளும் புறமும் ஒன்றுபோல் தாங்கள் செய்துகாட்டியதன் பலனைகவும், யாவருக்கும் ஒன்றுபோல் உபதேசம் செய்ததாலும், யாவராலும் எடுத்து நடக்கத்தக்கவிதமாக ஒழுக்கங்களையும் சட்டங்களையும் ஏற்படுத்தியதாலும் நாயகம் (ஸல்.)அவர்களை ஸஹாபிகளும் முஸ்லிம்களும் தங்கள் உடல்பொருள் ஆவி ஆகியவற்றைக் காண அதிகமாக நேசித்தனர். நாயகம்(ஸல்) அவர்களின் சிறு சிறு விருப்பத்தையுங் கூடத் தங்களுக்கு உயிர் ஆபத்து வந்தாலும் அதை நிறைவேற்றுவது எனக் கங்கணங் கட்டிக்கொண்டனர். இதற்கு அத்தாட்சியாக ஹுதைபிய்யா உடன்படிக்கைக்காக குறைஷியர்களின் தூதுவராக வந்த உர்வா என்பவர், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மீது ஸஹாபிகள் கொண்டுள்ள பற்றைக் கண்டு வியந்து தங்கள் கக்ஷியினரான மக்கத்து குறைஷிகளிடம் சென்று "நான் உரோமச் சக்கிரவர்த்தியாகிய கைஸர், பாரசீகச் சக்கிரவர்த்தியாகிய கிஸ்ரு, அபிசினியா அரசரான நஜ்ஜாஷி ஆகியவர்களின் தர்பாருக்கும் சென்றிருக்கின்றேன் அவைகளில் முஹம்மதுடைய (ஸல்.)ஸஹாபிகள் முஹம்மது (ஸல்.) பால் கொண்டுள்ள பற்றையும் நம்பிக்கையையும் விஸ்வாசத்தையும் நான் கண்டதே இல்லை. முஹம்மது (ஸல்.) பேச ஆரம்பித்தாராகில் அது சமயம் சபையே நிசப்தமாக இருக்கிறது. ஒருவர் கூட தலைநிமிர்ந்து முஹம்மதைக் கூர்ந்து பார்க்கிறதில்லை. அவர் உலுச்செய்தால் கீழே விழும் தண்ணீரைப் பிடிக்க ஜனங்கள் ஒருவருக்கொருவர் முந்துகிறார்கள். அவர் உமிழ்வாராயின் அவருடைய துப்பலை பக்தர்கள் தங்கள் கையில் தாங்கி தங்கள் முகத்திலும் கைகளிலும் தடவிக்கொள்கின்றனர்.

விரோதிகளும் கண்டு பிரமிக்கத்தக்க விதமாகப் பக்தர்கள் நாயகம் (ஸல்.)அவர்களின் மீது விஸ்வாசங்கொண் டிருந்ததற்கு நிகராக உலக சரித்திரத்தில் எந்த நபிக்கேனும் அவர்கள் உம்மத்துகள் செய்ததாக நாம் கேள்விப்பட்டதுண்டா. இத்தகைய பக்தி எதனாலென்றால் எம்பிரான் (ஸல்.) அவர்களின் நற்குண நல்லொழுக்க நற்போதனைகளே அவர்களை எல்லாம் இம்மாதிரி பரவசப்படுத்தியது என்பதையும் கீழ்ப்படியச் செய்தது என்பதையும் நாம் உணரவேண்டும்.

ஜமாஅத் (சமுகத்தை விட்டு) ஒரு சாணுவது ஒருவன் விலகுவாணுகில் அவன் தன்னுடைய கழுத்திலிருந்து இஸ்லாத்தின் கயிற்றைக் கழற்றி விட்டவனுவான்.

இஸ்லாம் எவ்வாறு பரவிற்று ?

தற்சமயம் உலகத்திலே சுமார் 50 கோடி முஸ்லிம்களிருக்கின்றார்கள். இந்த ஐம்பது கோடி ஜனங்களும் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலும் பரவி இருக்கின்றார்கள். இந்த ஐம்பது கோடி ஜனங்களில் சிலர் சுதந்திரவான்களாகவும், சிலர் ஆளும் ஜாதியினராகவும், சிலர் ஆளப்படுவோராகவும் இருந்து வருகின்றனர் என்பது உலகறிந்த விஷயம். சுதந்திரவான்களாக இருப்பவர்களை நாம் ஐரோப்பாவிலும் சீன தேசத்திலும், அமெரிக்காவிலும் காணலாம். ஆளுவோராக இருப்பவரை துருக்கியிலும், ஈரானிலும், அப்கனிஸ்தானிலும், அறப் தேசத்திலும் மற்றுஞ் சில தேசங்களிலும் காணலாம். ஆளப்படுவோராக இருப்பவரை இந்தியாவிலும், ஜாவாவிலும், மலாய்நாடுகளிலும், ஆப்பிரிக்காக் கண்டத்திலும் இதர சில தேசங்களிலும் காணலாம். இஸ்லாம் மதம் தோன்றிய காலமுதல் இதுவரை சுமார் 1350 வருஷ காலமாக அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவே வளர்ந்து வருகிறதென்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். இந்த 1350 வருஷங்களில் முஸ்லிம்களின் நிலைமையே பலவிதமாக இருந்திருக்கின்றன. அதாவது இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில் முஸ்லிம்களில் அநேகர் இதர மதவாதிகளிடத்தில் அடிமைகளாக இருந்தவர்களாகவும் மற்றுஞ் சிலர் பரம ஏழைகளாகவும் இருந்திருக்கின்றார்கள். எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைத்துப் பதின்மூன்று வருஷ காலங் வரை அவர்கள் மக்காவிலிருந்தே இஸ்லாமியப் பிரசாரஞ்செய்து வந்தார்கள். இந்தப் பதின்மூன்று வருஷ காலத்தில் அவர்கள் தங்கள் பிரசாரத்தை எவ்வாறு செய்தார்கள் என்பது நாயகம் (ஸல்.) அவர்களின் சரித்திரத்தை உணர்ந்தவர்களுக்கு நன்கு புலனாகும். மூடக்கொள்கைகளையும், பொய் தேவதைகளை வணங்குவதையும் பற்றிய தீமைகளை எடுத்துக் கூறுவதும் எல்லாம் வல்ல ஏகப் பரம்பொருளாகிய அந்த ஒரே ஆண்டவனின் ஏக தெய்வக் கொள்கையை எடுத்து ஓதுவதுமே நாயகம் (ஸல்.) அவர்களின் பிரதான பிரசாரமாக இருந்தது. இந்தப் பிரசாரத்தால் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் ஆரம்பகாலத்தில் பெரும்பாலும் ஏழைகளும் அடிமைகளுமேயாகும்.

எனினும், இஸ்லாமிய விரோதிகள் இந்தப் பிரசாரத்தை ஒடுக்குவதற்காகப் பல விதத்திலும் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்தனர். நபிகள் பிரான் (ஸல்.) அவர்களினது பிரசாரத்தையும் பிரசங்கத்தையும் உபதேசத்தையும் ஒழிக்கும் நோக்கத்துடன் பரிகாசஞ் செய்வோர்களைக் கொண்ட கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. உலக ரெட்சகர் (ஸல்.) அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பரிகசிப்பதும் ஏளனஞ் செய்வதும், வெளியிடங்களிலிருந்து மக்காவுக்கு வருபவர்களிடம் இஸ்லாத்திற்கு மாறான பல விஷயங்களைக் கூறி அவர்களை இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாக ஆக்குவதும், இஸ்லாத்தின்பால் தப்பெண்ணத்தை உண்டாக்குவதும் அவர்களின் வேலையாக இருந்தது.

இதுவன்றி இக்கமிட்டிக்குப் பக்க பலமாக பல உப கமிட்டிகளுமிருந்தன. எங்கேனும் நாயகம் (ஸல்.) அவர்கள் பிரசங்கம் செய்தால் அங்கு கூச்சலிட்டுக் குழப்பத்தையுண்டுபண்ணி பிரசங்கம் நடைபெறாமல் தடுதுக் கூட்டத்தைக் கலைத்தல், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தெருக்களிலும், ரஸ்தாக்களிலும், பாட்டைகளிலும் செல்லுங்கால் பாதையில் முட்களைப் போட்டு வைத்தல், அவர்கள்மீது அசுத்தங்களையும், மண் கட்டிகளையும் எடுத்தெரிதல், கல்லெரிதல், எம்பிரான் (ஸல்.) அவர்கள் எவ்விடத்திலேனும் இறைவனை வணங்கக் கண்டால், அந்த வணக்கத்தைச் சரிவர நிறைவேற்ற விடாமற்றடுத்தல், இராக்காலங்களில் அவர்கள் நடமாடும் பாதைகளில் குழிகளைத் தோண்டி வைத்தல் முதலிய வேலைகளை இவ் உபக்கமிட்டிகள் செய்து வந்தன.

இவர்களையல்லாமல் வேறு சில விஷமிகளு மிருந்தனர். இஸ்லாத்தைத் தழுவுவோரைப் பல விதத்திலும் துன்புறுத்துவதும், தொந்தரை செய்வதும், கஷ்டநஷ்டத்தை யுண்டாக்குவதும், அவர்களை ஏமாற்றி மோசஞ் செய்வதும் அவர்களின் "நன்மை"யான செய்கைகளாக இருந்தன. சமயமும் சந்தர்ப்பமும் சரியாகக் கிடைத்தால் முஸ்லிம்களைக் கொலைசெய்து மலைக்குகைகளிலும் புதர்களிலும் அவர்களின் திரு உடலங்களை எரிந்து விடுவதும் இவர்களின் வேலையாக இருந்தது. இவ்வாறு முஸ்லிம்களைப் பற்பல விதமாகத் துன்புறுத்தியதால் அவர்களின் உற்ற சினேகிதர்களும் சுற்றத்தாரும் உணர்ச்சிபெற்று இஸ்லாத்தின் விரோதிகளுக்கு எதிராகத் தோன்றவும், இஸ்லாத்தை ஆதரிக்கவும் நேர்ந்தது. சிலர் இஸ்லாம் மதத்தையுங் கூடத் தழுவினர். என்றாலும், பகைவர்களில் பணக்காரர்களும், பலவான்களும் சேர்ந்திருந்ததால் முஸ்லிம்கள் அவர்களால்இழைக்கப்பெறும் கஷ்டநஷ்டங்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவர்களை எதிர்த்து நிற்கவும் போதிய ஆட்பெருக்கும் செல்வச் செருக்கும் இல்லை. ஆதலால், நாயகம் (ஸல்.) அவர்களின் அனுமதியின்மீது அயல் நாடுகள் சென்றேனும் அமைதியாகத் தங்கள் சீரிய வாழ்க்கையைச் சிறப்பாக நடத்தலாம் எனத் தீர்மானித்தனர் இத் தீர்மானத்திற் கிணங்க சிலர் ஆப்பிரிக்காவிலுள்ள அபிசினியா நாட்டிற்கு அடைக்கலஞ் சென்றனர். அத்தேசத்து அரசர் கிறிஸ்தவ மதத்தவராக இருந்தும் முஸ்லிம்களை ஆதரித்துக் காப்பாற்றினர். இங்கும் இவர்களை இஸ்லாமிய விரோதிகள் சும்மா விடவில்லை. அபிசினியா நாட் டரசருக்கு முஸ்லிம்கள் பால் கோபமும் மனஸ்தாபமு முண்டாகுமாறு சூழ்ச்சி செய்தார்கள். ஆனால், ஒன்றைநினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும் என்றபடி இஸ்லாமிய விரோதிகளின் நோக்கம் சித்தியாகாமல் அது அவர்களுக்கே பாதகமாக முடிந்தது.

இஃதிவ்வாறிருக்க நபிகள் நாயகம் (ஸல்). அவர்களுக்கும் மக்காவில் எஞ்சிய முஸ்லிம்களுக்கும்எண்ணத்தொலையாதஇடுக்கண்களை மிடுக்காகச் செய்வதில் ஈடுபட்டனர். சமூகப் பகிஷ்காரஞ் செய்தனர். பலகாலம் வரை சிறையில் வைத்ததுபோல் நாயகம் (ஸல்.) அவர்களின் குடும்பத்தினரான பனூ ஹாஷிம்களைப் பாதுகாவலுக் குட்படுத்தினர். மக்காவுக்கு அக்கம்பக்கத்தி லுள்ளவர்களுக்கேனும் ஹிதோபதேசம் செய்து அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம் என எம்பிரான் (ஸல்.) அவர்கள் வெளிப் புறப்படவே, அந்த ஊர்க்காரர்களிடமும் எதிர் பிரசாரம் புரிந்தனர். வேறு பல ஊறுகளையும் செய்தனர். இவைகளை எல்லாம் விபரமாகக் கூறுவதாயின் விரியும். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு வேறு தலைப்பும் கொடுக்க வேண்டிய தேற்படும். ஆதலின் இம்மட்டுடன் நிறுத்திக்கொள்கின்றனம்.

இவ்வாறான துன்பங்களை எல்லாம் செய்யவே நாயகம் (ஸல்.)அவர்கள் இறைவனின் கட்டளைப்படிமக்காவை ஹிஜ்றத்துச் செய்து மதீனாவுக்குச் சென்றார்கள். அவர்களைப் பின்பற்றி ஏனைய முஸ்லிம்களிற் பெரும்பாலர் மதீனாவுக்குச் சென்றனர். இச் சரித்திர விபரம் என்றும் அழியாதிருந்து உலகத்திற்கு இஸ்லாத்தின் ஆரம்ப விபரத்தை அறிவிப்பதற்கு முஸ்லிம்களின் வருஷமாகிய ஹிஜ்ரி சகாப்தமே போதிய சான்றாக விளங்குகின்றது. ஹிஜ்ரீ சகாப்தம் எவ்வாறு ஏற்பட்டது? எத்தினத்திலிருந்து கணக்கிடப் படுகிறது? என்ற விபரங்களை முஸ்லிமோ முஸ்லிம் அல்லாதாரோ எவர் கவனித்தாலும் அவருக்கு இஸ்லாத்தின் ஆரம்பநிலை நன்கு தெரியவரும் என்பதில் கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை.

உண்மை இவ்வாறிருக்க இதரமதத்தினரில் சில குரோத புத்தியுள்ளவர்கள் இஸ்லாம் மதம் வாளால் பரத்தப்பட்டதென்றும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், முஸ்லிம்களும் கொள்ளையடிப்பதும் வர்த்தகக் கூட்டத்தினரை வழி மறித்து அவர்களின் பொருளை அபகரிப்பதையுமே தங்களின் ஜீவனோபாயமாகக்கொண்டு வந்தனரென்றும் பலப்பல விதமாக இஸ்லாத்தின் பால் பல அபாண்டங்களைக் கூறுகின்றனர். இஸ்லாத்தின் ஆரம்பநிலையை ஒருவாறு ஒத்துக்கொள்ளக்கூடிய சிலரும்,ஏனையநாடுகளில் இஸ்லாம் வாளாயுதத்தால் தான் பரவிற்றென்றும், ஒரு கையில் வாளையும், ஒரு கையில் குர்ஆனையும் வைத்துக்கொண்டு இரண்டில் எது வேண்டுமெனக் கேட்டு இஸ்

லாத்தை அபிவிருத்தி செய்வதி லீடுபட்டனர் என்றும் சிலர் தவறாக நினைத்திருக்கின்றனர். உலகச் சரித்திரத்தை உள்ளபடி உணர்ந்த மேதாவிகளில் நியாயமும் நீதியும் பாரபக்ஷமற்ற தன்மையு முள்ளவர்கள் இஸ்லாம் உலகில் எவ்விதம் பரவியதென்பதை நன்கு கூறுவர். இவ்விதமாக இதரமதத்தினுதித்த பல அறிஞர்கள் இஸ்லாத்தைப்பற்றி எழுதிய நூல்களில் இஸ்லாம் வாளால் பரவவில்லை எனதக்க ஆதாரங்களுடன் எழுதி இருப்பது மாத்திரமின்றி எதிர்கால உலக மதம் இஸ்லாம்தான் எனக் கூறி இருப்பதும் கவனிக்கத் தக்கது.

இந்த இடத்தில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும், அக்காலத்தைய முஸ்லிம்களாகிய ஸஹாபிகளும் கொள்ளையடித்தனரா? வர்த்தகர்களின் பொருளை வழிமறித்து அபகரித்தனரா? நாயகமவர்கள் காலத்தில் இஸ்லாம் எவ்வாறு பரவிற்று என்ற விஷயங்களை இச்சிறு வியாசத்தில் எழுதத் துணிந்தனன். நேயர்கள் கவனித்துப் பார்ப்பார்களாக.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் யுத்தங்களும்

இஸ்லாம் மதப்பிரசார கர்த்தாவாக இருக்கிற நமது நாயகம் (ஸல்.) அவர்களின் உயிருக்கே உலை வைத்துவிடவேண்டுமென பகைவர்கள் தீர்மானித்து அதற்காக வேண்டிய சகல முஸ்திப்புகளைச் செய்தும் இறைவனருளால் அவர்கள் காப்பாற்றப்பட்டு மதீனாவுக்கு க்ஷேமமாகச்சென்று அதை அடைந்துவிட்டதைக் கண்ட பகைவர்கள் ஏமாற்றமடைந்தனர். இது தங்களின் அந்தஸ்துக்கே அவமானத்தையும் கேவலத்தையும் இழைக்கக் கூடியதென எண்ணினர். பொறாமை கொண்டனர். முன்னிலும் பன்மடங்கு அதிகமாகத் துவேஷங் கொண்டனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும் முஸ்லிம்களையும் இவ்வுலகிலிருந்து அழித்தே தீருவது எனச் சத்தியமும் செய்துகொண்டனர். அதுசமயம் மதீனாவின் தலைவராக இருந்த அப்துல்லா ஹிப்னு உபைய்யி என்பாருக்கு பயமுறுத்தல் கடிதம் ஒன்றெழுதினர். அதில் முஸ்லிம்களை மதீனாவிற்குள் குடியேற்றக் கூடாது. அவ்வாறு குடியேற்றினால் மக்கா வாசிகளாகிய நாங்கள் மதீனாவின்மீது படையெடுத்து வந்து பெண்டு பிள்ளைகளைச் சிறைவாருவோம். பொருள்களைக் கொள்ளையிடுவோம் என்று எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தைக் கண்டு மதீனாத் தலைவர் பயந்தார். முஸ்லிம்களைவெளியேற்ற நினைத்தார். ஆனால் மதீனாவிலுள்ளவர்கள் பெரும்பாலும் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டதால் இவர்களை வெளியேற்ற முயலுவது தமக்கே சங்கடமாக வந்து சேரும் என்பதை உணர்ந்தார். இதனை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் அத்தலைவருக்கு எச்சரிக்கை செய்தார்கள். ஆதலால் மக்கா வாசிகளின் கடிதம் கவனிக்கப்படவில்லை. ஆதலால், அவர்கள் கோபங்கொண்டு யுத்தத்திற்கு வருவதற்கு காரணங்களை உற்பத்தி செய்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். மதீனாவுக்கு ஆட்களை அனுப்பி வெளியில் மேய்ந்துகொண்டிருக்கும் ஒட்டகங்களைத் திருடுதல், தனிமையாக இருக்கும் முஸ்லிம்களைக் கொல்லுதல் ஆகிய இத்தியாதி துஷ்கிருத்தியங்களைச் செய்ய ஆரம்பித்தனர்.

ஆகவே இவர்களின் நடமாட்டத்தைத் தடுக்கவும், பலமான சேனைகளைத் திரட்டிக் கொண்டு பகைவர்கள் முன்னேறிவரவிடாமற் காக்கவும், நாட்டிலுள்ள இதரர்களைப் பகைவர்கள் தங்களுடன் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கவும், முஸ்லிம்களுக்குப் பக்கபலமாக அக்கம்பக்கத்துக் கிராமங்களிலுள்ள கோத்திரத்தினரைச் சினேகிதர்களாக ஆக்கிக்கொள்வதற்காக அவர்களுடன் உடன்படிக்கை செய்யவும் வேண்டிய பலவிதமான முன் ஏற்பாடுகளை நாயகம் (ஸல்.) அவர்கள் செய்ய ஆரம்பித்தார்கள் அவ்வாறு செய்தும் குறைஷியர்கள் தங்கள். படையெடுப்பை நிறுத்தவில்லை. இறுதியாக நாயகம் (ஸல்.) அவர்களும் அவர்களுடன் போர் செய்ய நேர்ந்தது. இவ்விபரங்கள் நாயகம் (ஸல்.) அவர்களின் சரித்திரத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இவைகளை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் புற நோக்காளர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் பிற்காலத்தைய சரித்திரம் முழுவதும் யுத்தங்களாவே இருக்கிறது என நினைத்துக்கொண்டனர். சில சரித்திரக்காரர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நேராகச் சென்ற ஒவ்வொரு யுத்தத்திற்கும் கஸ்வா என்றும், அவர்கள் நேராகச் செல்லா

மல் ஸஹாபிகள் மாத்திரம் சென்ற யுத்தங்களுக்கு "ஸரிய்யா" என்றும் பெயர் வைத்து சரித்திர புத்தகங்களில் சுமார் ஏறக்குறைய 80 யுத்தங்கள்வரை கணக்கிட்டிருக்கின்றனர். இதில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களே நேராகச் சென்றவைகள் மொத்தம் 19 தான் என ஜைதுப்னு அர்கம் (றலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்ததாக இமாம் புகாரி (றஹ்.) கூறி இருக்கின்றார்கள். இந்த 19 யுத்தங்களில் ஙஸ்வயே வுத்தான், ஙஸ்வயேபுவாத், ஙஸ்வயேதுல்அஷீரா ஆகியவைகளும் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரத்தை முன்னிட்டு உபதேசம் செய்யவும், ஜனங்களுக்கு நேர்வழி காட்டவும், இதர கபீலாக்களுடன் உடன்படிக்கை செய்யவுமே நாயகம் (ஸல்.) அவர்கள் அங்குசென்றிருக்கிறார்கள். இவ்விதமாக மதீனாவின்மீது மக்கத்து குறைஷிகள் படையெடுத்து வந்துவிடுவார்களே என்பதை உளவறிவதற்காக ஹிஜ்ரீ முதலாவது வருஷம் றமளான்மீ ஸெய்யிதுனா அமீர் ஹம்ஸா (ரலி.) அவர்கள் 30-பேர்களுடன் மதீனாவிலிருந்து மக்காவின் பக்கமாக வந்தார்கள். இவ்விதமாக உபைதத்துப்னுஹாரிது (றலி.) என்பவர்கள் 60 பேர்களுடன் அதற்கடுத்தமாதம் உளவறியப் புறப்பட்டார்கள். அதற்கடுத்த மாதத்தில் ஸஅதுப்னு அபீவகாஸ் (ரலி.) 80 பேர்களுடன் உளவறியச் சென்றார்கள். இவ்வாறு சென்றவர்கள் எங்கும் யுத்தம் செய்யவுமில்லை. இவ்விதமாக இந்த 80 யுத்தங்களையும் வகுத்துக் கணக்குப்பார்த்தால் சிற்சில யுத்தங்களே நடந்ததாகத் தெரியவரும்.

அந்த யுத்தங்களும் பகைவர்களாலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டு முஸ்லிம்கள் யுத்தம் செய்யும்படி நிர்பந்திக்கப்பட்டனர் என்பது தெரியவரும். இந்த யுத்தங்களில் பிரதான யுத்தமாகிய பத்ருச் சண்டையை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம். இது ஹிஜ்ரீ 2-ம்வருஷத்தில் றமளான்மாதத்தில் நடந்தது. யுத்தம் நடந்த ஸ்தலமாகிய பத்ரு என்பது மக்காவிலிருந்து ஏழாவது மன்ஜிலும், மதீனாவிலிருந்து மூன்றாவது மன்ஜிலிலும் இருக்கிறது. குறைஷியர்களின் காபிலாவை முஸ்லிம்கள் கொள்ளையடித்து விட்டார்கள் என்ற வதந்தியை ஆதாரமாகக் கொண்டு அபூஜஹ்லு என்பான் ஆயிரம் போர் வீரர்களுடனும் யுத்தக் கருவிகள் தளவாட சாமான்களுடனும் மக்காவை விட்டுப் புறப்பட்டான். இவன் புறப்படுவதற்கு முன்பே அக் குறைஷியர்களின் வியாபாரக் காபிலா க்ஷேமமாக மக்காவை அடைந்துவிட்டது. நியாயமாக நடந்துகொள்வோராக இருந்தால் யுத்த முஸ்திப்புகளை நிறுத்திவிட்டு அவரவர் வேலையைப் பார்த்திருக்கலாம். ஆனால், யுத்தஞ் செய்வதற்குப் போலி காரணங்களைப் புகலாகத் தேடித் திரிந்த குறைஷித் தலைவர்கள் இந்த வதந்தியைப் புகலாகக் கொண்டு யுத்த முஸ்திப்பை நிறுத்தாமல் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டனர். இச்சமாச்சாரம் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிந்தும் பொறுமையுடன் மதீனாவிலேயே இருந்து வந்தார்கள். ஆனால், பகைவர்கள் மதினாவை அடைந்து முற்றுகை போடும் வரை ஒன்றுஞ் செய்யாதிருந்து, அப்பால் யுத்தத்தில் ஒரு சமயம் தோல்வி யேற்பட்டால் பெண்டு பிள்ளைகளுக்கும் வயோதிகர்களுக்கும் பெரும் கஷ்டங்கள் ஏற்படலாம் என ராஜ தந்திர யுக்தியால் முன் எச்சரிக்கையுடன் மூன்று மன்ஜில் தூரத்திற்கப்பாலுள்ள பத்ரு என்ற ஸ்தலத்திற்கு ஸஹாபிகளுடன் வந்தார்கள். இந்த யுத்தத்தில் குறைஷியர்கள் முன்னதாகவே பத்ருக்கு வந்துவிட்டதால் வசதியான இடத்தில் தங்கிக்கொண்டனர். முஸ்லிம்கள் பிந்தி வந்ததால் வசதியான இடத்தில் இறங்க முடியவில்லை. தவிரவும் குறைஷியர்களில் 1000 வீரர்கள் இருந்தனர். யுத்தத்திற்கு வேண்டிய சகல தளவாடங்களிருந்ததுடன் குதிரை, ஒட்டகம் முதலிய யாவும் அவர்களுக்குப் போதுமான அளவுக்கு இருந்தன. முஸ்லிம்களிலோ 313 பேர்களே இருந்தனர். இரண்டு குதிரைகள் மாத்திரமே இருந்தன. போதிய தளவாடங்கள் கிடையா. வேண்டிய சாமான்களைக் கொடுத்துதவ பின் பலமாகத் தனவந்தர்களோ தலைவர்களோ இருக்கவில்லை அவ்வாறிருந்தும் இறுதியாக முஸ்லிம்கள் இறைவனின் உதவியால் வெற்றியடைந்தனர். முஸ்லிம்களில் மொத்தம் 14 பேர்கள் ஷஹீதானார்கள். பகைவர்களில் எழுபது பேர் கொல்லப்பட்டு, 70-பேர் சிறையாக்கப்பட்டனர். இந்த எழுபதுபேர்களையும் வைத்துக்காப்பாற்ற முஸ்லிம்களிடம் பொதுப் பணமில்லாததால் ஸஹாபி

களிடம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. ஸஹாபிகள் தங்களிடம் போதிய பணமில்லாததால் பேரீச்சம்பழங்களைத் தின்று கொண்டு கைதிகளுக்கு ரொட்டியைக் கொடுத்து அவர்களைப் பாதுகாத்துப் போஷித்தனர். இறுதியாக இவர்கள் விடுதலை யடைந்தனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடையவும் ஸஹாபாக்களுடையவும் நேர்மையான நடத்தையைக் கண்டு உணர்ச்சி பெற்ற கைதிகளிற் சிலர் விடுதலையடைந்தபின் தாங்களாக மனதார இஸ்லாத்தைத் தழுவினர்.

சகோதரர்களே! வாளினால் இஸ்லாத்தைப் பரத்துவதாயின் இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமா அல்லது இஸ்லாத்திற் சேரவேண்டுமென நிர்பந்தப்படுத்தப் படவேண்டுமா என்பதை யோசித்துப் பாருங்கள். இது நிற்க, இந்த யுத்தத்தில் குறைஷியர்கள் தோல்வியுற்றுப் பலதலைவர்கள் கொல்லப்பட்டதால் பழிவாங்கும் எண்ணத்துடன் குறைஷிகள் மென்மேலும் யுத்தத்திற்கு வந்தனர். அத்துடன் மதீனாவில் இருந்த யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் தூண்டிவிட்டுக் கலகம் செய்வித்தனர். இவர்கள் யாவரையும்ஒன்று திரட்டிப்பெரும்போர் புரிந்தனர். இதனால் முஸ்லிம்கள் அநேக கஷ்டங்களுக்கும் வீண்தொந்தரைகளுக்கும் ஆளாகவேண்டி இருந்ததே அன்றி முஸ்லிம்களுக்கு எவ்விதக் குறையுமேற்படவில்லை. இந்த விபரங்களை எல்லாம் நாயகம் (ஸல்.) அவர்கள் சரித்திரத்தில் பார்த்தால் முஸ்லிம்கள் பகைவர்களை எவ்வாறு நடத்தினர் என்றும் பகைவர்கள் முஸ்லிம்களை எவ்வாறு நடத்தினர் என்றும் விபரமாகத் தெரியவரும். இதுவரை கூறியனவைகள் யாவும்யுத்த சம்பந்தமானவைகள் இதனால் முஸ்லிம்கள் வலுவில் யுத்தஞ் செய்யவில்லை என்பதைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இனி இஸ்லாம், நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் எப்பொழுது விமரிசையாகப் பரவிற்றென்பதைக் கவனிப்பாம்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத் செய்த பின்பு பலகாலும் யுத்தங்களில் ஈடுபடும்படி விரோதிகளால் நிர்பந்திக்கப்பட்டதும், அவர்கள் இயன்றவரை யுத்தத்தைத் தவிர்த்துச் சமாதானத்தை விரும்பிப் பலப்பல கபீலாக்களுடன் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் செய்திருக்கிறார்கள் என்ற விபரமும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆயினும், நாட்டில் செல்வாக்கும்பலமுமுள்ள கூட்டத்தினராகிய மக்கத்து குறைஷியர்கள் முஸ்லிம்களுக்கு விரோதமாக இருக்கும்போது எவ்வாறு சமாதானமாக வாழ முடியும்? இவர்களின் விஷமத்தனத்தின் பலனாக அறபி நாட்டிலுள்ள இணைவைத்து வணங்குவோரென்ன, பிறமதத்தவராகிய கிறிஸ்தவர்களுடனும் யூதர்களுடனுங் கூட யுத்தஞ் செய்ய நேர்ந்தது. இறுதியாக ஹிஜ்ரீ 6-ம் ஆண்டில் மக்காவிலுள்ள இணைவைப்போராகிய குறைஷியர்களுடன் ஹுதைபிய்யா என்ற ஸ்தலத்தில் ஒரு உடன்படிக்கை நடந்தது. இந்த உடன்படிக்கை விபரத்தைப் பார்த்தாலே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சமாதானத்திற்காக எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்தார்கள் என்பதும், சமாதான காலத்தில் எவ்வாறு இஸ்லாம் பரவிற்றென்பதும் நேயர்களுக்கு நன்கு புலப்பட்டுவிடும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் குறைஷியர்களும், இதர பல அறபிக் கோத்திரங்களும் ஸெய்யிதுனா இப்ராஹீம் கலீலுல்லாஹ் (அலை.) அவர்கள் அருமை மைந்தராகிய நபி இஸ்மாயீல் (அலை.) அவர்களின் சந்ததியினர்களாகும் என்பது சரித்திர மறிந்த உண்மை. அதுபோலவே மக்காவிலுள்ள கஃபா என்ற ஆலயம் நபி இப்ராஹீம் இஸ்மாயீல் (அலைஹி.) ஆகியவர்களால் மறுபடியும் புதுப்பித்துக் கட்டப்பட்டு அவர்களின் சந்ததியினராலேயே அது ஊழியஞ் செய்யப்பட்டு வந்தது என்பதும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காட்டிய இஸ்லாம் மதமானது இப்ராஹீம் (அலை.) அவர்களின் மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதும், முஸ்லிம்கள் என்ற பெயரை இஸ்லாம் மதந்தழுவியவர்களுக்கு இட்டதும் நபி இப்ராஹீம் (அலை.) அவர்கள் தான் என்பதும் உலகறிந்த விஷயம்.

இவ்வித நிலைமையில் மக்கத்தார்களால் நெருக்குண்டு முஸ்லிம்கள் ஹிஜ்றத் செய்தாலும் கஃபா என்ற அவ் ஆலயத்தில் தொழவும் அதற்கு ஊழியஞ் செய்யவும் மிகமிக அருகதையுள்ளவர்கள் முஸ்லிம் தாம் என்பதை எவரும் மறுக்க முடியுமா? மக்கத்தார்

களால் இத்தகைய ஊழியஞ் செய்ய முஸ்லிம்கள் அனுமதிக்கப்படா விட்டாலும் முஸ்லிம்களுக்கு அதன்பாலுள்ள அன்பும் மதிப்பும் விருப்பமும் நீங்குமா? ஒருக்காலும் நீங்காது என்பது திண்ணம். இவ்வித நிலைமையில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்கா யாத்திரை செய்து கஃபாவைத் தரிசிப்பது போல் சொர்ப்பனங் கண்டார்கள். சொர்ப்பனங்கண்ட சமாச்சாரத்தை நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் ஸஹாபாக்களிடம் கூறினார்கள். அவர்கள் யாவருக்கும் மக்கா யாத்திரை செய்யவேண்டுமென்ற அவா மறுபடியும் உண்டாயிற்று. முஸ்லிம்களின் இப்பேரவாவைக் கண்ட நாயகம் (ஸல்.) அவர்கள் அவர்களை அழைத்துக்கொண்டு மக்கா யாத்திரை புறப்பட்டார்கள்.

இஃதிவ்வாறிருக்க, தற்போது உலக முஸ்லிம்கள் ஹஜ்ஜூச் செய்வதற்காக மக்கா யாத்திரை செல்வதுபோல் அக்காலத்திலும் அறபிகளிடை தொன்றுதொட்டு மக்கா யாத்திரை செல்லும் வழக்கமிருந்தது. ஏனெனில், மக்காவிலுள்ள கஃபா என்ற ஆலயம் இறைவனை வணங்குவதற்காக அந்தரங்க சுத்தியுடன் இவ்வுலகிலேயே முதல் முதலாகக் கட்டப்பட்டு, பெரும்பாலான அறபிகளுக்கு மூலப் பிதாவாகிய நபி இஸ்மாயீல் (அலை.) அவர்களின் துணையைக் கொண்டு நபி இப்ராஹீம் (அலை.) அவர்களால் புதுப்பித்துக் கட்டப்பட்டது. நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் மார்க்கத்திலும் மக்கா யாத்திரை ஏற்பட்டிருந்ததால் அவர்களுக்குப் பின் தோன்றிய நபிமார்களும் மக்கா யாத்திரை செய்திருக்கின்றனர். அறபிகளும் ஆரம்பத்தில் இப்ராஹீம் (அலை.) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றிப் பின்னர் பலவிதக் கொள்கையைக் கொண்டவர்களாதலால், அவர்களும் வருஷா வருஷம் மக்கா யாத்திரைமாத்திரம் செய்து வருவதில் தயங்குவதில்லை. ஆனால், இக்காலத்து மக்கா யாத்திரையில் செய்யப்படும் அனுஷ்டான அமல்களுக்கும் அக்காலத்தில் செய்யப்பட்டு வந்த அனுஷ்டான அமல்களுக்கும் அதிக வித்தியாசமுண்டு என்பதை நேயர்கள் ஞாபகம் வைக்கவேண்டும். எவ்வாறாயினும், பூர்வீக காலத்தில் மக்கா யாத்திரை செய்யுங் காலத்தில் காட்டு மிராண்டிகளாகவும், யுத்தப் பிரியர்களாகவும் இருந்த அறபிகள் தங்கள் யுத்தங்களை நிறுத்திவிட்டு மிகவும் சமாதானமாகி ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல் மக்காவுக்கு வந்து கஃபாவை பிரதக்ஷணம் செய்வது வழக்கம். கஃபாவுக்கு ஊழியர்களாக இருக்கும் குறைஷியர்கள் ஆலய தரிசனத்திற்காக வரும் அறபியர்களில் எவரையும் எவ்விதத் தடையுமின்றி மக்காவிற்கு வரவும் கஃபாவை பிரதக்ஷணம் செய்யவும் அனுமதிப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய ஊழியமும் செய்வர். ஆகவே, கஃபா எனும் ஆலய தரிசனத்திற்கு முஸ்லிம்கள் சென்றால் அவர்களை குறைஷியர்கள் தடுக்கமாட்டார்கள் என முஸ்லிம்கள் கருதினர். பின்பு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் ஸஹாபாக்களும் மக்காவுக்குப் பிரயாணமானார்கள்.

இந்த இடத்தில் கவனிக்க வேண்டியதொன்று யாதெனில், முஸ்லிம்கள் யுத்தத்திற்காக வருகின்றனர் என எவரும் நினைக்க இடமிருக்கலாகாது என்பதற்காக யுத்தத்திற்குரிய ஆயுதங்களெதையும் உடன் கொண்டு செல்லலாகாது என நாயகம் (ஸல்.) அவர்கள் கண்டிப்பாகக் கட்டளையிட்டார்கள். இதற்கேற்ப முஸ்லிம்களில் எவரும் எத்தகைய ஆயுதமுமின்றிப் பிரயாணமானார்கள். இவ்விதமாக நாயகம் (ஸல்.) அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவுக்கு 6 மைல் தூரத்திற்கப்பாலுள்ள துல்ஹுலைபா என்ற ஸ்தலத்திற்கு வந்தபோது ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் சென்று ஆயுதமில்லாமல் பகைவரின் நாட்டிற் செல்வது அனுசிதமான காரியமாகுமெனத் தெரிவித்துக்கொள்ளவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உடைவாட்களை மாத்திரம் உறையில் போட்டு வைத்துக்கொள்ள அனுமதித்தார்கள். எதிரிகளுக்குச் சந்தேக மேற்படுவதற்கு இடமிருக்க லாகாது என்பதற்காக இவ்வளவு முன் ஏற்பாடு செய்து பிரயாணமாகியும் அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்துவருவதற்காக முன்னதாகவே ஒரு ஆளை அனுப்பி வைத்தார்கள். இவர் முஸ்லிம் என்பது குறைஷியர்களுக்குத் தெரியாது. நாயகம் (ஸல்.) அவர்கள் ஆலய தரிசனத்திற்கு வரும் செய்தி குறைஷியர்களுக்கு எட்டிற்று. உடனே, அவர்கள் கோபங்கொண்டனர். நபி பெருமானார் (ஸல்.) அவர்களையும் முஸ்லிம்களையும் மக்காவிற்குள் பிரவேசிக்க

விடமுடியாது எனக் குறைஷியர்கள் கூறுவதாகவும், இவர்களுக்குத் துணையாக இதர அரபிக் கூட்டத்தினர் இருப்பதாகவும், காலிதுப்னுல் வலீது, அபூஜஹ்லின் மகனாரான இக்ரிமா ஆகிய இவ்விரு தளகர்த்தர்களின் தலைமையின்கீழ் குறைஷிப்படைகள் மக்காவுக்கு வெளியில் ஆயுதபாணிகளாகக் காத்திருப்பதாகவும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அத் தூதுவரால் அஸ்பான் என்னுமிடத்தில் அறிவிக்கப்பட்டது.

குறைஷியர்களின் அநீதமான இப்பிரயத்தனத்தைக் கேட்ட பின்பும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வருத்தமோ துக்கமோ ஏற்படவில்லை. இறுதியாக திருமக்காவுக்கு ஒரு மன்ஜில் தூரத்திலுள்ள ஹுதைபிய்யா என்ற இடத்தில் வந்து தங்கினார்கள்.

நிற்க, மக்காவிலுள்ள “குஸாஆ” என்ற கபீலாக்காரர்கள் இதுவரை இஸ்லாத்தைத் தழுவாவிட்டாலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடனும் முஸ்லிம்களுடனும் சிநேகமாகவே இருந்தனர். மக்கத்து குறைஷியர்கள் செய்யுங்காரியங்களை இக்கூட்டத்தினர் தாம் முஸ்லிம்களுக்கு அறிவித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்துவந்தனர். இதற்கிணங்க, இதுபோழ்தும் இக்கூட்டத்துத் தலைவரான புதைலுப்னு வர்க்கா என்பவர் நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து “குறைஷியர்களின் சேனைகள் உங்கள் வருகையை வழிபார்த்திருக்கின்றன; உங்களை மக்காவுக்குள் செல்லவிடாது அவை தடுக்கும்” என அறிவித்தார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் அவரைநோக்கி “நாங்கள் உம்ருச் செய்வதற்காக வந்திருக்கிறோமே யன்றி சண்டைசெய்யும் நோக்கத்துடன் வரவில்லை. சண்டையானது குறைஷியர்களின் நிலைமையைக் குலைத்துவிட்டது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு இதர அறபியர்களிடம் என்னை விட்டு விடுவது அவர்களுக்கு நல்லது” எனச் சொல்லி அனுப்பினார்கள். இச்செய்தியை அவர் குறைஷியர்களிடம் சொன்னபோது சிலர் அவரைப் பரிகசித்தனர். ஆயினும், அறிவுள்ள சிலர் அவரியம்பியதை அனுசரித்து உர்வத்துப்னு மஸ்ஊத் என்பவரை நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பினர். அவர் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து குறைஷியர்களின் கோரிக்கையை எடுத்துக் கூறி இறுதியாக “நீங்கள் உங்களுடைய குலத்தாராகிய குறைஷியர்களை அழிப்பதற்காகவே இந்தக் கூட்டத்துடன் வந்திருக்கிறீர்கள்போலிருக்கிறது. குறைஷியர்களும் ஆயுதபாணிகளாய் வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களைத் தடுக்க இக்கூட்டத்தால் இயலாது. இவர்கள் உங்களைத் தனியே விட்டுவிட்டு ஓடும்படி செய்துவிடுவோம்” என்று கூறினார். இக்கடைசிவார்த்தை ஸஹாபாக்களுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இதற்கு பதிலுங் கூறினார்கள். பின்னர், அவர் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து குறைஷியர்களிடம் திரும்பச்சென்று விஷயத்தை அறிவித்தார். இவ்விதமாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அங்குமிங்கும் தூதுவர்கள் மூலம் நடந்து இறுதியாக குறைஷியர்கள் ஸுஹைலுப்னு அம்ர் என்றவரைத் தங்கள் தூதராக அனுப்பினர். உடன்படிக்கை சம்பந்தமான பேச்சுகள் முடிவுபெற்று எழுத்துவேலை ஆரம்பமாயிற்று.

ஹஜ்றத் அலீ (றலி) அவர்கள் உடன்படிக்கையை எழுத ஆரம்பித்து முதலில் “பஸ்மலா”வை எழுதினார்கள் ஸுஹைல் அதை எழுதலாகாது எனத்தடுத்தார். இதை நாயகம் அவர்கள் சமாதானத்தை முன்னிட்டு ஒப்புக்கொண்டு பூர்வீககாலந் தொட்டு அறபிகளுக்குள் எழுதும் வழக்கப்படி எழுதப்பட்டது. பின்பு முஹம்மது றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அங்கீகரித்த உடன்படிக்கை என எழுதப்பட்டது. அதையும் அவர் தடுத்து அப்துல்லாஹ்வின் மகனாராகிய முஹம்மது அங்கீகரித்த உடன்படிக்கை என எழுத வேண்டும் எனக் கூறினார். இதையும் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள். பின்பு உடன்படிக்கை நிபந்தனைகள் எழுதப்பட்டன. அவைகள் வருமாறு:—

1. இவ்வருடம் முஸ்லிம்கள் மக்காவிற்கு வராமல் திரும்பச் சென்றுவிடவேண்டும்.

2. மறுவருடம் முஸ்லிம்கள் மக்காவிற்கு வந்து உம்ருச்செய்யலாம். ஆனால், மூன்று நாட்களுக்கு அதிகமாக மக்காவி லிருக்கக் கூடாது.

3. அவ்வாறு வரும்போது உடைவாளைத் தவிர வேறொன்று மிருக்கக்கூடாது, ஆனல், அதுவும் உறையைவிட்டு வெளியில் எடுக்கக் கூடாது.

4. தற்சமயம் மக்காவிற் குடியிருந்து வரும் எந்தமுஸ்லிமையும் தம்முடன் அழைத்துச் செல்லலாகாது. மக்காவில் குடியிருக்க முஸ்லிம்களில் எவரேனும் இஷ்டப்பட்டால் அவரைத் தடுக்கவுங் கூடாது.

5. மக்காவிலுள்ள ஆடவர்களில் எவரேனும் அவர் முஸ்லிமாக இருந்தாலுஞ் சரி முஸ்லிம் அல்லாதாராக இருந்தாலுஞ்சரி மதீனுவுக்கு வந்தால் உடனே அவரை மக்காவுக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும். ஆனல் முஸ்லிம் எவரேனும் மக்காவிற்கு வந்தால் அவரைத் திரும்ப அனுப்பப்படமாட்டாது.

6 அறபி தேசத்திலுள்ள இதர கோத்திரத்தினர் இவ்விரு கக்ஷியில் எவருடனும் இவ்வுடன்படிக்கையிற் சேர்ந்து கொள்ளலாம்.

இவ்வுடன்படிக்கை குறைஷியர்களுக்கு அதிகச் சலுகையுள்ளதென்று முஸ்லிம்கள் கருதினர். எனினும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மீறி எதையும் சொல்ல அவர்கள் விரும்பவில்லை. இவ்விதமாக உடன்படிக்கை எழுதி முடிந்து கையெழுத்துச் செய்வது மாத்திரம் பாக்கியாக இருந்தது. அப்பொழுது உடன்படிக்கைக்காகத் தூதுவந்த ஸுஹைலுடைய புதல்வரான அபூஜன்தல் என்பவர் மக்காவிலிருந்து ஓடிவந்தார். இஸ்லாத்தைத் தழுவிய "குற்றத்" திற்காக குறைஷியர்கள் இவரை அடித்துத் துன்பப்படுத்தி சிறைசெய்து விலங்கிட்டு வைத்திருந்தனர். இவர் எவ்வாறோ தப்பி ஓடிவந்து சேர்ந்தார். அப்பொழுது ஸுஹைல் உடன்படிக்கை ஷர்த்துப்படி அவரைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமென வற்புறுத்தினர். உடன்படிக்கையிற் கையெழுத்துச் செய்யாததால் அது இன்னும் உறுதியாகவில்லை என்பது நாயகம் (ஸல்.) அவர்களின் கருத்து. ஆதலால், அவரை தப்புவிக்க முடியாது என மறுத்தார்கள். ஆனல், இந்த ஒரு காரியத்திற்காக உடன்படிக்கையே இல்லாது போகும்போலிருந்தது அவ்வளவு பிடிவாதமாக ஸுஹைல் என்பவர் பேசினர். நாயகம் (ஸல்.) அவர்கள் சமாதானத்தையே சதா விரும்புபவர்களாதலின் இறுதியாக அவரை மக்காவுக்கே மறுபடியும் அனுப்புவதாக ஒப்புக்கொண்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இந்த முறை விட்டுக்கொடுத்ததுங் கூட முஸ்லிம்களுக்கு அதிக வருத்தத்தைத் தந்தது. ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் சென்று இவ்வளவு தூரம் இறங்கி நமது பரிசுத்த மதத்தை ஏன் விட்டுக் கொடுக்கவேண்டும் என வினவினர்கள். பின்பு, ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களிடம் சென்று இது சம்பந்தமாகச் சம்பாஷித்தார்கள். அப்பொழுதுதான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் செய்யும் காரியத்தின் கருத்து அவர்களுக்குப் புலப்பட்டது பின்னர், தாம் முதலில் நாயகம் (ஸல்.) அவர்களிடம் அவசரப்பட்டுப் பேசியதற்காக வருந்திப் பல நபில் நோன்புகளை நோற்றும் தொழுகைகளைத் தொழுதும், அல்லாஹ்விடத்தில் அழுதும் தனது பாபத்தை மன்னிக்கப் பிரார்த்தித்தார்கள். இவ்விதமாக உடன்படிக்கை முற்றுப்பெற்று நாயகம் (ஸல்.) அவர்கள் மகாக்காவிற்கேகாமல் மதீனுவுக்கு மீண்டு வருகையில் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இறைவன் தனது திருமறையிலுள்ள "வெற்றி" என்ற அத்தியாயத்தை வெளிப்படுத்தி அறிவித்தான்.

சகோதரர்களே! இந்த உடன்படிக்கை நிபந்தனைகளெல்லாம் குறைஷியர்களுக்கே சாதகமாகவும், முஸ்லிம்களுக்கு முற்றும் பாதகமாகவும் இருக்க, இறைவன் இதை வெற்றியெனக் கூறியது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். இதை யாரும் ஆச்சரியமாகவே நினைப்பர். இறைவனது செயலின் இரகசியங்களை அறியும் ஆற்றல் மனித அறிவுக்கு உண்டோ? இந்த உடன்படிக்கை ஏற்பட்டதால் மக்காவிலிருந்து மதீனுவுக்கும், மதீனுவிலிருந்து மக்காவுக்கும் மனித சஞ்சாரம் ஏற்பட்டது. பகையாக இருந்த இரு சமூகத்தினர் பட்சமாக நடக்க வாரம்பித்தனர். ஒருவருடைய கருத்தை இன்னொருவர் தாராளமாக எடுத்துக் கூறவும், கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வழியேற்பட்டது. இதனல், முஸ்லிம்களின் உயரிய சற்குணங்களையும் நன்னடக்கைகளையும் குறைஷியர்கள் அறிய வாரம்பித்தனர். மயக்கம் தெளிந்தன. சத்திய இஸ்லாம் மாசற்றதென்பதையும் தங்

களுடைய கக்ஷியில் நியாயமில்லை என்பதையும் கண்டனர். இஸ்லாத்தில் சேர விரும்பிக் கூட்டங் கூட்டமாக இஸ்லாத்தில் வந்து சேர்ந்தனர்.

ஆனால், உடன்படிக்கையின் நிபந்தனையிற் கண்ட பிரகாரம் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களும், மதீனாவிலிருந்து மக்காவுக்கு வந்தவர்களும் மக்காவிலேயே ஸ்திரமாக இருக்க வேண்டியதாயிற்று. இவர்களின் உயரிய ஒழுக்கத்தைக்கண்ட ஏனைய குறைஷியர்களிலும் இதரர்களிலும் இஸ்லாம் பரவ ஆரம்பித்தது. ஆதலால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அவ்வளவு அதிகச்சிரமமில்லாமலேயே அநேகம் பிரசாரர்கள் கிடைத்தனர். ஆயிரக் கணக்கானவர்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினர். இதைக் கண்ட பிடிவாத குணமுள்ள குறைஷித் தலைவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து உடன்படிக்கை நிபந்தனைகளிற் சிலவற்றை மாற்றிக்கொள்ள வேண்டுமெனக் கேட்கவும் நேர்ந்தது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு நபிப்பட்டம் வந்து உடன்படிக்கை ஏற்படும்வரை சென்று போன 18-வருஷ காலங்களில் எத்தனை பேர் இஸ்லாத்தைத் தழுவினார்களோ அதைப்பார்க்கிலும் பன்மடங்கு அதிகமான ஜனங்கள் இவ்வுடன்படிக்கை ஏற்பட்ட இரண்டரை வருஷங்களுக்குள் இஸ்லாத்தைத் தழுவினர். சகோதரர்களே! இஸ்லாம் அதன் உயரிய நன்மைகளால் எவ்வாறு பரவிற்று என்பதை நீங்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். இஸ்லாம் தன்னுடைய இயற்கைச்சிறப்பினாலேயே சிறந்தோங்கிற்றென்பதை எவரும் மறுக்க முடியாது என்பது திண்ணம்.

இஃதிவ்வாறு ஈங்கிருக்க நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு உடன்படிக்கையினால் யுத்தம் ஒழிந்து சாவகாச மேற்பட்டதால் அறபி நாட்டிலும் அந்நிய நாட்டிலுமுள்ள பற்பல தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய வழி ஏற்பட்டது. இஸ்லாத்தின் கொள்கைகளையும் நன்மைகளையும் நவின்று இணை வைத்தல் முதலிய தீங்குகளை செம்மையாயுரைக்கத் தூதர்களை அனுப்பியதுடன் கடிதங்களும் எழுதினார்கள். இதனால் பலநாட்டுத்தலைவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்தனர் பலர் இஸ்லாத்தின் உண்மையினை உணர்ந்து அதற்கு ஆதரவளித்தனர். பலர் தங்களின் செல்வச் செருக்கால் எம்பிரான் (ஸல்.) அவர்களை யுத்தகளத்திற் காண விரும்பினர். இவ்விபரத்தை நாயகம் (ஸல்.) அவர்கள் சரித்திரத்தில் விரிவாய்க்காணலாம்.

பின்பு, இவ்வுடன்படிக்கை குரோதங்கொண்ட குறைஷித் தலைவர்களாலும் அவர்களது சகாக்களான இதர கபீலாக்காரர்களாலும் மீறப்படவே மறுபடியும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் மக்கத்தாருக்கும் போர் நடக்க ஆரம்பித்தது. ஆனால், இறைவன் அருளால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் முஸ்லிம்களும் பூரண வெற்றியடைந்தனர். உயிர்ச் சேதம் அதிகமேற்படவில்லை. மிகவும் அமைதியான நிலைமையில் மக்காபுரி நாயகம் (ஸல்.) அவர்கள் வசமாயிற்று. குறைஷியர்களின் கொட்டம் அடங்கிற்று. அவர்கள் யாவரும் கீழ்ப்படிந்தனர். எனினும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு எப்பொழுதும் இடர் செய்து வந்த பல கொடிய விரோதிகள் உயிருக்குப் பயந்து ஊரை விட்டோடினர். ஆயினும் நாயகம் (ஸல்.) அவர்கள், அவர்களுக்கும் மற்றவருக்கும் பொது மன்னிப்பளித்தார்கள் இத்தகைய உதார குணத்தைக் கண்ட, இதுவரை இஸ்லாத்திற் சேராமல் எஞ்சி இருந்த மக்கா வாசிகளும் மனமொப்பி இஸ்லாத்தைத் தழுவினர். இதைத்தவிர, குறைஷியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வெகுகாலமாக விளைந்த போரின் முடிவை அநேக அறபிக் கோத்திரங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தன. அவர்களுக்கு இஸ்லாத்தில் உண்மை புலப்பட்டிருந்தாலும் சொற்ப தொகையினராகிய முஸ்லிம்களுடன் பகிரங்கமாகச் சேர்ந்து குறைஷியர்களின் பகையைச் சம்பாதித்துக்கொள்ள அவர்கள் அஞ்சினர். ஆதலின், இந்த யுத்தங்களில் இறுதியாக எவர் வெற்றிக் கொள்கின்றனரோ அவருடன் சேரலாம் என முடிவு செய்து யுத்தத்தின் முடிவைக் கவனித்து வந்தனர். இப்பொழுது இஸ்லாத்திற்கும் பூரண வெற்றி கிடைத்துவிட்டதால் அவர்கள் அச்சமற்று, பயமற்று இஸ்லாத்தை வலிய வந்து தழுவிக்கொண்டு நாயகமவர்களின் அனுமதி பெற்று தங்கள் நாடுகளிலும் இஸ்லாத்தைப் பரவச் செய்தனர்.

எம்பெருமானர் (ஸல்) வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள்

கி. பி. கோ. 600-ம் நூற்றுண்டில் பூ உலக முழுதும் எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளை அனியாயம் சதி முதலிய துற் செயல்கள் மலிந்து கிடந்தன. அதுபொழுது 571-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 26ஈ (ரபீஉல் அவ்வல் 12ந் தேதி) திங்கட்கிழமை யன்று கியாதி வாய்ந்த மாபெருந்தலைவரும் சிருஷ்டிகளில் மேலானவருமாகிய எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் இப்பூஉலகின் கண் ஜனனமானுர்கள். அவர்கள் வயற்றிலிருக்கும் பொழுதே அருமைத் தந்தையாரான ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் மதீனுவிற்குச் செல்லும் வழியிலேயே காலகதியடைந்து விட்டார்கள்.

சிறுபிராயம்

ஆரம்பத்தில் அருமைத் தாயாரான ஹஸ்ரத் ஆமினு (ரலி) அவர்கள் பால் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதன்பின் அபூ லஹபின் வெள்ளாட்டி பால் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏழாவது நாள் தங்கள் பாட்டனுரான அப்துல் முத்தலிப் அவர்கள் முஹம்மத் (ஸல்) என்னும் திருநாமம் சூட்டினுர்கள். அராபியாவின் வழக்கம்போல் பால் கொடுப்பதற்காக பிரக்யாதி பெற்ற பனூஸஅத் கூட்டத்தைச் சேர்ந்த சங்கை பொருந்திய மாதுசிரோன்மணி ஹலீமா அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆறு வருஷ காலம் நமது உலகரெட்சர் (ஸல்.) அவர்கள் அவர்களிடமே யிருந்தார்கள். பால் குடிகாலத்தில் சிறு பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய எவ்வித பலக்குறைவும் தங்களுக்கு நிகழ்ந்ததே கிடையாது.

சவரக்ஷணையும் வாலிபமும்

ஆறு வருடம் பூர்த்தியடையாமலிருக்கும் போதே எதீம் என்னும் கிரிகடம் தங்கள் தலையில் வைக்கப்பட்டது. அருமைத் தாயாரை இழந்தபின் ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களினதுபொறுப்பைஏந்துகொண்டார்கள். பிறகு இரண்டு ஆண்டிற்குள் அன்பு பக்ஷத்தோடு வளர்த்துவந்த அருமைப் பாட்டனுரின் நிழலும் சிரசை விட்டு நீங்கிற்று. இதுபொழுது தங்கள் பராமரிப்பை ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் அன்போடு ஏந்துகொண்டார்கள். இதனிறுதியில் தங்களுக்கு பதிமூன்று பிராயமானவுடன் இவ்வுலகின் கண் ஆரம்பமாக வியாபாரத்தையே தெரிந்துகொண்டு தங்கள் பெரிய தந்தையுடன் ஷாம் தேசத்திற்கு வியாபார நிமித்தம் சென்று தக்கசெட்டுடன் திரும்பிவந்து மானிடர்களுக்குத் தொண்டு புரிவதிலும் ஆண்டவனை வணங்குவதிலும் தங்கள் நேரங்களைப் போக்கிக்கொண்டிருந்தார்கள். 25 பிராயமானவுடன் மக்காவிலுள்ள ஐஸ்வரிய சிரோன்மணி ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் வியாபார ஏஜெண்டாக மறுமுறையும் ஷாம்தேசஞ் சென்றுர்கள். போகும் வழியிலேயே எல்லாச் சாமான்களும் தக்க செட்டுடன் விற்பனையாய்விட்டது. இம்முறையும் பெருத்த இலாபத்தோடு மக்காவிற்குத் திரும்பி வந்தார்கள்.

கதீஜா (ரலி) யுடன் விவாகம்

கதீஜா (ரலி) அவர்கள் 40 பிராயமுடைய விதவையாக யிருந்தவர்கள் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களுடன் விவாகஞ்செய்துகொள்ள விரும்பினர். அதுபொழுது தங்களுக்கு 25 பிராயமாயிருந்தும் தங்கள் பெரிய தந்தையாரின் அனுமதியின்பேரில் விவாகத்திற்குச் சம்மதித்து சீமாட்டியாரான கதீஜா (ரலி) அவர்களை விவாகம் புரிந்துகொண்டார்கள். அதற்குபின் தங்களின் வாழ்க்கையிலேயே புதியதோர் மாறுதல் ஏற்பட்டது. அதாவது தாங்கள் ஆண்டவனை வணங்குவதிலும் சமுகத்தொண்டு புரிவதிலும் முன்னைவிட பதின்மடங்கு சிறந்து விளங்கினுர்கள். அதற்குப்பின் யாவராலும் "முஹம்மதுல் அமீன்" என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.

வஹீவருதலும் இஸ்லாமியப் பிரசாரமும்

எம்பெருமானுர் சற்குண சீலர் (ஸல்.) அவர்களுக்கு 40 வயதாய் விட்டவுடன்

ஆண்டவனை வணங்குவதற்காகத் தனித்த இடத்தைத் தேடிக்கொண்டு மக்காவிலிருந்து 3 மைல் தூரமுள்ள "ஹிரா" வென்னும் மலைக்குகைக்குச் சென்று பலநாட்கள்வரை அங்கேயே யிருப்பார்கள். கடைசியாக ஆண்டவனின் கிருபை, அன்பு என்னும் கடலின் அலைகள் மேலிட்டு நபிப்பட்டம் வருவதற்குள்ள காலம் சமீபித்துவிடவே உண்மையான கனவுகள் புலப்பட்டன. கடைசியாக இப்ராஹீம் (அலை.) அவர்களின் துஆவினுடையவும் ஈஸா (அலை.) அவர்களின்நன் மாராயத்தினுடையவும் சிதேவித்தனத்தினுடைய நங்நாளும் உதயமாகி அசரீரி வாக்கானது ஹிராப் பொதும்பினுடைய மூலையின் இருளைநீக்கி பிரகாசமடையச் செய்துவிட்டது. ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) உதயமாகி ஓதுங்களெனக் கூறவே, நான் ஓதப்படிக்கத் தெரியாதிருக்கும் நிலைமையில் எவ்வாறு ஓதுவேன் எனக் கூறவே, ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) நெஞ்சோடுநெஞ்சைச் சேர்த்தவுடன் தாங்கள் ஆரம்பித்து உலகமடங்கலையும் படைத்தவனும் மானிடனை தசைக்கட்டியினின்று படைத்தவனுமாகிய ஆண்டவனது திருநாமத்தை ஓதினார்கள்....இது ஆரம்பமாக ரபீஉல் அவ்வல் என்னும் சங்கைபொருந்திய மாதத்தின் 8-ந்தேதியாகிய திங்களன்று இறங்கிய வஹியாகும். அதுபொழுது ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள், எம்பெருமானார் (ஸல்.) அவர்களைநோக்கி "தாங்கள் ஆண்டவனது உண்மை ரசூலாகயிருக்கும். எனக் கூறினார்கள் இச்சுபச் செய்தியைக்கேட்டு உம்முல் மூமினீன் ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களிடம் தெரிவிக்கவே அச்சீமாட்டியாரவர்களும், வரகாபின் நௌபலும் முதன் முதல் அதை உண்மையாக்கிவைத்தார்கள். அதற்குபின் ஹஸ்ரத் அலீ (ரலி) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்திக் (ரலி.) ஹஸ்ரத் ஜைத் (ரலி.) ஹஸ்ரத் பிலால் (ரலி.) ஹஸ்ரத் உமரிப்னு உக்பா (ரலி) ஹஸரத் காலித் பின்ஸஅத் (ரலி) முதலியோர் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டனர்.

மலைமீதுபிரசாரம்

இதற்குப்பின் 6 மாதகாலம் மறைவாகவே இஸ்லாமியப் பிரசாரஞ் செய்துகொண்டிருக்கும் சமயம் ஹஸ்ரத் கதீஜா நாயகி (ரலி) அவர்களது இல்லத்திலேயே ஆண்டவனது ஒளி பிரகாசித்து மறுமுறை வஹீவர ஆரம்பித்தது. "ஏ! துப்பட்டிபோர்த்திக்கொண்டிருப்பவரே எழுந்து மானிடர்களுக்கு ஆண்டவனின் வேதனையை எடுத்துக்காட்டும்; உமது நாயனின் மகுத்துவத்தை அறிவியும்; உம்முடைய உடுபிடவையை துப்புறவாகவும் நஜீஜ் கலந்துபோகாமலும் வைத்துக்கொள்ளும்" என்னும் கட்டளைபிறந்தவுடன் இதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவான் வேண்டி "ஸபா" வென்னும் மலையில் குரைஷித் தலைவர்கள் யாவரையும் அழைத்து ஒன்றுசேர்த்து "இம்மலையின் ஒரு மூலையில் பெரியதோர் பட்டாளமிருந்து உங்களைத் தாக்குவதற்காகச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறதெனக்" கூறுவேனாகில் அதனை நீங்கள் சரி காண்பீர்களா? எனக் கேட்டதற்கு, எல்லோரும் ஒன்றுசேர்ந்து தாங்கள் எப்பொழுதும் உண்மை பேசுபவர்களாதலின், தாங்கள் சொல்வதை சரி என்றே ஒப்புக்கொள்வோம் எனக் கூறினார்கள். தங்களை உண்மையாக்கி வைப்பதைக்கண்டு "ஆண்டவன் ஒருவனாகும்; நான் அவனது உண்மையான தூதராகும். இவ்விஷயத்தின்மீது நீங்கள் உறுதிகொள்ளாமலும் விக்கிர ஆராதனையைவிடாமலுமிருப்பீர்களாயின் உங்கள்மீது ஆண்டவனது வேதனை இறங்கும்" என எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறவே அநேக குப்பார்கள் பொருத்தக் கேடுடையவர்களானார்கள். குறிப்பாக அபூலஹபும் இன்னுமனேகரும் நபிகள் திலகம் (ஸல்) அவர்களைக் கெட்டவர்களெனச் சொல்லவும் ஆரம்பித்தார்கள். அதற்குப்பின் தாங்கள் தைரியமாக இஸ்லாமியப் பிரசாரஞ்செய்ய ஆரம்பித்தபொழுது குப்பார்களின் தொந்திரவுகளும் அதிகப்பட்டுவிட்டது இதுபொழுது முஸ்லிம்கள் 40 பெயர்வரையி லிருந்தனர். அதனால் எம்பிரான் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாவினுட்சென்று ஆண்டவனை வணங்க முற்பட்டார்கள். குப்பார்களோ கேலிபரிசாசஞ்செய்து தங்களைக் கடுமையாகத்தாக்க ஆரம்பித்தார்கள். அதற்குப்பின் நபித்துவமென்னும் ஒளியில் விளக்குப் பூச்சிகள் வந்து விழ ஆரம்பமாயிற்று. எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் பாதுகாவலுக்காகவே கஃபத்துல்லாவில் ஆரம்பத்தில் இஸ்லாத்தின் பாதையில் ஹஸ்ரத் ஹாரிது

பின் உபை அவர்கள் தங்களது உயிரைத் தியாகஞ் செய்தார்கள்.

குப்பார்களின் சதி.

எம்பிரான் (ஸல்.) அவர்களது பிரசாரத்தின் போக்கைப்பார்த்து அஞ்சி தங்களுக்கு யாவரும் விரோதிகளாய் விட்டனர். அவர்கள் யாவரும் ஒன்று கூடி யோசித்து ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களிடம் தூதுவக்கூட்டமொன்றை அனுப்பி “முஹம்மதாகிறவர் (ஸல்.) நம்மூதாதைகளின் கடவுள்களைப் பரிகசிக்கின்றார். அதை நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது. ஆதலின் அவரை தனியாக விட்டுவிடுங்கள் அல்லது அவருடன் சேர்ந்துகொண்டு எங்களுடன் சண்டை செய்யுங்கள்” எனத் தெரிவித்து வரும்படி செய்தார்கள். இதுகேட்டு அருமைத் தந்தையவர்கள் குரைஷியர்களின் ஆத்திரத்தைப் பார்த்து எம்பிரான் (ஸல்.) அவர்களை அழைத்து “இஸ்லாமியப் பிரசாரத்தை விட்டு விடுங்களென” கூறவே, தங்கள் கண்களிலிருந்து தண்ணீர் வடிந்தவர்களாக “ஆண்டவன்மீது பிரமாணமாக எனது ஒரு கையில் சூரியனையும் மற்றொருகையில் சந்திரனையும் கொண்டுவந்து வைத்தபோதிலும் நான் இக்கடமையை நிறைவேற்றுவதினின்று சற்றேனும் பின்னடையமாட்டேன். ஒன்றிருக்கில் இஸ்லாம் பரவும்படி ஆண்டவன் செய்யவேண்டும் அல்லது இப்பிரசாரத்தின் மீதே என் உயிர் தியாகமாய் விடவேண்டுமெனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களுக்கு இவ்வார்த்தைகள் பெரும் பிரயோசனத்தை அழித்து விட்டது. அதனால் அவர்கள் மக்காவிலுள்ள குப்பார்களினுடைய விரோதத்தையும் பொருட் படுத்தாது “உங்கள் மனது நாடுவதுபோல் செய்யுங்கள், நான் எப்பொழுதும் உங்கள் கூடவேயிருப்பேன்” எனக் கூறிவிட்டார்கள். இதனால் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் முன்னைவிட பதிமடங்கு இஸ்லாமியப் பிரசாரத்தி லீடுபட்டார்கள். அதனால் குப்பார்களின் பகைமையும் அதிகரித்து விட்டது. இவ்விதமான சங்கடங்கள் கொடுப்பதைக் கொண்டும் எம்பிரான் (ஸல்.) அவர்கள் தளர்ச்சி அடையா திருப்பதைப்பார்த்து ஒரு தூதுவக் கூட்டத்தினர் எம்பெருமானார் (ஸல்.) அவர்களை சந்தித்து “தாங்கள் மக்காவினுடையவும் அதற்கு சூழாவுள்ள ஊர்களினுடையவும் அதிகாரத்தை ஒப்புக்கொள்ளுங்கள்; உங்களுக்கு விவாகம் புரிந்து கொள்ள விருப்ப மிருப்பின் அரப்பித் தலைவர்களில் யாருடைய குமாரத்திகளை விரும்புகிறீர்களோ அதனை விவாகஞ்செய்து தருகின்றோம்: தங்களுக்கு காசு பணத்தின் மீது விருப்பமிருக்கின் அளவற்ற திரவியங்களை தங்கள் சன்னிதானத்தில் கொண்டு வந்து குவித்துவிடுகின்றோம். ஆனால் எங்கள் தகப்பன் பாட்டன் இவர்களது மார்க்கங்களைக் கெடுதியாகக் கூறுதீர்கள்” எனக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கு நமது உலகரெட்சகர் அஞ்சா நெஞ்சம்படைத்த உத்த சீலர் (ஸல்.) அவர்கள் ஆண்டவனது திருவஸனத்திலிருந்து சில வாக்கியங்களை ஓதிக் காண்பித்து தங்களின் உண்மைத் தூதைப் பிரசாரஞ் செய்தார்கள். குரைஷ்களின் தந்திரங்களெல்லாம் பாழடைந்து போகவே இஸ்லாத்தைத் அழிவிட வேறு வித தந்திரங்களைக் கையாள முற்பட்டு இஸ்லாத்தைப் பின்பற்றும் ஏழைகளுக்கு பலவாறுன தொந்திரைகொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஹிஜ்ரத்.

எதுபொழுது சகிக்க முடியாத பல கஷ்ட சங்கடங்கள் ஏற்பட்டு விட்டதோ அதுபொழுது ஆண்டவனது கட்டளைப் பிரகாரம் முஸ்லிம்களின் கூட்டமொன்று ஹபஷா தேசத்தின் பக்கல் சென்றது. அபூஸுப்யான் உமவீ என்பான் ஹபஷாவரை அவர்களைப் பின் தொடர்ந்து சென்று “இவ்வனியாயகாரர்களை உங்கள் தேசத்தைவிட்டு வெளியாக்கி விடுங்களெ”ன்று ஹபஷாவின் அதிகாரியிடம் தெரிவித்தான். அந்தராஜனே முஹாஜிரீன்களைத் தம்மிருப்பிடம் அழைத்து வரச் செய்து இஸ்லாமிய போதனைகளை விசாரித்து சரிகண்டதுடன் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தையும் உண்மையாக்கி வைத்தார். இதனால் அபூஸுப்யான் தம் நாட்டம் நிறைவேறாது வெறுங்கையாகத் திரும்பிவிட்டான். அதன்பின் நுபுவ்வத்தின் ஆறும் ஆண்டு அரபியாவின் சுத்த வீரிய பராக்கிரமசாலிகளான ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி.) ஹஸ்ரத் உமரபாரூக் (ரலி.) முதலானோர் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவினர். நாளுக்கு நாள் இஸ்லாம் மேலோங்கி

வருவதைப்பார்த்த குப்பார்கள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்த முச்சரிக்காச் செய்து கொண்டு பனூஹாஷிம் கோத்திரத்தினரை சமூக பஹிஷ்காரஞ் செய்துவிட்டனர். மூன்று ஆண்டுகள் வரை ஊண் தீன் முதலியவைகளின் விஷயத்திலும் நெறுக்கி வைத்து விட்டார்கள். கடைசியாக ஆண்டவனது கிருபையினல் அவர்களது ஒப்பந்தப் பத்திரம் செல்லறித்துக்கெட்டுப்போய்விட்டது. அதன்பின் எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் மிஃருஜிற்குச் சென்றார்கள் இதே வருஷத்தில் தான் ஹஸ்ரத் கதீஜா (ரலி.) ஹஸ்ரத் அபூதாலிப் (ரலி.) இவர்கள் காலகதி அடைந்தார்கள். அதுசமயம் பனூஉமைய்யாக்களும் குரைஷித் தலைவர்களும் ஒன்று கூடி யோசித்து அரபிக்கூட்டத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள்குடும்பங்களிலிருந்துஒவ்வொரு ஆளை அனுப்பி எம்பெருமானர் (ஸல்.) அவர்களைக் கொலை செய்துவிடும்படி செய்யவேண்டும்; அவ்வாறு செய்வோமாகில் பனூஹாஷிம்கள் எல்லோருடனும் சண்டை செய்ய முற்படமாட்டார்கள் என பேசி முடிவு செய்திருந்தனர். நடு இரவில் தாங்கள் ஆண்டவனது கட்டளைப்பிரகாரம் மக்காவை வெறுத்துச் செல்வதற்கு ஆயுத்தமாக ஆய்விட்டார்கள். அதுபொழுதும் தங்களிடம் விரோதிகளின் அமானிதங்களிருந்தன வாதலால் அவ்வமானிதங்க ளடங்கலையும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு தங்களின் படுக்கையில் அவர்களைச் சயனிக்கச் செய்து நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களுடன் மதீனவுக்குப் புறப்பட்டு விட்டார்கள் எவர்கள் எம்பெருமானர் (ஸல்.) அவர்களைக் கொலை செய்வதற்காகக் காத்துக்கொண்டு நின்றார்களோ அவர்கள் பக்கல் ஒரு பிடி மண்ணை எரிந்தார்கள். உடனே அவர்கள் யாவரும் குருடர்களாய் விட்டனர் எம்பெருமானர் (ஸல்) அவர்கள் பகைவர்களின் சூழ்ச்சிகளை விட்டு வெளியாகி "தௌர்" என்னும் பொதும்பிற்குள் மூன்று நாள் வரை தங்கியிருந்துவிட்டு மதீன முனவ்வருவுக்குப் பிரயாணமாய் விட்டார்கள். மதீன வாசிகள் ஒவ்வொரு நாளும் எம்பெருமானர் (ஸல்.) அவர்களது ஒட்டகம் வருவதை வழி பார்த்தவர்களாக ஊருக்கு வெளியில் வந்து நின்றுகொண்டிருப்பது வழக்கம். கடைசியாக ரபீஉல் அவ்வல் மீ 8-ங்வ வியாழக்கிழமையதினம் நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரி (ரலி.) அவர்களது இல்ல மேகினர்கள். ஹிஜ்ரத்தின் முதல்ஆண்டிலேயே மஸ்ஜிதநபவிக்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. எம்பிரான் (ஸல்.) அவர்கள் கூலி வேலை செய்பவர்களைப்போன்று ஆண்டவனது வணக்கஸ்தலத்தின் கைங்கரியத்தி லீடு பட்டிருந்தார்கள் அதே ஆண்டில்தான் தொழுகைக்காக பாங்கு சொல்வதும் ஏற்பட்டது.

யுத்த ஆரம்பம்.

ஹிஜ்ரத்தின் இரண்டாவ தாண்டில் குரைஷ்கள் மதீனவின் தலைவர் அப்துல்லாஹ் பின்உபை அவர்களுக்குக் கடித மெழுதி அதில் "எங்களுடைய பகைவரான முஹம்மதுக்கு (ஸல்.) அன்ஸார்கள் இடமளித்திருக்கின்றார்கள். ஆதலின் அவரைக் கொன்றுவிடுங்கள் அல்லது மதீனவை விட்டு வெளியாக்கி விடுங்கள் இவ்வாறு செய்யவில்லையாயின் நாங்கள் யாவரும் சேர்ந்துகொண்டு மதீனவைத் தாக்குவோம்" எனக்குறிப்பிட்டிருந்தனர். அதற்குப்பின் அன்ஸார்களின் ஆடு மாடு ஒட்டகம் மேயுமிடங்களில் யுத்தம் நடைபெரு மென்னும் அறிக்கையும் கொடுத்து விட்டு ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரமளான்மீ 12-ங்வ யுத்தத்திற்காகப் புறப்பட்டுவிட்டனர். இது செய்தி எம்பெருமானர் (ஸல்.) அவர்களுக்குத் தெரிந்து எதிரிகள் மதீனவிற்கு வருவதற்குமுன் 300 பெயர்களுடன் "பத்ர்" என்னுமிடத்திற்குச் சென்று எதிரிகளைத் தடுத்து சுத்த வீரியத்தோடு உலகம் பிரமிக்கத் தக்க விதத்தில் யுத்தம் புரிந்ததின்காரணமாய் குப்பார்கள் பெரும் தோல்வி அடைந்து விட்டார்கள். முஸ்லிம்களுக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. இதற்குப்பின் உஹத் யுத்தம் நிகழ்ந்தது. இஸ்லாத்தின் ஜோதி பிரகாசித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுறும் குப்பார்கள் அதை அழித்துவிட வேண்டு மெனக் கருதி தங்களது முழு பிரயாசையையும் செலவு செய்து பல யுத்தங்கள் நிகழ்த்தினர். ஆனல் ஏகத்துமுள்ள அல்லாஹ் ஜல்லஷானஹு தஆலாவானவன் சகல யுத்தங்களிலும் தனது ஹபீப் அவர்களுக்கே ஜெயத்தை அளித்து விரோதிகள் தோல்வி அடை

யும்படி செய்திருக்கின்றான் கடைசியாக எதைவிட்டு மனம் வெறுத்து ஹிஜ்ரத்துச் செய்தார்களோ அந்த யிடத்திற்கே 8-ம் ஆண்டில் 10 ஆயிரம் பெயருடன் ஜெயபேரி கையுடன் பிரவேசித்தார்கள். அதுபொழுது தங்களது இஸ்லாமிய விரோதிகளுக்கெல்லாம் பொது மன்னிப்பு அளித்ததானது இஸ்லாமிய சரித்திரத்தின் ஓர் நூதன சம்பவமாகயிருந்தது. அதற்குபின் ஒரு பிரசங்கம் புரிந்தார்கள். அதில் அயல்பாகக்காரரின் கடமைகளை வற்புறுத்திக்கூறியதுடன்வேலைக்காரர்கள் பெண்டீர் முதலியோருக்கு நம்மீதுள்ள கடமைகளையும் தெரிவித்தார்கள். அதில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மறு உலக யாத்திரை செய்வதற்குள்ளசயிக்கினையுமிருந்தது.

மறு உலக யாத்திரை

ஹிஜ்ரி 11-ம் ஆண்டு ஸபர் மாதத்தின் கடைசியில் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு ஜுரமும் தலைவலியு மேற்பட்டது. இது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. இதுசமயம் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "யாருக்காகிலும் நான் கடன் கொடுக்கவேண்டி யிருந்தால் வாங்கிக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்திலும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மிஸ்வாக்கை விட்டார்களில்லை. கடைசியாக ஹிஜ்ரீ 19-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம் 2-ந் தேதி திங்கட்கிழமையன்று தங்களது 63-ம் வயதில் நுபுவ்வத்தென்னும் சூரியன் அஸ்தமித்து மேன்மையும் சங்கையும் பொருந்திய ஆண்டவனின் திரு சன்னிதானத்திற்கு அவர்களது பரிசுத்த ஆத்மா சென்றுவிட்டது.

நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் வருகையைப்பற்றி ஜின்களின்சாக்ஷியம்

நாம் ஸஹீஹான ஹதீதுகளைப் பார்ப்போமாயின் நமது உலக ரெட்சகர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் விஜயஞ் செய்வதற்குமுன் பூமியின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலெல்லாம் தங்கள் வருகையின்நற்செய்தி பரவிப் போயிருந்ததென்பது பட்டப்பகல் சூரியனே போன்று யாவருக்கும் வெளிச்சமானதே. அதனால் மானிடர்களும் ஜின்களும் தங்கள் வருகையின்மீது ஆவல்கொண்டு அன்போடு எதிர்பார்த்திருந்தனர்.

மானிடர் ஒரு பக்கலிருக்கட்டும். எம்பிரான் (ஸல்.) அவர்கள் இப்பூஉலகின் கண் ஜனனமாவதற்கு முன்னே பாரான் பாலைவனத்தின் பக்கலிருந்து ஏகத்துவத்தின் ஓசை வீசிக்கொண்டும் சீதேவித்தனம் பெருகுவதற்குள்ள வாடை அடித்துக்கொண்டுமிருக்கிறது; நேர்வழி என்னும் சுடர் பல திக்குத் திசைகளில் வீசஆரம்பிக்கப்போவதாகத்தெரிகிறது; வழி கேடான முறையில் வணக்கம் புரியப்பட்டு வந்த நெருப்பு களெல்லாம் அமர்ந்து போவதற்குள்ள காலம் நெருங்கி வருவதாகத் தெரிகின்றது. சுருங்கக் கூறின் நஸாராக்களி னுடையவும் எஹூதிகளினுடையவும் கெட்ட கொள்கை களெல்லாம் அழிந்தொழிந்து போவதற்குள்ள காலம் தென்படுகிறது. ஆதலின் உண்மையின் பக்கல் தலைசாய்ப்பதற்கும் ஏகத்துவம் பொருந்திய ஒரே ஆண்டவனை வணங்குவதற்கும் ஆயுத்தமாய் ஆய்விடுங்களென்று ஜின்கள் அறிக்கை செய்ததாகக் கூறப்படுகிறது.

முதல் சாக்ஷியம்

அமீருல் முமீனின் ஹஸ்ரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதற்கு முன் ஒருநாள் விக்கிரஹ ஆலயத்தில் நின்றுகொண்டிருக்கும் சமயம் முஷ்ரிகீன்கள் ஒரு கன்றை சுவாமிக்காக அறுத்து பலியிட்டார்கள். அதுபொழுது திடீரென ஒரு சுவாமியின் வயிற்றிலிருந்து ஏ! மானிடர்களே! ஓர் ஆச்சரியமான செய்தி யாதெனில் வணக்கத்திற்குப் பாத்திரமானவன் ஒரே நாயனே யாகுமென்று ஒரு நாகரீகம் பொருந்திய மனிதர் கூறுகின்றார் என்னும் சப்தம் வந்தது. இதுகேட்டு முஷ்ரிகீன்கள் யாவரும் ஓடிவிட்டனர். ஆனால் ஹஸ்ரத்

உமர் (ரலி.) அவர்கள் மட்டும் அதன் இரகசியம் என்னவெனத் தெரிந்து கொள்வதற்காக அந்த இடத்திலே நின்று கொண்டிருந்தார்கள். மறு முறையும் அந்த சப்தம் வெளியாயிற்று. மூன்றும் முறையும் அந்தச்சப்தம் கேட்டது. அதுபொழுது ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுக்கு ஏற்பட்ட பயத்திற்கு அளவே கிடையாது. இதற்குப்பின் சில நாட்களுக்கெல்லாம் ஒரு நபி இப் பூ உலகின்கண் ஜனனமாயிருக்கின்றார்கள்; அவர்கள் ஏகத்துவத்தின் பக்கல் மானிடர்களை அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது வெளியாயிற்று.

இரண்டாவது சாக்ஷியம்.

முற்காலத்தில் ஒரு ஜின் என்னோடு பழகியிருந்ததின் காரணமாக வருங்கால நிகட்சிகளைப்பற்றி முற்கூட்டியே அது எனக்கு அறிவித்து விடுவது வழக்கம். நான் அச்செய்தியை முன்னறிக்கையைப்போன்று மனிதர்களிடம் சொல்லிக் காண்பிப்பது கொண்டு யாவரும் எனக்கு அளவற்ற சங்கை மறியாதை செய்து மித மிஞ்சிய திரவியங்களை அழிப்பார்கள் அவ்வறிவிப்புகளி லனேகம் உண்மையாகவே ஆய்விடுவது வழக்கம் ஒரு நாளிரவு நான் தூக்கத்திலிருக்கும் சமயம் அந்த ஜின்னானது என் சமீபம் வந்து "சீக்கிரமாக எழுந்து உஷாராக ஆய் வழிப்படுவதென்னும் தலையை சாய்த்துவிடு "லுவை இப்னு காலிபின் வம்சத்தில் ஒரு நபி தோன்றி யிருக்கின்றார்" என கூறி சில பாடல்களைப் பாடியதுபோல் தோன்றிற்று உடனே திடுகூறாக தூக்கத்தைவிட்டெழுந்து இரவு முழுதும் கவலையினும் மன நிம்மதி யடையாமனு மிருந்தேன். அக்கவலையிலேயே விடிந்து மறு நாளும் செல்படியாகி அடுத்த இரவு வந்தவுடன் துயில் கொள்வதற்கு ஆரம்பித்தேன் அதுபொழுது அந்த ஜின்னனது என்னை எழுப்பி சென்ற இரவில் படித்த கவியைப்பாடிச் சென்று விட்டது. மூன்றுவது இரவிலும் அவ்வாறே நிகழ்வுற்றது. இதற்குப்பின் யாருக்கும் தெரியாது மக்காவிற்குச் செல்லவேண்டு மென்னும் எண்ணம் எனக்கேற்பட்டு உடனே நான் அவ்விடம் சென்று உலக ரெட்சகர் (ஸல்.) அவர்கள் திரு சமுகமெய்தினேன் தாங்கள் என்னைப் பார்த்தவுடன் ஏ! ஸவாதிப்னு அகாரிலே எனக் கூவி அழைத்து உம்மை இவ்விடம் வரும்படி செய்த சக்தி இன்னதென எனக்குத் தெரியுமெனக் கூறினார்கள். இதற்குப் பின் தன்னறியாது "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற்றஸூலுல்லாஹி" என்னும் தூய்ய கலிமாவை விறைந்து ஒதினேனென ஹஸ்ரத் ஸவாதிப்னு அகாரில் (ரலி.) அவர்கள் கூறினார்கள்.

மூன்றுவது சாக்ஷியம்.

"மாஜின தாயி" என்னும் பெயருள்ள ஒரு மனிதன் உம்மானின் விக்கிரஹ ஆலயத்தில் தொண்டு புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாலயததில் நாஜிர் என்னும் பெயருள்ள ஒரு விக்கிரஹ மிருந்தது அதற்காக அவர் ஒரு ஆட்டைப் பலியிட்டுக்கொண்டிருந்தார். அதுபொழுது அவ் விக்கிரஹத்தின் வயற்றிலிருந்து ஏ! மாஜினே என் பக்கல் திரும்பி அத்தியா அவசியமான ஒரு வார்த்தையைக் கேட்டுக்கொள் அதாவது "இவர் ஆண்டவனல் அனுப்பப்பட்ட நபியாகயிருக்கும். அவர் கொண்டுவந்திருக்கும் உண்மையை ஒப்புக்கொள் அதனல் நீ நரகத்தின்நெருப்பை விட்டுத் தப்பிக்கொள்வாய் என்னும் சப்தம் வெளியாயிற்று. அச்சப்தத்தைக்கேட்டு அவர் பெரும் ஆச்சரியமுற்று மறு ஆட்டை அறுக்கும்பொழுதும் அதே விக்கிரஹத்தின் வயற்றிலிருந்து "ஏமாஜினே! சந்தோஷச் செய்தியைக்கேட்டு ஆனந்தமடை. சத்தியம் வந்துவிட்டது. அசத்தியம் ஒழிந்தது. ஆண்டவன்புறத்தி லிருந்து "முளர்" கிளையார்களில் ஒரு நபி அனுப்பப்பட் டிருக்கின்றார்கள். கற்சிலையைவிட்டுவிடுவாயாகில் ஈடேற்றம் மோக்ஷம் பெருவாய்" என்னும் கவி வெளியானது. இக்கவி இரண்டாம் முறையையும் அவ்விக்கிரஹத்தின் வயிற்றிலிருந்து வெளியானதைக் கேட்டவுடன் விக்கிரஹங்களைவிட்டு நபி அவர்களைத் தேடிக்கொண்டு புறப்பட்டேன். இதற்கிடையில் ஹிஜாஸ் தேசத்திலிருந்து வியாபாரத்திற்காக வந்திருந்த ஒரு காபிலாவை சந்தித்து அக்கூட்டத்தாரின் தலைவரைப்பற்றி விசாரித்தேன். அதுபொழுது அவர்கள் "எங்கள்தேசத்தில் அஹ்மத் (ஸல்.) என்னும் பெயருள்ள ஒருவர் ஜனனமாயிருக்கின்றார். அவர் தன்னை ஆண்டவனின் ரசூலென்றும் நபியென்றும் கூறிக்கொள்ளுகின்றார்" எனச் சொல்லியதைக்கேட்டு உடனே அங்கிருந்து நேராக

மக்காவிற்குக் புறப்பட்டு உலகரெட்சகர் (ஸல்.) அவர்களது சன்னிதானஞ் சென்றவுடன் என்னை அறியாது தூய்மைவாய்ந்த புரிசுத்த கலிமாவானது என் வாயிலிருந்து வெளிப்பட ஆரம்பித்தது. அதனல்நான் இஸ்லாமிய பந்தத்தில் சேர்ந்துவிட்டேன். உடனே எம்பிரான் (ஸல்.) அவர்களும் எனக்காகப்பிரார்த்தனை புரிந்தார்கள் என மாஜின தாய் கூறியதாக பைஹகீ ரிவாயத்துச் செய்திருக்கின்றூர்கள்.

நான்காவது சாக்ஷியம்

எம்பிரான் (ஸல்) அவர்கள் வெளியான செய்தி முதன் முதல் மதினாவில் பரவியதற்குக் காரணங்களைக் குறிப்பிடுங்கால் மதினாவில் ஒரு பெண் இருந்ததாகவும் அவள்மீது ஒருஜின் மோகங்கொண்டு ஒவ்வொரு இரவிலும் ஒரு பறவையின் ரூபத்தில் அவளிடம் வந்துகொண்டிருந்ததாகவும் பிறகு துயர்படியாக பலநாட்கள் வராமலிருந்து திடீரென ஒருநாள் பக்ஷியின் ரூபத்தில்வந்து சுவற்றின் மீது உட்காருவதைப் பார்த்து என் அன்புக்குறிய அண்ணலே! இத்தனைநாள் இங்கு வராத்ததின் காரணம் யாதாகு" மென வினவியதற்கு, இனி நான் உன்னிடம் வரமாட்டேன் கடைசி முறையாக உம்மிடம் சொல்லிக்கொண்டு போவதற்காகத்தான் வந்திருக்கின்றேன் இனி என் வரவை எதிர்பார்க்க வேண்டாம் மக்காவில் இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றூர்கள் அவர்கள் மார்க்கத்தில் இவைகளெல்லாம் கடுமையாக விலக்கப்பட்டிருக்கிறது எனக்கூறியதாக இமாம் அஹ்மத் (ரஹ்) ஜாபிர்பின் அப்துல்லாஹ் அவர்களைத் தொட்டும், அபூநுஐம் அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி.) அவர்களைத்தொட்டும், ஹாக்கிம் அவர்கள் இமாம்ஜைனுல் ஆபிதீன் (ரலி.) அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கின்றூர்கள்.

ஐந்தாவது சாக்ஷியம்

அபூநுஐம் அவர்கள், அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்கின்றூர்கள். அதாவது:—நாங்கள் ஒருதடவை ஷாம்தேயத்தில் சுற்றுப்பிரயாணஞ்செய்து வருங்காலை ஒருநாள் திடுகூறுக குறிசொல்லும் ஒரு பெண்ணைப்பார்த்தோம். அவள் குறிபார்க்கும் தன்மையில் மிக சிரேஷ்டமானவளென்னும் பிரஸ்தாபம் மிதமிஞ்சி ஏற்பட்டுப்போயிருந்ததால் அவளிடம்சென்று எங்கள் பிரயாணத்தின் முடிவு யாதாகுமெனக் கூறும்படிக்கேட்டோம். உடனே அவள் கூறியதாவது இனி வருங்கால நிகட்சிகளைப்பற்றி நான் ஒன்றும் கூற முடியாது; என்னிடம் வந்து எனக்கு எதிர்கால நிகட்சிகளைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்த ஜின்னனது ஒருநாள் என்னிடம் வந்து "முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் வெளியில்வந்து விட்டார்கள். இதற்கு பின்எந்த சக்தியும் பிரயோசனமளிக்காது எனச் சொல்லப்போய் சில நாட்களாய் விட்டன. அதற்குப்பின் அது திரும்பவந்ததே கிடையாது என்பதே.

ஆறுவது சாக்ஷியம்

இப்னுஷாஹீன் முதலிய முஹத்தீன்கள் துபாப் இப்னுல் ஹாரிது அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கின்றூர்கள். அதாவது:—முற்காலத்தில் எனக்கு ஜின்களுடன் சினேக மிருந்தது அவைகள் எதிர்கால நிகக்ஷிகளைப்பற்றி என்க்கு அறிவிப்பதுண்டு. இந்நிலைமையில் ஒரு ஜின் என்னிடம் வந்தது. அதனிடத்தில் முந்திய வழக்கம்போல் மறைவுதலான விஷயங்களைப்பற்றி வினவியதற்கு அது மிக்க கைசேதத்தையும் வருத்தத்தையும் வெளியாக்கி துபாபே! பேராச்சரியமான ஒரு விஷயம் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது முஹம்மத் (ஸல்.) அவர்கள் வேதத்துடன் அனுப்பப்பட்டிருக்கின்றூர்கள். அவர்கள் மக்காவில் மானிடர்களை நேர்வழியின் பக்கல் அழைக்கின்றூர்கள் எனக் கூறியது. இதைக்கேட்டு பெரும் ஆச்சரியத்தோடு நான் ஒன்று கேட்க நீ ஒன்று பதில் சொல்கின்றூயே என வினவினேன். அதற்கு நல்லது, கூடிய சீக்கிரம் விஷயத்தை அறிந்துகொள்வீரெனக் கூறிச் சென்றுவிட்டது. இதற்குக் கொஞ்ச காலத்திற்கெல்லாம் அரப் தேச முழுவதிலும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் செய்தி வெளியாகி மென்மேலும் பரவ ஆரம்பித்துவிட்டது.

ஏழாவது சாக்ஷியம்

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு நாள் ஒரு மஜ்லிசில் உட்கார்ந்திருக்குங்கால் திடீரென்று ஒருமனிதன் உட்சென்றூர். ஹஸ்ரத் அவர்கள் அன்னவரை நோக்கி "நீர் குறி

சொல்பவராக யிருக்குமென்றும் உம்மோடு ஜின்கள் சம்மந்தம் வைத்திருந்ததென்றும் எனக்குப் புலனுகின்றதென்று பாரூக் (ரலி) அவர்கள் கூறவே தாங்கள் உண்மை சொல்கின்றீர்கள் என அம்மனிதர் கூறினர். இது கேட்டு உமர்பாரூக் (ரலி) அவர்கள் நல்லது இதுபொழும் ஜின்களுடன் சந்திப்பு ஏற்படுகிறதாவெனக் கேட்டதற்கு, இல்லை இஸ்லாத்தின் சூரியன் கிளம்புவதற்கு சற்றுமுன்சகல ஜின்களும் இனி வரமாட்டோமென்பதை அறிவித்துச் சென்றுவிட்டதென அம்மனிதர் கூறியதாக அபூநாஈம் அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் அதேமஜ்லிஸில் உட்கார்ந்திருந்த மற்றவரும் தமக்கு நிகழ்ந்த ஒரு சம்பத்தைக் குறிப்பிட்டு ஒருநாள் தாம் காட்டில் தன்னந் தனியே நடந்து செல்லுங்கால் தமக்கு முன்பின்னும் வலது இடது புறமும் யாருமில்லாத நிலைமையில் திடுகூறாக தமக்கு முன் ஒரு ஒட்டக சவாரி தோன்றி உயர்ந்த தொனியில் யாமுஹம்மத்! யாஅஹ்மத்! தங்களுக்குக்கொடுப்பதாக வாக்களித்திருந்ததைக் கொடுத்துவிட்டான் எனக் கூறிச் சென்றுவிட்டார் எனக் குறிப்பிட்டார்.

எட்டாவது சாக்ஷியம்

ஒருநாள் ஒரு ஜின்னனது அபூகுபைஸ் என்னும் மலையின் சிகரத்தின்மீதிருந்து கொண்டு முஸ்லிம்களுக்கு விரோதமாக சில கவிகள் பாடிற்று. அதில் முஸ்லிம்களைக் கொல்லுங்கள்; அவர்களை தேச பிரஷ்டம் செய்துவிடுங்கள்; விக்கிரஹ ஆராதனையை ஒருக்காலும் விடாதீர்கள் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. இதுகேட்டு குப்பார்கள் சந்தோஷமடைந்து முஸ்லிம்களை நோக்கி உங்களை தேச பிரஷ்டம் செய்துவிடும்படியும் கொல்லும்படியும் அசரீரி வாக்கு ஏற்படுகிறது பாருங்கள் எனப் பரிகாசஞ் செய்தனர். முஸ்லிம்கள் இதுகேட்டு துக்கப்பட்டவர்களாக நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடஞ் சென்று நடைபெற்ற விஷயங்கள் யாவற்றையும் தெரிவித்தார்கள். அதற்கு எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் மனசோர் வடையாதீர்கள். மலையின்மீதிருந்து சப்தமிட்டது முஸ்யிர் என்னும் ஷைத்தானகும். கூடிய சீக்கிரம் ஆண்டவன் அதற்குத் தக்க தண்டனை கொடுப்பான் அது விஷயத்தைத் தெரிந்து கொள்வீர்களெனத் தெரிவித்தார்கள். இச்சம்பவம் நிகழ்ந்த மூன்றுவது நாள் "இன்றைய தினம் "ஸம்ஜஹ்" என்னும் பலம் பொருந்திய தேவதையொன்று என்னிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு முஸ்யிரை கொன்றுவிடுவதற்கும் என்னிடம் அனுமதி பெற்றுச் சென்றிருக்கின்றது. ஆதலின் அஃது இன்று கொல்லப்பட்டுப் போம் என எம்பெருமானர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள். அவ்வாறே அன்று மலையிலிருந்து முஸ்யிர் கொல்லப்பட்டுப் போய் விட்டதென்னும் சந்தோஷச் செய்தியை ஸம்ஜஹ் மூலம் கேட்டு யாவரும் ஆனந்தமடைந்தோம் என மக்காவின் சரித்திரத்தில் பாக்கிஹி ஆமிர்பின் அபீரபீஆவைத்தொட்டும், அபூநாஈப் இப்னுஅப்பாஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் அநேக முஹத்திதீன்கள் அப்துற்றஹ்மானிப்னு அவ்ப் முதலிய சஹாபாக்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள்.

ஒன்பதாவது சாக்ஷியம்

முற்காலத்தில் அராபியர்களுக்குள் ஏதாகிலுமொரு விஷயமாக தர்க்கம் தகராறு ஏற்பட்டு விடுமாயின் அதனைத் தீர்த்துக்கொள்வதற்காக விக்கிரஹங்களுக்கு முன் வந்து தங்களுக்குள் நிகழ்ந்தவைகளைக் கூறிவிடுவர்; பிறகு அவ்விக்கிரங்களின் வயிற்றிலிருந்து யாருக்கு ஜாதமாக சப்தம் வெளி வருகின்றதோ அதன்படி நடந்துகொள்வது அவர்களின் வழக்கத்திலிருந்து வந்தது. அத்தன்மைபோல் ஒரு இரவு விக்கிரங்களுக்குப் பலி கொடுத்துவிட்டு ஒரு சச்சரவைத் தீர்த்துக் கொள்வதற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்குங் காலை திடுகூறாக அவ்விக்கிரஹத்தின் வயற்றிலிருந்து "மானிடர்காள்! விக்கிரஹங்களை உங்களுக்கு அதிகாரியாகவும், உங்களின் வேலை காரியாதிகளை முடித்துத் தருபவையாகவும் நினைத்துக் கொண்டிருப்பதின் மடத்தனத்தை என்னவென்று கூறுவது பாருங்கள். இதுபொழுது சகல படைப்புகளுக்குத் தலைவராகவும் சகல அதிகாரியைப் பார்க்கினும் நீதிவானகவுமுள்ள ஒரு ரஸூல் வெளியாகி இஸ்லாமென்னும் ஒளியைப் பரத்திவருவதுடன் மானிடர்கள் துற்செயல், பாவமானகாரியம் முதலியவைகளில் பிரவேசிக்காமல் விலக்கிக்கொண்டிருக்கின்றார்" என்னும் சப்தம் வெளிப்பட்டது.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு ...	,, 4	0	0
தனிப் பிரதி ...	,, 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதார்ராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T., மதராஸ்.

" யவ்முந்நபி "

நபீ அவர்கள் பிறந்த தினக்கோண்டாட்டம்.

உலக ரெட்சகர் நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனித்த நந்நாள் சமீபித்து வருகின்றது. ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு வகுப்பினரும் தத்தம் தலைவர்கள் பிறந்த தினத்தை பல்வேறு விதமாகக் கொண்டாடிவருகின்றனர். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் உலகத்தினர் யாவருக்கும் அரும் போதகாசிரியராக விளங்கினார்கள். அவர்களின் நற்குணங்களையும் போதனைகளையும் சர்வ உலகத்திற்கும் அறிவிக்க வேண்டியது மிக மிக அவசியமானதாக இருக்கின்றது. எவ்வளவு மகுத்துவங்களும் மகோன்னதங்களும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களில் அமைத்திருந்ததோ அவைகள் யாவையும் மன்பதைகள்தெரிந்துகொள்ளும்படி செய்துவிட வேண்டியது மிகமிக ஆவசியமானதாகும், உலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் நன்னடக்கைப் பத்திரங்கள் பிரலாபிக்கும்படி செய்ய வேண்டும். இஸ்லாம் இயற்கைமதம்; இஸ்லாம் யாவருக்கும் ஜெயமளிக்கும் மதம்; இஸ்லாம் உலகத்தில் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டும் மதம்; இஸ்லாம் எம்மக்களையும் தம் மக்களாக்கிக் கொள்ளும் மதம் என்பதை உலகத்தின்கண் வதியும் சகலருக்கும் எடுத்துக் காட்டிவிடவேண்டும். இவ்வுயரிய சேவைக்காக "யவ்முந்நபீ" நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பிறந்த நாள் மிகவும் உரித்தான நன்னாளாகும். இம்மாசூழிமை பொருந்திய திருநாள் வரும் ரபீஉல் அவ்வல்மீ 12-ம் தேதி (17-7-32) ஆகும்.

அத்திருநாளை மேற் குறிப்பிட்ட கைங்கரியத்திற்காக முஸ்லிம்கள் ஒதுக்கிவைக்க வேண்டும்; சிற்றூர்முதல் பட்டணங்கள் வரையிலுள்ள ஒவ்வொரு இடங்களிலும் அன்றையதினம் மகாநாடுகள் கூட்டி முஸ்லிமல்லாதாரும் அங்குவந்து சேரும்படி செய்யவேண்டும். அத்திருநாளைக் கென்றே தயாரிக்கப்பட்டிருக்கும் "ஸீரத்" பிரசங்கத்தை வாங்கி பொதுமக்களிடையே ஏராளமாய் வினியோகிக்க வேண்டும். எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் திருத்தூதை உலகத்தார் யாவரும் அறிந்துகொள்வதற்கு இதுவே தக்கமுறையாகும் மேலும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் இறுதி நபியாகயிருக்கின்றார்கள்; அவர்களுக்குப்பின் எவ்வித நபியுங் கிடையாது; அவர்கள்தான் சர்வத்ராளுக்கும் திருதூதராவார்கள். இதற்கு மாறாக அவர்கட்குப்பின் நபி வரமுடியுமென்று சில மூட மாக்கள் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களை அகற்றவேண்டும்.

சென்ற மூன்றாண்டுகளாக லாகூர் "அகில உலகசீரத்" கமிட்டியார் இவ்வுத்தம கைங்கரியத்திலீடுபட்டு எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் ஸீரத்தென்னும் நன்னடக்கைகளை உலகமெங்கணும் பரத்த முயற்சித்து வெற்றி பெற்றுவருவதை உலகம் நன்கறியும் இத்தமிழ் நாட்டில் இம் மாபெரும் சேவையை உங்கள் " ஹிபாஜத்துல் இஸ்லாம் " சங்கம் ஏற்றுத் தொண்டு புரிந்து வருவது யாவருமறிந்ததே. அவ்வாறே இவ்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் " ஸீரத் " பிரசங்கத்தையும் தமிழில் மொழிபெயர்க்க வழக்கம் போல் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சென்ற ஆண்டில் லாகூர் ஸீரத்கமிட்டியார் ஸீரத் பிரசங்கத்தை அனுப்புவதில் தாமிதமேற் பட்டுவிட்டதால் பல நண்பர்களின் வேண்டுகோளுக்கு முற்கூட்டியே அனுப்பிக்கொடுக்க முடியாதுபோனதற்கு மிக வருந்துகின்றோம் இவ்வாண்டில் முன் ஜாக்கிரதையாக வேலைகள் நடைபெற்று வருவதால் அன்பர்கள் முன்னதாகவே ஏராளமான பிரதிநிதிகளுக்கு ஆடர் செய்து பெற்று வினியோகிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சன்மார்க்கத்தை உலகமுழுதும் பரப்புவதற்கு பேரவாக்கொண்டுள்ள கனவான்கள் இதற்கு நன்கொடை அளித்து வருகின்றனரென்பது யாவருமறிந்ததே. இதன் உதவியைக்கொண்டு பிரசுரங்களை வாங்கி வழங்கமுடியாத இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அவ்வாறே இவ்வாண்டிலும் நன்கொடை அளித்து உதவிபுரியுமாறு வேண்டிக்கொள்கிறோம். பிரதிகள் வேண்டுவோர் முன்பாகவே ஆடர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படிக் கோருகிறோம் 100 பிரதிகள் வாங்குவோரின் பெயர்களை டைடல்பேஜில் பிரசுரித்தனுப்பப்படும். அன்பர்கள் முன்பாகவே ஆடர் செய்யுமாறு கோருகிறோம். கிரயம் 1000 பிரதிகள் ரூ. 30—0—0, 100-க்கு ரூ. 3—8—0.

காரியதரிசிகள், ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்,

48, அங்கப்பன் தெரு, சென்னை.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.